விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (07.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

## சென்னைப் போட்டியில் இலங்கை வீரர்கள் இல்லை

(சென்னை)

சென்னையில் நேற்று நடை பெற்ற ஐ.பி.எல். போட்டியில்

PEPSI INDIAN PREMIER LEAGUE

இலங்கை வீரர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. இந்திய பிரிமியர் போட்டிகளில் நேற்று சென்னையில்நடைபெற்றபோட்டியில்சென்னை சுப்பர்கிங்ஸ்அணியும்மும்பை இந்தியன்ஸ் (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலையீடுகள் எதுவும் கிடையாது

(கொழும்பு)

அரசியல் தலையீடுகள் எதுவும் கிடையாது என சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

முக்கியஸ்தர்கள் தொடர்பான வழக்குகளில் பிணை வழங்குதல், வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் ஆதாரங் (23ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் பிரச்சினைகளை
# காங்கிரஸ் கட்சி புரிந்து கொண்டது

## ராகுல் காந்தி தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக மக்களின் உணர்வுகளை காங்கிரஸ் கட்சி முழுமையாகப் புரிந்து கொண்டிருப்பதாகக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சித்திரவதை அச்சம்

## மனிதவுரிமை கண்காணிப்பகம் கவலை

(கொழும்பு)

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பக் கூடாது என ஐக்கிய அரபு ராச்சியத்திடம் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

19 இலங்கைபுகலிடக்கோரிக்கையாளர்களை ஐக்கிய அரபு ராச்சியம் திருப்பி அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டால் சித்திரவதைக்குட்படுத்தக் கூடும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த 19 இலங்கையர்களையும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் புகலிடக் கோரிக்கையாளர்கள் என அங்கீகரித்துள்ள நிலையில் ஐக்கிய அரபு ராச்சிய அதிகாரிகள், குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த (23ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தூதுவர் யார்? இந்தியா மந்திராலோசனை

(புதுடில்லி)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா அடுத்த மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசியாவுக்கான செயலாளராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அப்பதவிக்கு யாரை நியமிக்கலாம் என இந்திய வெளிவிவகார அமைச்சு ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்காசியாவுக்கான செயலாளராக தற்போது இருக்கும் சஞ்சய் சிங் இம் மாதத்துடன் ஓய்வுபெறவுள்ள நிலையில் அப்பதவியில் அசோக் காந்தாவை நியமிப்பதற்கு அமைச்சரவை நியமனக் குழுவிடம் பரிந்துரைத்துள்ளது.

இந் நிலையில் இலங்கைகான புதிய தூதுவராக யாரை நியமிக்கலாம் (23ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் படையின் மனிதவுரிமை மீறல்களை பட்டியலிடத் தயாராகிறது இலங்கை அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் இந்தியப்படையினர் நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் அவர்களால் மேற் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் பட்டியல் ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது மேற் கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற் றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து நம்பகமான - சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ள நிலையில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையில் இந்திய படையினர் நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் அவர்களால் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பில் கணக்கெடுப் (23ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த பாக். - இலங்கை இணக்கம்



(கொழும்பு)

இலங்கையும் பாகிஸ்தானும் தமக்கு இடையிலான பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இணக்கம் கண்டுள்ளன. பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் ஜலீல் அப்பாஸ் ஜிலா (23ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு உத்தரவிட ஜனாதிபதி தயக்கம்



(கொழும்பு)

மாத்தளையில் கண்டு பிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி தொடர்பில் சுயாதீனமான விசாரணையை (23ஆம் பக்கம் பார்க்க)

# சிறுமியை கடத்த எடுத்த முயற்சி பொதுமக்களால் முறியடிப்பு

## யாழ். நகரில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில்நான்குவயதுப் பாலகி ஒருவர் பலர் முன்னிலையில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

எனினும் கடத்தல் காரரிடமிருந்து அவர் மீட்கப்பட்டதுடன் அவரும் கைது செய்யப்பட்டார்.

நேற்று மதியம் 1.15 மணியளவில் யாழ்.பஸ் நிலையத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பில் வசித்து வரும் குடும்பம் ஒன்று யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேசத்திலுள்ள தமது உறவினர் ஒருவரின் (24ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் தரும் சித்திரை புத்தாண்டு விசேட தள்ளுபடிகள்

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு முறைகள்

- கோடை காலத்தை தணிப்பதற்கு Singer, Whirlpool A.C களுக்கு 15% வரை விலைக்கழிவுகள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு முறைகள்
- Air Coolers மற்றும் மின்விசிறிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்
- குளிர்சாதன பெட்டிகளுக்கு விசேட விலைக்கழிவு மற்றும் வட்டி இன்றிய கொடுப்பனவு முறை
- தொலைக்காட்சி பெட்டிகளுக்கு 10 % வரை விலைக்கழிவு, வட்டி இன்றிய கொடுப்பனவு முறைகள்
- சலவை இயந்திரங்களுக்கு 4 வருட உத்தரவாதத்துடன் இலவச அன்பளிப்புப் பொருட்கள்
- 3000 ரூபாவிலிருந்து இரட்டை சிம் வசதியுள்ள HUAWEI கையடக்க தொலைபேசிகள்

1ம் பரிசு ரூபா 1 கோடி

மேலும் புத்தாண்டு காலத்தில் வெற்றி கொள்ள ரூபா 2 கோடி பணப்பரிசுகள்

10 பேருக்கு தலா 100,000 ரூபா பரிசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சாவகச்சேரியில் விபத்து; பெற்றோர் படுகாயம்!

## தாயின் அணைப்பிலிருந்த குழந்தை தப்பியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மடத்துப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-கனரக வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன், மனைவி ஆகிய இருவரும் படுகாயமடைந்ததுடன்;அவர்களின் ஒரு வயது குழந்தை எவ்வித காயமும் இன்றி பாதுகாக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடந்த இவ்விபத்தில் உசன் மிருசுவிலைச் சேர்ந்த விக்டர் ஜெயக்குமார் (வயது 34), ஜெயக்குமார் யூலி டயானி ஆகிய தம்பதியரே பலத்த காயமடைந்துள் ளனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது;

யாழ்.-கண்டி வீதி வழியாக மிருசுவில் உசன் நோக்கி தமது ஒரு வயது குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த குடும்பத்தினர் மீது யாழ்ப்பாணம் நோக்கி வந்த கனரக வாகனம் வீதியில் தவறான பக்கமாக வந்து நேருக்கு நேர் மோதித்தள்ளியது.

இதன் காரணமாக தூக்கி வீசப்பட்ட குறித்த இருவரும் எலும்பு முறிவுகளோடு பலத்த காயமடைந்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, தாயின் அரவணைப்பில் இருந்த இவர்களின் ஒரு வயதுக் குழந்தை எவ்வித காயமும் இன்றிக் காப்பாற்றப்பட்டது.

படுகாயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைககளை மேற்கொண்டதுடன் கனரக வாகன சாரதியைக் கைது செய்து அவரது வாகனத்தையும்எடுத்துச்சென்றுள்ளனர். (எ-5,29)

## கிரிக்கெட் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஏபி விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிகெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் காமல் போய்ஸ் அணியும் மோதவுள்ளன.(எ-11)

AB SPORTS CLUB KOKUVIL

### பரிசுத்த ஆவியின் செபம்

எனக்கு ஒளியாய் இருந்து நான் உன்னத நிலையை அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியானவரே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய அருட்கொடையின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தவரை மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்நாளில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையானவரே இச்சிறிய செபத்தின் மூலம் நான் உமக்கு நன்றி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஆமென், ஆண்டவரின் அடியாள்.

### மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

06.04.2013 முதல் 11.04.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

### யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

**சென்னையில் ஒரு நாள்**

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

வங்கியியல் கற்கை நெறி CBF தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**077 3586563** (2332)

### வாடகைக்கு கொடுக்கப்படும்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் பிரதான வீதியில் 45அடி நீளம் 27அடி அகலமுடைய கட்டடம்,தனியார் வங்கிகள், வியாபார நிலையங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 6030831 (2333)

### வாடகைக்கு கொடுக்கப்படும்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் பிரதான வீதியில் 45அடி நீளம் 12அடி அகலமுடைய கட்டடம், தனியார் வங்கிகள், வியாபார நிலையங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 6030831 (2333)

### புது வருடப் பிறப்பை முன்னிட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் விசா ஆலோசனை வாரம்

07.04.2013 - 14.04.2013

★ கனடாவில்,
அமெரிக்காவில் படிக்க, உழைக்க
மிகமிகக் குறைந்த கட்டணத்தில்
சட்டரீதியான விசா ஆலோசனை

★ நியூசிலாந்து சென்று படிக்க
IELTS தேவையில்லை.
அரைவாசிக் கட்டணச் சலுகை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



021 221 9016, 021 568 9090

ஏழு நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

(சி-2897)

### பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

### - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

APIRAL - SEPTEMBER 2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(C-2895) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2013

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசானும் மணி விழா நாயகனுமாகிய பல்துறை வல்லோன்

**கலாநிதி த.கலாமணி**

சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்கள் தம் வாழ்வில் சகல நலன்களும் பெற்று இன்னும் பல ஆண்டுகள் அவர்தம் ஆசிரியப் பணியும் கலைப் பணியும் தொடர நம் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர் :
முதுகல்விமாணி மாணவர்கள்
(அணி - IX)
யாழ்.பல்கலைக்கழகம்

### புறொயிலர் கோழிக்குஞ்சு விநியோகம்

நியூ பேனார்ட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்துபெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-

செல்வறெட்ணம்
70/11, நச்சுமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
0778448295, 0776176370 (2316)

### வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலுக்கு அண்மையாக K.K.S வீதியில் இருந்து 350 யார் தூரத்தில் பிரதேச செயலகம் பொலிஸ் நிலையம் வைத்தியசாலை ஆகியவற்றிக்கு அருகில் 7 பரப்பு காணிக்குள் அமைந்துள்ள நவீன வசதிகளுடன் உடன் குடியிருக்க உகந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 7247868 (2318)

### விற்பனைக்கு

கோப்பாய் கிளுவானை ஒழுங்கையில்
(வெள்ளெருவைப்பிள்ளையார் கோயிலடி)
7 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குள்ளது

தொடர்பு கொள்ளவும்

**0771 125 349 / 0775 953 196**

### வீடு விற்பனை

நாவற்குளிச்சந்தி A9 வீதிக்கு அருகாமையில் 1¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:- P.S.ஆனந்

T.P. : 078 3720535 (2334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 வீதமானோர் உயர்தரத்திற்கு தகுதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றியோரில் 64 வீதமான மாணவர்கள் உயர்தரத்தில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஜயந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது அதன் முன்னைய வருடத்தினை விட 4வீதம் அதிகமெனவும் ஜயந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பரீட்சைக்கு தோற்றியோரில் 73.2 வீதமானோரும் குருநாகல் மற்றும் காலியில் முறையே 68.3 மற்றும் 68.19 வீதமானோரும் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இம்முறை 4ஆயிரத்து 500 மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றுள்ளனர். கடந்த வருடத்தில் 3ஆயிரத்து 900 பேர் மட்டுமே 9 ஏ சித்திகளை பெற்றிருந்தனர்.

இதேபோல் பரீட்சையில் தோல்வி அடைந்தோரின் வீதமும் 2011 ஆம் ஆண்டில் 4.7 இலிருந்து 4.1 ஆக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# இலங்கையருக்கு ஃபெலோ விருது

(கொழும்பு)

அமெரிக்க தர நிர்ணய நிபுணர் சங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற ஃபெலோ விருதுக்காக முதல் முறையாக இம்முறை இலங்கையர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைய குறித்த விருது இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி லலித் செனவீரவுக்கே வழங்கப்படவுள்ளது.

அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2013 ஆம் ஆண்டிற்கான உலக தர நிர்ணய மாநாட்டின் போது லலித் செனவீர இந்த விருதை பெறவுள்ளார்.

அமெரிக்க தர நிர்ணய சங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படுகின்ற ஃபெலோ விருது உலகத்திலுள்ள தரநிர்ணய துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி லலித் செனவீர இதற்கு முன்னர் தரநிர்ணய ஐரோப்பிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# கடற்றொழிலை வளப்படுத்த கடற்தாவரம் வளர்ப்புத் திட்டம்

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கடற்தாவர வளர்ப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் கண்டல் தாவரங்கள், கடற்பாசிகள் வளர்த்தல் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கும் திட்டம் யாழ். மாவட்ட செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மீனினங்கள் பெருகுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படுவதுடன் கடற்தாவரங்கள் ஏற்றுமதி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத்திட்டத்தில் உள்வாங்கப்படுகின்ற கடற்றொழிலாளர்களுக்கு கடற்தாவர செய்கைக்காக சுமார் 36 ஆயிரம் ரூபா வரை 3 கட்டங்களில் கடன் வசதிகளும் வழங்கப்படவுள்ளன. (செ-2)

# வீரகத்தி பிள்ளையார் திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழா இடம் பெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 8.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும் 9.30 மணிக்கு தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப்பூசையும் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை விஜயசித்திரை வருடப்பிறப்பு விசேட பூசை இரவு 11.58 மணிக்கு இடம்பெறவுள்ளதெனவும் கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. (செ-5)

# வாரம் ஒரு தகவல்

## தான தர்மம்

பெரியவர் ஒருவர் ஓர் ஆலயத்தை கட்டிமுடித்தார்.

மறுநாள் அவ் ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காக அதற்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் பட்டியலிட்டார்.

இதன்போது அவரிற்கு பெரிய வாழைக்குலை தேவையாக இருந்தது. எனவே வேலையாட்களை அழைத்து வேண்டிய பணத்தை கொடுத்து சிறந்த வாழைக்குலை ஒன்றை வாங்கி வா என்று அனுப்பி வைத்தார்.

வேலையாளும் அப்பெரியவர் கூறியவாறே சிறந்த குலை ஒன்றை தேடி வாங்கிக்கொண்டு வீடுநோக்கி திரும்பினார்.

அவர் திரும்பும் வழியில் குழந்தை ஒன்றின் அழுகுரல் கேட்டது. அதனையடுத்து அவர் அதன் குறிப்பிடம் நோக்கி புறப்பட்டார்.

ஒரு குடிசையொன்றினுள் குழந்தை ஒன்று பசியால் அழுது கொண்டிருந்தது.

அதைக்கண்ட அவ் வேலையாள் ஆலயத்திற்கென்று வாங்கிய வாலை குலையிலிருந்து ஒரு வாழைப்பழத்தை பிடுங்கி குழந்தைக்கு உண்ணக் கொடுத்தார்.

குழந்தையும் அழுவதை நிறுத்திக் கொண்டது.வேலையாளும் வாழைக்குலையுடன் வீடு வந்து சேர்ந்தார்.

மறுநாள் ஆலயத்தில் வழிபாடு நடைபெற்று கொண்டிருந்தது.

அந்த பெரிய மனிதர் ஆண்டவன் எதிரில் ஆடம்பரமாக நின்று கொண்டிருந்தார். அப்போது அவர் அடுக்கி வைக்கப்பட்ட பொருட்களை கவனித்தார்.

அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த வாழைப்பழங்கள் அழுகிப் போய் இருந்தன.

அதைக்கண்டதும் பதறிப் போன பெரியவர் ஏதோ தவறு நடத்து விட்டதாய் உணர்ந்து வேலையாளை அழைத்து என்ன நடந்தது. மரியாதையாக சொல்லிவிடு என்றார்.

வேலையாளும் நடந்தவற்றை விபரித்தான். அதை கேட்டதும் கோபம் கொண்ட பெரியவர் இறைவனுக்குரியதை எச்சில் படுத்திவிட்டாயே என்று வேலையாளைத் திட்டினார்.

பின்னர் ஆண்டவன் பக்கம் திரும்பி இறைவா... தெரியாமல் நடந்து விட்டது. எங்களை மன்னித்துக் கொள்... எங்கள் படையலை ஏற்றுக் கொள்! என்று வேண்டினார்.

இப்போது இறைவன், பக்தா! பதறாதே இவ்வாழைக்குலையில் எனக்கு பிடித்த பழம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அந்தப் பழம் நேற்றைய தினமே என்னிடம் வந்து சேர்ந்து விட்டது! என்று பதிலளித்தார்.

இப்போதுதான் அந்தப் பெரியவரிற்கு தானத்தின் தர்மம் புரிந்தது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

07.04.2013
(பங்குனி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.37 மணிவரை
சதயம் முன்னிரவு 8.35 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
பரமகுரு சுவாமி குருபூசை ,
பிரதோச விரதம்

**மேடம்** வருமானம் திருப்தி தரும், எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சக நண்பர்கள் சந்திப்புண்டு.

**இடபம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும் கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின முயற்சியை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள்.

**கடகம்** உதவுவதாகக் சொன்ன உறவினர் உங்களை விட்டு விலகலாம், வாழ்க்கை துணை வழியே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** சொந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், கனவுப் பலிதம் உண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி தரும், எதிரிகள் உதிரியாகும் நாள், நோய்கள் குணமடையும், திடீர் பயணங்கள் உண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்** சிவாயநம என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுபகாரிய செலவுகள் கூடும், நண்பர்கள் சந்திப்பால் நல்ல சம்பவங்கள் நடைபெறலாம்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், தேவையற்ற பிணக்குகள் சுமுகமாக முடியும்.

**மகரம்** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், சில விவாதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை நாடுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தூர தேசச் செய்தி ஆச்சரியப்பட வைக்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 120 | 120 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 90 | 80 | 120 | 120 |
| பூசணி | 50 | 30 | 50 | 60 |
| புடோல் | 40 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-140 | 80-120 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 60 |
| பயற்றங்காய் | 40 | 80 | 50 | 80 |
| லீக்ஸ் | 140 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 70 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 15-20 | 40 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் நிகழ்வில் ஐந்து பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய புதுவருட கொண்டாட்டத்தில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.


இதில் இரு இராணுவ சிப்பாய் உட்பட ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாரும் 512 ஆவது படைப்பிரிவினரும் இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டு விழா யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றைய நிகழ்வாக மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றன.

இதன்போது மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட ஓட்ட வீரர்கள் தண்ணீர் தாங்கி மற்றும் சைக்கிள்களுடன் மோதியதில் இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 512 ஆவது படைப்பிரிவினைச் சேர்ந்த இராணுவ சிப்பாயான சமிந்த குமார (வயது 30) என்ற இராணுவ வீரரும் நல்லூர் பகுதியினைச் சேர்ந்த எஸ்.தனுராஜ் (வயது 18) என்ற இளைஞரும் பண்டத்தரிப்பு பகுதியினைச் சேர்ந்தவர்களான இராசையா நீகன் (வயது 27), துரைராஜா ரஜீவ் (வயது 31) என்போரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-4)




# இந்திய மீனவர்கள் 26 பேர் காரைநகர் கடற்படையினால் கைது

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் 26 பேர் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கோசலவர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ் 26 மீனவர்கள் வந்திருந்த ஐந்து றோலர் மீன்பிடிப்படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் 5 றோலர் படகுகளில் 26 மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்த பின்னர் அங்கு விரைந்து அனைத்து மீனவர்களையும் கைது செய்ததோடு றோலர் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கடற்படையினரால் பிடிக்கப்பட்ட மீனவர்கள் 26 பேரும் தமிழ்நாடு காரைக்கால் எனும் இடத்தினை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட றோலர் படகுகள் ஐந்தும் 50 தொடக்கம் 60 அடி வரை நீளமானவை எனவும் காரைநகர் கடற்படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இம் மீனவர்கள் அனைவரும் இந்திய கடல் எல்லையினை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

இம்மீனவர்களினுடைய றோலர் படகுகள் ஐந்தும் காரைநகர் கடற்படையினரின் பாதுகாப்பில் காரைநகர் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

படகில் காணப்பட்ட மீன்பிடி உபகரணங்களான வலைகள், றோலர் உபகரணங்கள் என்பனவும் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மேலும் தற்போதைய காலப்பகுதி றோலர் மீன்பிடிக்கு சாதகமான காலப்பகுதி எனவும் இதனால் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நுழைவுகள் வடபகுதி கடற்பரப்பில் அடிக்கடி இடம்பெறும் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (செ-4)

# அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் மேபிள் தம்பையா மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பொதுக்கூட்டத்தில் பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (செ-5)

# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தினால் நடத்தப்படும் தேரடி செல்லப்பா சுவாமிகளின் 98 ஆவது வருடாந்த பங்குனி அச்சுவினி குருபூசை எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 8 மணிக்கு நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்குருபூசை நிகழ்வில் தேவாரம், திருவாசகம், பண்ணிசை என்பன இடம்பெற்று தொடர்ந்து நற்சிந்தனைப் பாடல்கள், பாராயணம் என்பன நடைபெறவுள்ளன.

குருபூசைகள் சுவாமிகளின் நினைவாலயத்திலும் தேரடியிலும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-5)


# மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானத்தின் மணவாளக்கோல விஞ்ஞாபனம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 7 மணிக்கு அஷ்டோத்தர கலச பூசையும் தொடர்ந்து 108 திரவியஹோமம், 108 திரவிய அபிஷேகம், 108 பாற்குட அபிஷேகம், 108 இளநீர் அபிஷேகம் என்பன இடம்பெற்று பிற்பகல் 5 மணிக்கு விசேட பூசையும் திருவூஞ்சல் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறவுள்ளன.

முதல் நாள் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்று தொடர்ந்து யாக பூசைகள் இடம்பெறவுள்ளன என தேவஸ்தான பரிபாலனசபை அறிவித்துள்ளது. (செ-5)




# குறும்பட தேர்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச மாவட்ட, மாகாண மட்டங்களில் நடத்தப்படும் சிறந்த குறும்படங்களுக்கான தேர்வுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் குறும்பட தயாரிப்பாளர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் என்.சிறிதேவி தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளும் குறும்படம் சமகாலத்தில் அடையாளம் காணப்படும் பண்பாட்டுப் பிறழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்கதாக அமைதல் வேண்டும்.

அக் குறும்படத்தின் திரைக்கதை ஆரம்பத்திலிருந்து திரைக்கதை முடியும் வரையான காலப்பகுதி 20 நிமிடங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்துடன் குறும்படத்தின் மூன்று பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்ப படிவங்களை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் பிரதேச, மாவட்ட கலாசார உத்தியோகத்தரிடமும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் சிபார்சு செய்யப்பட்டு பிரதேச செயலர் ஊடாக படைப்பாக்கங்கள் உறுதி செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச மட்ட போட்டிக்காக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட படைப்பாக்கங்களை போட்டிக்கு அனுப்பி வைக்க முடியும் என்பதோடு ஒப்படைக்கப்படும் குறும்படங்கள் மேற்குறித்த முடிவுத் திகதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)



வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட இன்று செடியை நடுவோம்; நாளை பயனைப் பெறுவோம் எனும் தொனிப் பொருளினாலான நிகழ்வு அண்மையில் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடைபெற்றது. இதன்போது வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பயன்தரு மரக்கன்றொன்றை மாணவிக்கு வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

# சந்நிதி முருகன் கும்பாபிஷேகம்

(தும்பளை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தின விழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதுடன் சகஸ்ர மஹா சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவானது காலை 7 மணிக்கு சங்குப் பூசையுடன் ஆரம்பமாகி காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 11 மணிக்கு சண்முக அர்ச்சனையும் நண்பகல் 12 மணிக்கு விசேட உற்சவமும் நடைபெறவுள்ளது. (செ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது

## கருணாநிதி மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

**கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தக்கூடாது என்று அதன் நடவடிக்கைக்குழுவின் நாடுகளின் தூதர்களை தி.மு.க. எம்.பிக்களும் டெசோ உறுப்பினர்களும் நேரில் சந்தித்து வலியுறுத்துவர் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் சென்னையில் நேற்றைய தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

சென்னையில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற தி.மு.க. தலைமைச் செயற்குழு அவசரக்கூட்டத்தில் இனப்படுகொலையை நடத்தி தமிழீழ மக்களையே அழித்தொழிக்க முயன்ற இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பது எவ்விதத்திலும் பொருத்தமானதோ ஏற்கக்கூடியதோ அல்ல. எனவே, அம்மாநாட்டை எக்காரணம் கொண்டும் அங்கு நடத்திடக்கூடாது என்று பொதுநலவாய தலைமையை இக்கழகச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்கூடாது என்ற கருத்தை தி.மு.கவும் டெசோ அமைப்பில் உள்ள ஏனைய இயக்கங்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. பல்வேறு தமிழ் அமைப்புக்களும் தமிழ் இன உணர்வாளர்களும் இதே கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

லண்டன் மாநகரில் எதிர்வரும் 26 ஆம் திகதி அமைச்சர்கள் சார்ந்த பொதுநலவாய நடவடிக்கைக்குழுவின் கூட்டம் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டு வருவதைப்பற்றி அந்தக்கூட்டத்தில் ஆழ்ந்து பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டுமென்று டெசோ அமைப்பின் சார்பில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சர்கள் சார்ந்த பொதுநலவாய நடவடிக்கைக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தூதர்களை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் டெசோ அமைப்பின் உறுப்பினர்களும் நேரில் சந்தித்து இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்கூடாது என்பதை விளக்கி வலியுறுத்துவார்கள் என்று கூறியுள்ளார். (செ-2)

# ஔவையார் விழா

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று ஔவையார் விழா கொண்டாடப்படவுள்ளது.

யாழில் ஔவையார் விழா கொண்டாடப்படும் தனித்துவமான ஒரு ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 35 மைல் தூர துவிச்சக்கரவண்டி ஓட்டம், ஆண்களுக்கான 10 மைல் தூர மரதன் ஓட்டம், பெண்களுக்கான 10 மைல் தூர துவிச்சக்கரவண்டி ஓட்டம் ஆகிய போட்டிகளும், சிறுவர் சிறுமியர்கள், பார்வையாளர்களுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை சிவலைப்பிட்டி முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (செ-5)

# இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம்

## இலங்கைக்கு அபாயம் இல்லை

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள இரியன் ஜெயா மாகாணத்தில் நேற்றுக் காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவின் எனரோடலியில் இருந்து 256 கிலோமீற்றர் கிழக்குப் பகுதியில் கடலுக்கு அடியில் 58 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டு தாக்கியது. இது ரிக்டர் அளவில் 7.4 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தின் போது குடியிருப்புக்களும் கட்டடங்களும் அதிர்ந்தன. மக்கள் பீதியுடன் வீட்டைவிட்டு வெளியேறி வீதிகளுக்கு ஓடிவந்தனர். சக்திவாய்ந்த நிலநடுக்கம் என்பதால் உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

இந்தோனேசியாவில் கடந்த 2004 ஆம் ஆண்டு 9.1 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி அலைகள் உருவானதால் இலங்கை மற்றும் இந்தியா உட்பட 13 நாடுகளைத் தாக்கி இலட்சக்கணக்கானோர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# கட்சிமாறும் அரசியல்வாதிகளின் பதவிகளை பறிக்கவேண்டும்

## கர்தினால் மெல்கம் ரஞ்சித் கருத்து

கட்சி மாறும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரசியல்வாதிகளின் பதவிகளை பறிக்கும் தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்காக அரசியல் யாப்பில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல்யாப்பு சீர்திருத்தம் தொடர்பிலான யோசனைகள் குறித்த பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் உரையாற்றும் போது கர்தினால் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். சகலருக்கும் நீதி கிடைக்கும் வகையில் இந்த அரசியல் யாப்பு அமையவேண்டும்.

அத்துடன் ஒரு கட்சியில் சபைகளுக்கு தெரிவாகி வேறொரு கட்சியில் இணைகின்றவர்களின் பதவிகள் இரத்துச் செய்யும் வகையில் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# சர்ஜன் சுவாமிகளின் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தின் 2ஆ வது குரு பீடாதிபதி ஸ்ரீமத் சர்ஜன் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.


வேதாந்த மடத்தின் எட்டாவது குருபீடா திபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்தரின் பண்ணிசைக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து 11 மணியளவில் அபிடேக ஆராதனைகளும் இடம்பெற்று அருளுரைகளும் இடம்பெறவுள்ளது. (செ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'6"<br>கி.பா: 17.25<br>தகைமை/தொழில்: A/L, கனடா PR<br>தொ.இ: B -1555 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'6"<br>கி.பா: 38.5, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>தொ.இ: G -1591 |
| பிறப்பு: 1972 றோ.க.<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 32<br>தகைமை/தொழில்: A/L, கூட்டுறவு பரிசோதகர் (ப.நோ.கூ.ச)<br>தொ.இ: B -1556 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'3"<br>கி.பா: 40<br>தகைமை/ தொழில்: BSc Micro Biology நியூற்றிசனிஸ்ம்<br>தொ.இ: G-1593 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 6'<br>கி.பா: 10.5<br>தகைமை/ தொழில்: BSc,MSc in Serveying Science நில அளவையாளர் (அரச)<br>தொ.இ: B -1558 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 17.75<br>தகைமை/ தொழில்: HNDM பகுதிநேர ஆங்கில ஆசிரியை<br>தொ.இ: G -1596 |
| பிறப்பு: 1985 றோ.க<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L கடற்றொழில்<br>தொ.இ: B -1562 | பிறப்பு: 1981 றோ.க<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: MSc in Computer Software Engineer , Network (UK work permit)<br>தொ.இ: G -1598 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



உபஹார இன்டர்நெட்
அரச சேவைக்காக
இந்த புதுவருட காலத்தில் அரச சேவையிலுள்ள மொபிடெல் உபஹார பாவனையாளர்களான உங்களுக்கு
5GB தரவுப் பொதி
டொங்கல் இலவசம்
மாதாந்தம் ரூ.299/- மட்டுமே
(அ/2888)

தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு
Sri Lanka Telecom Mobitel
வாடிக்கையாளர் சேவை இலக்கம்: 1717
அனைத்து கட்டணங்களும் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. நிபந்தனைகளுக்குட்பட்டது.
TRIAD 27918 TRC/M/Promo/12/26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### நெற்செய்கை அழிவினால்

# தற்கொலை மனநிலையில் விவசாயிகளின் வாழ்க்கை

### நட்டஈடு வழங்குமாறு சிறிதரன் எம்.பி. கோரிக்கை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் 2012-2013 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற் செய்கைகளில் அழிவுகளைச் சந்தித்த விவசாயிகளுக்கு இதுவரை எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படாமையால், அவர்கள் தற்கொலை செய்யும் மனோ நிலையில் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**



இதன் பிரகாரம் குறித்த ஆண்டுகளில் பெரும்போக நெற்செய்கையில் 27 ஆயிரத்து 851 ஏக்கர் வயல்நிலம் முழுவதுமாக அழிவடைந்துள்ள நிலையில் 8 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் எந்த விதமான நட்டஈடும் பெறாத நிலையில் தற்கொலை செய்து கொள்ளும் மனோநிலையில் இருக்கின்றனர்.

மாவட்டத்தில் நெற் செய்கையில் அழிவுகளை சந்தித்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க வலியுறுத்தி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு கடிதம் அனுப்பியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் குறித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

விடயம் தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

2012 ஆம் ஆண்டு 2013 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற்செய்கை சுமார் 56 ஆயிரத்து 193 ஏக்கர் நிலப்பரப்பில் 15 ஆயிரத்து 564 குடும்பங்களைச் சேர்ந்த மக்களால் மேற்கொள்ளப்பட்டது. இதில் 27 ஆயிரத்து 851 ஏக்கர் நெற்செய்கை முழுவதுமாக அழிக்கப்பட்டது. இதனால் 8 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மிகப் பாரதூரமான வாழ்வாதார நெரு க்கடியினை எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

மேலும் இந்த அழிவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அழிவு தொடர்பான கணிப்பீட்டின் படி 13 கோடியே 20 இலட்சத்து 12 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியிடப்பட்டுள்ளது.

இதேபோல் 2012 ஆம் ஆண்டு சிறுபோகத்தின்போதும் 3 ஆயிரத்து 906 ஏக்கர் நெற்செய்கை நிலம் முழுவதுமாக அழிந்து போனது. இதற்கும் இதுவரை எந்த விதமான நட்டஈடும் வழங்கப்படவில்லை.

இத்தனையும் மிக மோசமான யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தறப்பாள்களுடனும் தகரங்களுடனும் சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றே மேற்கொண்ட நிலையில் அவ்வளவும் முழுவதுமாக அழிவடைந்த நிலையில் அந்த மக்கள் எவ்வாறு வங்கிகளில் பெற்ற கடன்களை செலுத்த முடியும்? வங்கிக் கடன்களை செலுத்த முடியாத நிலையில் பலர் தாம் தற்கொலைசெய்யும் மனோநிலையில் இருப்பதாக கண்ணீரோடு மனந்திறந்து கூறுகிறார்கள்.

இத்தனை நடந்திருந்தும் இன்றுவரை மாவட்ட மட்டத்தில் அழிவடைந்த விவசாய நெற்செய்கை விபரம் முழுமையாக கணிப்பிடப்படவில்லை. அந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு இதுவரை அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை. அரசாங்க அதிபரை தொடர்புகொண்டு கேட்டால் 2012 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை அழிவுக்கான விபரங்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாக கூறுகிறார்.

எனவே, நட்டஈடு உடனடியாக வழங்க வலியுறுத்தி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கும் அரச அதிபருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். இனிமேலாவது மக்களுடைய துயரங்களை துடைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (செ-2)

## தமிழ் மொழித்தின போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியின் வலயமட்ட போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர்திருமதிஎஸ்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (செ-3-15)

## தகவல் தொழில்நுட்ப கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றமும் அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் சுற்றுலா விடுதியில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டைச் சார்ந்த நிறுவனங்களில் பங்கு பற்றும் இக்கண்காட்சி சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையினருக்கான தகவல் தொழில்நுட்ப பிரயோக தீர்வுகளை உள்ளடக்கியதாக இருப்பதோடு இக்கண் காட்சியில் முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், வர்த்தகத் துறையினர், அரச, தனியார் நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கண்காட்சி நிகழ்வுடன் சிறியமற்றும்நடுத்தரதொழிற்றுறையினருக்கான பயனுள்ள கருத்தரங்குகளும் இடம் பெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-5)

## மீனவர்களுக்கான மானியத்திற்கு விரைவில் இலத்திரனியல் அட்டை

மீனவர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படாது, எரிபொருள் மானிய கூப்பன் அட்டை விநியோகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி காரணமாகவே மானியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது, விரைவில் இலத்திரனியல் அட்டை அறிமுகம் செய்யப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளர். அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மீனவர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டுள்ளதாக சில வங்கு ரோத்து மீனவர் சங்கங்கள் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றன. கூப்பன் அட்டை விநியோகிப்பதில் ஏற்பட்ட மோசடியினாலேயே மார்ச் மாத எரிபொருள் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை தாமதமானது.மீன்பிடித் திணைக்களம் தலையிட்டு இது தொடர்பில் உரிய நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்துள்ளதால் மீண்டும் மானியக் கூப்பன் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக எரிபொருள் மானியம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வருடம் எரிபொருள் மானியம் வழங்க 3 ஆயிரத்து 615 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 2013 பெப்ரவரி வரை இதற்காக 328 மில்லியன் செலவிடப்பட்டது. மார்ச் மாத மானியத்தை ஏப்ரல் நடுப்பகுதி வரை மீனவர்களுக்கு வழங்கவுள்ளோம்.

சில மீனவர்கள் 4 அல்லது 5 படகுகளுக்காக எரிபொருள் மானியம் பெற்று ஒரு படகை மட்டுமே மீன் பிடிக்க அனுப்புகின்றனர். இந்த மோசடியைத் தடுப்பதற்காக இலத்திரனியல் அட்டை வழங்கும் முறையொன்றை விரைவில் ஆரம்பிக்க உள்ளோம். அதன் மூலம் இத்தகைய மோசடிகளை தடுக்க முடியும்.

எமது அரசாங்கம் போன்று வேறு எந்த அரசும் மீனவர்களுக்கு இத்தனை சேவைகள் செய்தது கிடையாது. இதனால் மீனவர்கள் எமது அரசு குறித்து நம்பிக்கை வைத்துள்ளனர் என்றார். (செ-2)

## சரத் கட்சியை பதிந்தது போல தன்னையும் வாக்காளராக்க வேண்டும்

### அமைச்சர் டலஸ் இப்படிக் கோரிக்கை

(கொழும்பு)

சரத்பொன்சேகா தனது கட்சியை பதிவு செய்தது போல தன்னையும் வாக்காளராக பதிவு செய்து கொள்ளுமாறு தாம் அவரிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக்கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அரசியல் கட்சியை ஆரம்பிக்கவும் கருத்துக்களை வெளியிடவும் அனைவருக்கும் உரிமைகள் உள்ளன. அது ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் குடியுரிமை இராணுவ நீதிமன்றத்தினால் பறிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் தன்னை வாக்காளராக பதிவு செய்து கொள்ளவோ தேர்தலில் போட்டியிடவோ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

## நூல்கள் அன்பளிப்பும் மாணவர்கள் கௌரவிப்பும்

(மல்லாவி)

பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டில் மல்லாவியில் உள்ள கிராமிய சுயதொழில் குழுக்களின் நூலகத்துக்குரிய நூல்கள் அன்பளிப்பும் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சிறப்பு சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகி இருப்பதாக இவ்வங்கியின் கனகராயன்குளம் கிளையின் முகாமையாளர் சி.சிவாசிவஞானம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதேச வங்கியின் தலைவி கேசாலா ஜெயவர்த்தனா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் இவ்வங்கியின் கண்டியில் உள்ள கிராமிய சுயதொழில் குழுவின் 50 அங்கத்தவர்கள் இங்குள்ள கிராமிய சுய தொழில் குழு அங்கத்தவர்களுடன் நட்புறவு பாராட்டுவதுடன் தமது வங்கி தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)

## ஹலால் எதிர்ப்பால் இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் குறைவடைவர்

### சுற்றுலா பயணி நிபுணர் கருத்து

(கொழும்பு)

உள்நாட்டு உற்பத்திகளிலிருந்து ஹலால் சான்று இலச்சினைகளை அகற்றும் நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் உலக முஸ்லிம் சுற்றுலா பயணிகளிடமிருந்து கிடைக்கும் கணிசமான வருவாயை இழக்கும் அபாயத்துக்கு இலங்கை முகம்கொடுத்துள்ளது என சிங்கப்பூரின் சுற்றுலா பயண நிபுணர் பஸல் பஹர்தீன் தெரிவித்தார்.

ஹலால் சான்றுப்படுத்தல் இலங்கையில் உணர்ச்சியோடு தொடர்பான பிரச்சினையாகிவிட்டது என நான் அறிந்து கொண்டுள்ளேன். இது மிகவும் துரதிர்ஷ்டமான விடயமாகும்.

சர்வதேசரீதியில் குறிப்பாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நாடுகள் முஸ்லிம் சுற்றுலா பயணிகளை கவர்வதற்கு மும்முரமாக போட்டியிடும் இந்த தருணத்தில் இப்பிரச்சினை ஏற்பட்டது துரதிர்ஷ்டமானதாகும் என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம் சுற்றுலா பயணிகள் உலகில் சுற்றுலா மீது ஆகவும் கூடுதலாக செலவளிக்கும் தனியொரு தொகுதியாக காணப்படுவதாலேயே இவ்வாறான கடும்போட்டி இன்று ஏற்பட்டுள்ளது.

எனவே, வர்த்தக இலாபம் கருதி பல நாடுகளும் முன்னிறுத்த முயன்று வருகின்றனர் என சிங்கப்பூரின் கி.றெசென்ற் கணிப்பு ஸ்தாபன நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி பஸல் பஹர்தீன் கூறினார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாச்ச் செய்தி



அச்சுவேலி வளலாய் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆலய வழிபாடுகளை நெறிப்படுத்தி பல நூல்களை நமக்குத் தந்த சிவ ஸ்ரீ குமாரசாமி குருக்களை நமக்கு தந்த இவ்வூரில் பல நிறைவான ஆலயங்களை கொண்ட வளலாய் கிராமத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு பல ஆண்டுகளாக விநாயக பெருமான் இங்கு எழுந்தருளியுள்ளார்.

இன்று 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இங்கும் நடைபெறுவது ஊருக்கும் ஆலயத்திற்கும் மக்களுக்கும் சிறப்பைத் தருவதாகும். விநாய வழிபாடு நம் சமயத்தின் தனித்துவமாகும்.

காரியம் ஆற்றுபவர்களும் இவரை வழிபாடு செய்து ஆற்றுவதே நம்சமய மரபாகும். தனது அடியை வழிபடுபவருடைய இடர்களை களைபவர் விநாயகப் பெருமான். இலகுவான முறையில் வழிபாடு ஆற்றுகின்ற பொழுது நம் சிந்தனையை தெளிவுபடுத்தி சித்தியையும் முத்தியையும் அருளுகின்றார். இக்கும்பாபிஷேகத்தை செய்யும் குருமார்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் நன்றி கலந்த வாழ்த்துக்கள். அனைவரும் கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*இரண்டாவது குருமஹாசந்நிதானம்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.*

## புதுப்பொலிவு பெற்றுள்ளது




வளலாய் பிள்ளையார் ஆலயத்தில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் இன்று (07.04.2013) மிகவும் சிறப்பாக நடைபெறுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். பிள்ளையார் வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. சைவ வழிபாட்டு மரபில் பிள்ளையாருக்கு முதன்மைச் சிறப்புண்டு. நீண்டகாலமாக இலங்கையில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் இவ்வாலயச் செயற்பாடுகள் நிறைவாகச் செய்ய முடியாமல் இருந்த போதும் இன்று பிள்ளையாரின் பெருங் கருணையினால் பெருஞ்சாந்தி எனப்படும் குட முழுக்கு விழா பெருவிழாவாக நடைபெறுகின்றது.

உள்ளூர் மற்றும் வெளியூரில் வாழும் அன்பர்களின் நிதியுதவி கொண்டு இவ்வாலயம் தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. இத்தெய்வீகப் பணியில் அல்லும் பகலும் ஈடுபட்ட அன்பர்கள்' அனைவரையும் உளமார வாழ்த்துவதுடன் எல்லோருக்கும் இன்பம் கிடைக்க வளலாய் பிள்ளையாரின் பொற்பாதங்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

*மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*


பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்
தலைவர் இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்

## செஞ்சொற் செல்வரின் ஆச்செய்தி



சைவமும் தமிழும் காத்து சான்றோர் வாழ்ந்த பூமி அச்சுவேலி. இத்திருப்பதியில் ஸ்ரீ வளலாய் பிள்ளையாரின் திருக்கோவில் புனருத்தாரண பணிகள் நிறைவு பெற்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன். எம் முன்னோர் தெய்வ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தம் வாழ்வை புனிதமாகப் பேணினார்கள். தத்தம் குலதெய்வங்களை நினைத்து அதிகாலையிலேயே வழிபாடு செய்து வாழ்ந்த பண்பாடு மறக்க முடியாது. வளலாய் பிள்ளையாரின் மீளா அடியவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்து கொடுத்த அன்பளிப்பினால் ஆலயம் புதுப் பொலிவு பெற்று பெருங் கோவிலாகக் காட்சியளிப்பது பாராட்டுக்குரியது. இத்திருப்பணியில் அயராது பாடுபட்ட அன்பர்கள், நன்றிக்குரியவர்கள் தெய்வ கைங்கரியங்களை நிறைவேற்றுவதற்கு தெய்வம் சிலரை உருவாக்குவது இயற்கை. ஆர்வத்துடன் ஆலயப் பணியில் அல்லும் பகலும் உழைத்தவர்களுக்கு சமூகம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. வாழ்வு தரும் வளலாய் பிள்ளையாரின் திருவருளால் எம்மண்ணில் நீதி நிலைத்திட பிரார்த்திக்கிறேன். அச்சுவேலியில் உதித்த சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் படைத்த நூல்கள் பல இன்று சைவ உலகுக்கு வழிகாட்டுவதை நன்றியோடு ஞாபகப்படுத்த வேண்டும். விநாயக பரத்துள் என்ற ஐயாவின் நூல் பெரும் பொக்கிஷம்.

*கலாநிதி ஆறு.திருமுருகன்,*
*தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*தலைவர் சிவபூமி அறக்கட்டளை.*



# அருள்மிகு வளலாய் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக சிறப்புமலர் 07.04.2013

## ஆலய வரலாறு (சுருக்கம்)

ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் இந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்திற்கு அண்மையிலுள்ள வேணாடு (வேளாளர்) எனப்படும் இன்றைய தமிழக நாகர் கோவில் மாவட்டம் சைவப் பாரம்பரியம் மிக்கது. அங்கிருந்து கார்காத்த வேளாளர் குலவீர மாணிக்கம் தலைமையிலான குலவீர மாணிக்கம் தலைமையிலான குழு வீர மாணிக்க தேவன் துறையில் தரையிறங்கி ஆதி மயிலிட்டியூடாக (தற்போதைய மயிலிட்டி) வளலாய் வீரமாணிக்கம் புலத்தில் தாம் கொண்டு வந்த பிள்ளையாருக்கு கோவில் அமைத்து அந்தணர் மூலம் பூசை ஒழுங்குகள் செய்து அவர்களுக்கு மானியங்களும் வழங்கினர். இவ்விநாயகர் ஒடிந்த யானைத்தந்தத்தை ஒத்த கூம்பு வடிவத்தை ஒத்துள்ளது என்ற படியால் முடிப்பிள்ளையார் என அழைக்கப்படுவதுடன் அங்குள்ள கண்ணகை அம்மன் கோவில் முதலாம் திருவிழா உபயம் வளலாய் மக்களுக்கு இருப்பது மேற்படி வரலாற்றை உறுதிப்படுத்துகின்றது.

1920 ஆம் ஆண்டு கற்பகிரக அர்த்த மண்டபம்,மகா மண்டபம்,தரிசன மண்டபம் ஆகியவற்றின் திருப்பணி வேலைகள் பூர்த்தியாகி 1948 ஆம் ஆண்டு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் குடமுழுக்கு விழா விமர்சையாக நடைபெற்றது. குடமுழுக்கின் போது ஆதிமூலவரான முடிப்பிள்ளையாருக்கு கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியாரால் மூலஸ்தானத்தில் உரிய மகத்துவம் கொடுக்காமையால் விநாயகப் பெருமானால் சிவாச்சாரியாருக்கு மனஉளைச்சலைக் கொடுத்ததன் காரணத்தால் சிவாச்சாரியார் தன் தவறை உணர்ந்து மறுநாள் காலையில் ஆதி முதல்வரான முடிப்பிள்ளையாரை சரியான முக்கியத்துவம் கொடுத்து வணங்கியதாக வரலாறு கூறுகிறது.

மீண்டும் 1974 ஆம் ஆண்டு கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1975 இல் மஹாகும்பாபிஷேகமும் அதன் பின் வெளி மண்டபம், சுற்றுமதில்; முருகன் ஆலயம், நவக்கிரகநாயகர் ஆலயம்,வைரவர் ஆலயம், காண்டாமணி போன்றவை நிர்மாணிக்கப்பட்டு 14.09.1988 மஹாகும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் இறுதியில் சங்காபிஷேகமும் நடை பெற்றது. இதன்பின் 10 நாட்கள் வருடாந்த திருவிழா முதலில் வைகாசி மாதமும் பின்னர் ஆனி மாதமும் 1990 ஆம் ஆண்டு வரை மிக விமர்சையாக நடைபெற்றன.

வரலாற்றுப்பெருமைமிக்க கிராமமாக அடையாளம் காண இங்கு அமைந்திருக்கும் பண்டையகால நிர்மாணங்கள் பெரிதும் உதவுகின்றன. யாழ்.மாவட்டத்தில் ஐரோப்பிய ஆட்சியாளரின் பிரித்தானிய காலத்திலேயே ஆழ்கிணறுகள்,கற்கிணறுகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

அதற்குமுன் குமச்சங்கேணி, தூரவு (சிறு கிணறு) என்பவையே அன்றைய மக்களுக்கு கைகொடுத்தன. வளம்மிக்க கிராமம் பழம் பெரும் மக்களாக இருந்ததற்கு சாதகமாக சோழர் குல குருகுல மன்னனாகிய குமச்சன் அவர்களால் குமச்சன்கேணி பெரியகுளம், தாங்கையளவு குளங்களை விவசாயக் குளங்களாகவும் பாலாவி கந்துக்குளம் சங்கானை நீர்வாவி போன்றவற்றை கால் நடைகளுக்காகவும் குருகுல மன்னன் குமச்சனால் நிர்மாணிக்கப்பட்டன. இன்றும் குமச்சன்கேணி என்பது வழக்கத்தில் உள்ளது.

கொடைவள்ளல் என்ற காரணத்தாலும் வளவன் என்ற பெயர் இருந்த காரணத்தினாலும் முதுமொழியில் வளலாய் ஊர் என்ற சோழர் பெயரை அடக்கி வளலாய் உருவாகியது. வளலாய் கிராமம் குளங்களும் அதனைச்சுற்றி வயல்கள், மேட்டு நிலங்கள், தோட்டங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டன. அக்காலத்தில் தோட்டங்களைச் சுற்றி குடி யிருப்புகள் அமைந்துள்ளன. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் கடல்நீர் உட்புகாமல் அணைகள் அமைக்கப்பட்டன. அந்த அணை கொற்றாம்பாண்டியன் என்று இன்றும் அழைக்கப் படுகின்றன.

தலைவர் சண்முகநாதன் ஞானரூபன், செயலாளர் வடிவேல் யோகநாதன், பொருளாளர் தாமோதரன் நந்தகுமார் இத்துடன் 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டு வளலாய் மேற்கு மக்களதும் வெளி நாட்டில் வசிக்கும் வளலாய் ஊர் உடன் பிறப்புக்களும் அடியார்களும் அவர்களது உறவினர்களும் அதிகளவு நிதியுதவியுடன் திருப்பணி வேலைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதனைத் தொடர்ந்து 7 ஆம் திகதி 4 ஆம் மாதம் 2013 பங்குனி மாதம் 25 ஆம் நாள் கலாநிதி நா.சோமஸ்கந்த குருக்கள் சுன்னாகம் (கனடா) அவர்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## குருமாரின் ஆச்ச் செய்தி





இலங்கை மணி நாட்டின் வடக்கே சைவமும் தமிழும் பேணும் தர்மசீலர்களாகிய பெருமக்கள் வாழும் பயிர்வளம், நீர் வளம் நிறைந்த யாழ். அச்சுவேலி வளலாய் பதியில் புராதனமாக எழுந்தருளியிருந்து அருள் பாலித்துவரும் ஸ்ரீ வளலாய் பிள்ளையார் திருக்கோவில் 07.04.2013 இல் திருக்குட சன்னீராட்டுப் பெருவிழாக் காண திருவருள் கைகூடியுள்ளது அனைவருக்கும் பெருமைதரும் வைபவம் ஆகும்.

ஆலய பரிபாலன திருப்பணிச்சபையினரின் பெருமுயற்சியினால் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழும் பக்தர்களின் பேருதவியுடன் ஆலயம் முழுவதுமாக புதுப்பிக்கப்பெற்று அழகு மிளிர் சிற்ப வர்ணவேலைகளுடன் புதுப்பொலிவு பெற்று திகழ்கின்றது. சகல செல்வங்களையும் வாரி வழங்குவதற்கு புதிய மஹாலக்ஷ்மியும் உற்சவ விநாயகரும் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

திருப்பணிச் செல்வர்களுக்கும் அனைத்து அடியார்களுக்கும் வளலாய் பிள்ளையார் அருள் சுரக்கப் பிரார்த்தித்து ஆசி வழங்குவதுடன் அனைவரும் வந்து தரிசித்துய்யுமாறு வேண்டுகிறோம் சுபம்.

*சிவாகம வித்வான் டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள் (கனடா),*
*முத்தமிழ் குருமணி டாக்டர் சிவ ஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் (சுன்னாகம்)*

## ஆலய பிரதம குருவின் கும்பாபிஷேக அருளாசி



யந்திரபாடி வளலாய்ப் பதியிலே பன்நெடுங்காலமாக பாரம்பரியமான புராதன வரலாற்றை கொண்டமைந்த நாகர்கோயில் என வழங்கப்படும் ஸ்ரீவளலாய் சித்தி விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனருத்தாரணம் செய்யப்பட்டு மூலமூர்த்திக்கு துவிதள விமானம் அமைக்கப்பட்டு அழகிய கலைநயத்துடன் தேவசிற்பி மயனும் வியக்கும் வண்ணம் தேவலோகம் போல காட்சியளிக்கும் இப்பதியிலே பங்குனிச்சதய நன்னாளில் ஒன்பது குண்டங்களோடு கூடிய சிறப்பாக யாகம் அமைத்து மஹாகும்பாபிஷேகம் காண்பது எமக்கும் எமது ஊர் மக்களுக்கும் வெளிநாட்டில் வசிக்கும் பற்றுறுதியுடன் கூடிய அன்பர்களுக்கும் மகிழ்வைத் தருகின்றது.

இவையெல்லாம் நிறைந்திருக்கும் மஹாகும்பாபிஷேகத்தை தரிசிப்பதன் மூலம் கும்பாபிஷேக நற்பலன் கிடைக்கப்பெற்று நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலைக்கவும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு கிடைக்க பிரார்த்தித்து அமைகின்றோம்.

*யாவர்குமாம் இறைவர்க்கொருபச்சிலை*
*வேதாகமஞானபானு தமிழமுதக்குருமணி*
*சிவஸ்ரீ.கந்தசாமிகுருக்கள்*
*ஜெயராமக்குருக்கள்*

## பழைமை வாய்ந்த ஆலயம்



அச்சுவேலி வளலாய் பதியிலே எழுந்தருளி அருளாட்சி புரியும் விநாயகருக்கு நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்விற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு கிராம வாழ்வின் ஆதாரமாகவும் மக்களின் ஆன்மீக வழிபாட்டிற்குரிய இடமாகவும் ஆலயங்கள் திகழ்கின்றன. மனிதனை சீர்மைப்படுத்தி சமய கலை, பண்பாட்டு ரீதியாக ஒன்றிணைக்கும் இடங்களாகவும் ஆலயங்கள் திகழ்கின்றன. எமது வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் வளலாய் பகுதியில் அமைந்துள்ள வளலாய் பிள்ளையார் ஆலயமானது பழைமைவாய்ந்த ஆலயமாக காணப்படுகின்றது.

மீள்குடியேற்றத்தின்போது விடுவிக்கப்பட்டு தற்போது புது மெருகுடன் கும்பாபிஷேகம் நிகழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை இம் மக்களின் ஒற்றுமைத் தன்மைக்கும் விடாமுயற்சிக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இன்று ஊர் கூடி கும்பாபிஷேகம் செய்வதன் மூலம் அப்பிரதேசம் மீள் உயர்வளர்ச்சி நிலைக்கு செல்வதற்கான சாத் தியப்பாட்டினை வெளிக்காட்டி நிற்கிறது.

விடாமுயற்சி, கடுமையான உழைப்பு மூலம் முன்னேற்றம் காணும் இப்பிரதேசம் இக்கும்பாபிஷேகப் பெருவிழா மூலம் மேலும் வளர்ச்சி பெற்று உன்னத நிலையை அடைய இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

*மருதலிங்கம் பிரதீபன்*
*பிரதேசசெயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலில் தலைசிறந்த நேர்மையான அரசியல் தலைவராக மதிக்கப்பட்ட தந்தை செல்வா சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகத்தின் அரசியல் தீர்க்க தரிசனம் 60 ஆண்டுகளின் பின்னரும் யாதார்த்தமாக அரசியல் ஆய்வாளர்களால் நோக்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சியை அமைத்துக் கொடுப்பதற்காக 30 வருட அகிம்சைவழிப் போராட்டத்தில் சாதித்தது என்ன என்பதை மீளாய்வு செய்வதன் மூலம் அவரது கொள்கையின் யதார்த்தத்தை புரிந்துகொள்ளலாம்.

தமிழ்த் தேசியத்திற்கு 1949 இல் அடித்தளமிட்ட பெருந்தலைவர். அதை அடைவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கை விளக்கங்கள்: ஒற்றையாட்சி முறை, சிங்களவர்கள் தமது சனத்தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள்வதற்கு வசதியளிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும் பான்மையாக வாழும் இடங்களில் தம்மைத்தாமே ஆட்சிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால், அவரவர்கள் சுதந்திர தனியரசாக இயங்குவதில்லை. சமஸ்டி அமைப்பாக இயங்குகின்றனர்.

அத்தகைய சமஸ்டி அமைப்புத் தான் இலங்கைக்குத் தேவை" தமிழர்

உறுப்பினர்கள் அதிர்ச்சி யடைந்தனர். ஜனநாயக வழியில் போராடிப் பெறக் கூடிய திட்டமே சமஸ்டி அரசியல் திட்டம். அந்த அரசியல் திட்டத்தை நன்கு விளங்கிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரர நாயக்கா, ஆட்சிபீடத்தைப் பிடிப் பதற்காக ஒரு இனவாத அர சியல் வாதியாக மாறி நியாயத்திற்கு மாறாக ஆட்சி நடத்தினார்.

தந்தை செல்வா இலங்கையில் உள்ள பல இன மக்களும் ஐக்கியமாக வாழக்கூடிய சமஸ்டி அரசியல் அமைப்பை வென்றெடுப்பதற்கு 30 வருடமாக





அகிம்சை வழியில் போராடி வந்தார்.

1951ஆம் ஆண்டு வரலாற்றுப் பெருமை பெற்ற திருகோணமலையில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை செல்வாவின் தலைமையில் நிறைவேற்றிய தீர்மானம், "பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு இனத்திற்கும் பிரிக்கவொண்ணாத உரிமை உண்டு என்பதாலும்,

இலக்கியப் பாரம்பரியத்துடனும் இக்காலத் தேவைகள் அனைத்துக்குமே போதுமானதாகத் தமிழ் மொழியை இலங்கச் செய்யும் நவீன வளர்ச்சியுடனும் விளங்குவதுதான்- சிங்களவர்களின் மொழியினின்றும் முற்றாக வேறுபட்ட தனியொரு மொழிவாரி மக்கள் என்ற உண்மையாலும்,

இறுதியாக இத்தீவின் குறித்த பாகத்தை (வடக்கு- கிழக்கு) மேவிச் செறிந்துள்ளதான நிச்சயமான நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் என்ற காரணத்தினாலும் சிங்களவர்களினின்றும் வேறுபட்ட ஒரு தனியினமாக அவர்கள் விளங்கு கின்றார்கள் என்பதாலும்,

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இம் முதலாவது தேசிய மாநாடு இலங்கைத் தமிழ் பேசும் இனத்திற்கெனப் பிரிக்கமுடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதுடன் அடிப்படையானதும், மறுக்கவொண்ணாததுமான சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கு அமைய மொழிவாரி அரசுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறது" இது நாடாளுமன்றம் மூலம் தந்தை செல்வா நடத்திய போராட்டம்.

இக்கருத்துக்களுக்கும் சிங்களத் தலைமை சிந்திக்கத் தவறியதைத் தொடர்ந்து, அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1956 யூன் மாதம் 5ஆம் திகதி காலிமுகத் திடலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தின் மேல்மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்க, சிங்களக்

# ஒற்றையாட்சி தமிழர்களை அழிக்கும் தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம்

களை ஆராய்வது இன்றைய அரசியல் சூழ்நிலையில் பொருத்தமானது.

"சோல்பரியின் ஒற்றையாட்சி தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். மாற்று அரசியல் அமைப்பு எமக்குத் தேவை. பல்லின, பலமத, பல மொழி பேசும்மக்கள் வாழும் நாடுகளுக்கு பொருத்மான அரசியல் அமைப்புத்திட்டம் ஒன்று உள்ளது.

அமெரிக்கா, கனடா, சோவியத் யூனியன், அவுஸ்திரேலியா, இந்தியா, சுவிஸ் உட்பட பல நாடுகளில் அத் திட்டம் நடைமுறையில் உள்ளது. அதுதான் சமஸ்டித்திட்டம்" என்கிறார் தந்தை செல்வா.

தமிழ்மக்களுக்கு மாற்று அரசியல் திட்டம் வேண்டும் என்பதை1949ல் உணர்ந்தார். சோல்பரி அரசியல் திட்டத்தை தீவிரமாக எதிர்த்தார். அதற்கான மாற்றுத் திட்டம் பற்றி பல அரசியல் நிபுணர்களுடன் ஆலாசனை நடத்தினார்.

1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமஸ்டி அரசியல் திட்டத்தை தந்தை செல்வா சமர்ப்பித்தார். அங்கு குழுமியிருந்த வன்னியசிங்கம் உட்பட பல சட்ட வல்லுனர்கள் அதை விவாதித்து ஏகமனதாக அங்கீகரித்தனர்.

மேலும் தந்தை செல்வா அளித்த

களுக்கு ஒரு சுயாட்சி, தனிரசு வேணும் என்பதை 60 வருடங்களுக்கு முன்னர் கூறியது இன்றும் யதார்த்தமாக நோக்கப்படுகிறது.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு 30 வருட காலமாக அகிம்சை வழிப் போராட்டம் நடத்தினர். அதனால் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையை 1948 இலிருந்து முதலில் நாடாளுமன்ற மேடையைச் சரியாகப் பயன்படுத்தி ஜனநாயக வழிகளில் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அரசியலில் தமிழர் பிரச்சினைகளில் எவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் ஆணித்தரமான கருத்துக்களை சிங்கள தலைவர்களுக்கு அச்சமின்றி எடுத்துக் கூறிய துணிவு மிக்க பெருந் தலைவர் தந்தை செல்வா.

அவர் 1948ல் இருந்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய எழுச்சியுரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நாடாளுமன்றம் மூலம் போராடிய வரலாறு அதுவாகும்.

தேசியக்கொடி, குடியுரிமை மசோதா (19-08-1948) பாராளுமன்றத் தோதல்கள் திருத்த மசோதா, இந்திய குடியிருப்போர் பிரஜா வுரிமைச் சட்டம், அரசகருமமொழி மசோதா, அரசகரும மொழி இரண்டாவது வாசிப்பு ஆகிய எழுச்சியுரைகள் ஒரு நூலாகவும் வெளி வந்துள்ளது. இந்த எழுச்சியுரைகளைக் கேட்ட சிங்கள நாடாளுமன்ற



அவ்வுரிமையின்றி அவ்வினத்தின் ஆன்மீக கலாசார, தார்மீகப் பொலிவு சீரழிந்துவிடும் என்பதாலும்,

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்று கணிப்பதற்கான ஒவ்வொரு அடிப்படைத் தகுதிகளிலும் அதாவது முதலாவதாக குறைந்தபட்சம் சிங்கள மக்களை ஒத்த அளவிற்காவது புராதனமானதும் புகழ் செறிந்தது மான இத்தீவில் தனியொரு வரலாற்றாலும்,

இரண்டாவதாக ஒப்பற்றதோர்

குண்டர்கள் சத்தியாக்கிரகிகளை குண்டாந்தடிகளால் தாக்கி சத்தியாக்கிரகத்திற்கு இடையூறு விளைவித்தனர்.

தாக்கப்பட்டபோதும், தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் அவ்விடத்தை விட்டு அசையவில்லை. தாக்கப்பட்ட அமிர்தலிங்கம் இரத்தக்கறையுடன் நாடாளுமன்றம் சென்று உரையாற்றினார். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் தமிழர் பிரச்சினையை சர்வதேசத்திற்கு கொண்டு சென்றது.

(தொடரும்)

-ஜ.தி.சம்பந்தன்-லண்டன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 4 வகையான இஸ்லாமிய அமைப்புக்கள்!

## அமெரிக்கா அறிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

இலங்கையில் நான்கு வகையான இஸ்லாமிய அமைப்புக்கள் இயங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜமாத்தீ இஸ்லாம், தாயுதித் ஜமாத், தாப்லீக் ஜமாத் மற்றும் ஜமாத்தீ முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய இயக்கங்கள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப் பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டாட் இதனை அனுப்பி வைத்துள்ளார்.

பாகிஸ்தான் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் இளைஞர்களுக்கு தற்காப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆயுத பயிற்சிகள் வழங்கப்பட்டதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது.

சில இலங்கை முஸ்லிம்கள் வெளிநாடுகளில் ஜிஹாத் யுத்தத்தில் கலந்துகொள்வதற்காக புறப்பட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய அநேகமானவர்கள் சவுதி அரேபியாவில் கடமையாற்றுவதற்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் ஆயுதப் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அமைப்பான இஸ்லாமிய ஐக்கிய அமைப்பு உறுப்பினர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா குழுவினர் பிளவடைந்து சென்ற போது கைவிடப்பட்ட ஆயுதங்களை இவர்கள் பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் காஷ்மீரில் ஆயுத பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளதாகவும் பாதாள உலகக்குழு உறுப்பினரான தாவூத் இப்ராஹிமுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் புலிகளுக்கு எதிராக மூன்று முஸ்லிம் குழுக்கள் உருவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை பாதாள உலகக் குழுவினருக்கும் முஸ்லிம் ஆயுததாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தொடர்பில் திரட்டப்பட்ட அனைத்து தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல என தூதரக அதிகாரிகள் தமது குறிப்பில் தெரிவித்துள்ளனர் என விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-2)

## சீனக் கப்பல்? எதுவும் தெரியாது! படையினர்

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தொடர்பில் தெரியாது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கை- இந்திய கடற்பரப்பில் சஞ்சரித்ததாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் வெளிநாட்டுக் கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் சஞ்சரிக்க முடியும் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சஞ்சரிப்பதற்கு இலங்கை கடற்படையினரிடம் அனுமதி கோர வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய- இலங்கை கடற்பரப்பில் 22 தடவைகள் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் சஞ்சரித்துள்ளதாக முன்னர் தகவல் வெளி யாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# தனியார் வைத்தியசாலைகளை நெறிப்படுத்த விசேட அமைப்பு

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக பொதுமக்களால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை கையாள்வதற்கான விசேட பொது அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தெரிவித்துள்ளார்.

குறித்த அமைப்பானது தனியார் மருத்துவமனைகள் தொடர்பாக பொதுமக்கள் வழங்கும் முறைப்பாடுகளை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபை சட்டம் 2008 இன் கீழ் சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேனவின் உத்தரவிற்கு அமைய பொது சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் 5 இல் உள்ள நன்கு அறியப்பட்ட தனியார் வைத்தியசாலை ஒன்று ஒரு நாள் சிகிச்சைக்காக நோயாளர் ஒருவரிடமிருந்து 100 ஊசிகள் மற்றும் 200 அறுவை சிகிச்சை கையுறைகளுக்கு கட்டணம் வசூலித்துள்ளமை தொடர்பில் சுகாதார சேவைகள் ஒழுங்குமறை குழுவுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கட்டணம் வசூலிக்கப்பட்ட பற்றுச்சீட்டும் இதனுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

# முல்லை, முள்ளியவளை பிரதேசங்களில் காடழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு – முள்ளியவளை பகுதிகளில் தமிழ்–முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் மேற்கொள்ளப்படவிருந்த குடியேற்றத்திட்டத் திட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காடழிப்பு நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்நடவடிக்கைகளுக்கான உத்தரவு அரச உயர்மட்டங்களிலிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படும் அதேவேளை மேற்குறித்த பகுதியில் சுமார் ஆயிரத்து 555 ஏக்கர் காட்டை அழித்து அந்த இடத்தில் முஸ்லிம் மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இந்த குடியேற்றத்திற்குள் 34 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலமும் அபகரிக்கப்படவிருந்தது.

எனினும் நிலத்திற்குச் சொந்தமான தமிழ் மக்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்ததுடன், இந்த விடத்தில் தலையிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

இதனை தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டது.

இந்த வழக்கு மீதான வீசாரணை கடந்த முதலாம் திகதி விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர்த்தரப்பினர் கோரிய கால அவகாசத்தை வழங்கிய நீதிமன்றம் மீண்டும் ஜூன் 3 ஆம் திகதி வழக்கை விசாரணைக் கெடுத்துக் கொள்வதாக உத்தரவிட்டது.

இந்நிலையில் கொழும்பில் அண்மையில் மேற்குறித்த குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டமொன்று இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிப்பதுடன் நேற்று முதல் காடழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கானநடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

எனினும் இதன்போது தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை விடுத்து அவற்றுக்குப் பின்னாலுள்ள காடுகளே அழிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எப்படியாயினும் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் எவ்வாறு காடுகளை அழிக்க முடியும் என மக்கள் கேள்வியெழுப்பியிருக்கின்றனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் காணிகளை பெற்றுக் கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்துடன் எவ்வகையிலும் தொடர்புபட்டிருக்காத பல முஸ்லிம்கள் விண்ணப்பித்திருப்பதாகவும் ஆனால், மாவட்டத்திற்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒரு துண்டு நிலம் கூட இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் மாவட்ட சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.(2-5)

# ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழ்வதற்கு இந்திய வெளியுறவுக் கொள்கை மாறவேண்டும்

## சீமான் வலியுறுத்து

ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தனிஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், இலங்கை மீது இந்தியா பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை வீடியோ புகைப்பட கலைஞர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த சீமான் தனிஈழம் குறித்து சென்னையில் கருத்துக்கூறிய யஸ்வந்த் சின்ஹாவின் கருத்து வெளியிலும் பாராளுமன்றத்திலும் ஒரே நிலைப்பாடாக இருக்கிறது.

ஆனால், சுஷ்மாசுவராஜ், அத்வானி போன்றவர்களின் கொள்கைகள் வேறுபட்டு நிற்கிறது. பா.ஜ.கவின் நிலைப்பாடு ஒன்றாக இருக்க வேண்டும் என்று தெரிவித்த அவர். இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக இணைந்து வாழ்வது இருவருக்கு நல்லதல்ல. இந்தியாவிற்கும் நல்லதல்ல. எனவே, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டுமே இலங்கையில் தமிழர்கள் அமைதியாக வாழ முடியும் என்று தெரிவித்தார். (2)



கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப்போட்டியின் வலிகாமம் ரீதியிலான இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை இரவு 8 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இவ்விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வெற்றி பெற்ற அணிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் சிறந்த ஆட்டநாயகனுக்கான விருதினை புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (இப்போட்டியில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதிய தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 3:7 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

421



## அடடா! என்ன சுவை!

ஒருசமயம் மன்னர் கிருஷ்ண தேவராயர் மாறுவேடத்தில் நகர்வலம் வந்துகொண்டிருந்த போது ஒரு தெருவில் ஒரு கிழவி தின்பண்டங்கள் விற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். வாணலியில் இருந்த மசால் வடையின் வாசனை மன்னரை சுண்டியிழுத்தது. அவரால் அந்த இடத்தை விட்டு நகரவே முடியாமல் கால்கள் மறுத்தன.

நண்பகல் நேரம் என்பதால் பக்கத்தில் யாருமில்லை. உடனே மன்னர் வெட்கத்தை விட்டு கிழவியிடம் சென்று பாட்டி! எனக்கு நான்கு வடை கொடு என்றார்.

கிழவி கொடுத்த வடைகளில் ஒன்றை விண்டு வாயில் போட்ட மன்னர் அப்படியே பிரமித்துப் போனார். காரணம் அந்த வடை கற்பனை செய்ததைவிட மிகமிக சுவையாக விருந்தது. மேலும் நான்கு வடை கேட்ட மன்னர் அவற்றை ரசித்துச் சுவைத்துக் கொண்டே பாட்டி! உனக்கு எழுபது வயது இருக்கும் என்று தோன்றுகிறது. இந்த வயதில் உனக்கு ஏன் இந்த தலை எழுத்து? உன்னைக் காப்பாற்ற யாரும் இல்லையா? என்றார் மன்னர்.

எனக்குப் பிள்ளை குட்டி இல்லை ராசா! என்றவள் என் புருசனும் நான்கு வருடம் முன் இறந்து போனார். என் கைப் பக்குவம் என்றால் என் புருசனுக்குக் கொள்ளைப் பிரியம்! சாகும்போதுகூட என் கையினால் சர்க்கரைப் பொங்கல் வாங்கிச் சாப்பிட்டுத்தான் செத்துப்போனார் என்று கண் கலங்கினாள். இன்னும் வடை வேணுமா ராசா? என்றவாறு மேலும் சில வடைகளை கொடுத்தாள். மன்னருக்கு வேண்டாமென்றே சொல்லமுடியவில்லை.

இவ்வளவு நன்றாகப் பண்ண எங்கிருந்து கற்றுக்கொண்டாய் பாட்டி? என்றார் மன்னர். என்



### அம்புலிமாமா கதைகள்

அம்மாவிடம் கற்றுக் கொண்டேன். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு திறமையைக் கட்டாயம் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று என் அம்மா அடிக்கடி சொல்வாள். அது தகுந்த சமயத்தில் கைகொடுத்து உதவும் என்பாள்.

அதேபோல்நான் அன்று என் அம்மாவிடம் கற்றுக் கொண்ட சமையல் இன்று என் அன்றாட வாழ்க்கையைச் செலுத்த உதவுகிறது என்றாள்.

தொடர்ந்து உன் கையினால் செய்ததைச் சாப்பிடக் கொடுத்து வைத்திருக்கவேண்டும் என்று என் கணவர் அடிக்கடி என்னிடம் சொல்வார். நான் எத்தனை தட்டில் போட்டாலும் இன்னும் போடு இன்னும் போடு என்று கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார் என்று பழைய நினைவுகளில் கிழவி ஆழ்ந்து போனாள்.

கிழவியிடம் கதை கேட்டுக் கொண்டே அவள் வைத்திருந்த அத்தனை மசால் வடைகளையும் மன்னர் ஒருவரே தின்று தீர்த்தார். பின்பு பாட்டி உன்னை நான் விடுவதாக இல்லை. இனி தினமும் உன் கைச் சமையலைத்தான் சாப்பிடப்போகிறேன் என்று சொல்லி விட்டு ஏராளமாகப் பணம் கொடுத்து விட்டுச் சென்றார். வந்து போனவர் மன்னர் என்று தெரியாமல் பாட்டியும் தன் வேலையைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தாள்.

மறுநாள் அரண்மனைக்காவலன் ஒருவன் கிழவியிடம் வந்து பாட்டி! உன்னை மன்னர் கையோடு அழைத்து வரச்சொன்னார் என்றதும் கிழவி பயந்து போனாள்.

நீ பாட்டுக்குக் கண்டதையெல்லாம் ராஜாவுக்குக் கொடுத்து நேற்று சாப்பிட வைத்துவிட்டாய் அல்லவா! அதனால்தான் ராஜா உன்னைக் கூப்பிடுகிறார் என்று அவன் சொன்னதும் கிழவி வெலவெலத்துப் போனாள்.

ஐயோ நேற்று என்னிடம் வந்து வடை கேட்டு வாங்கிச் சாப்பிட்டது ராஜாவா? வடையில் உப்பு அதிகமோ? தீய்ந்து போயிருந்ததோ! என்றெல்லாம் எண்ணி கிழவி குளிர் சுரம் வந்தவள் போல் நடுங்கினாள்.

அரண்மனை தர்பாரில் நுழைந்த கிழவிக்குக் கால்கள் பின்ன கண்கள் பஞ்சடைக்க வாய் குழறியது.



மசால் வடைப் பாட்டி! என்னை நினைவிருக்கிறதா என்று மன்னர் நட்பாகச் சிரித்ததும் கிழவிக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று.

கிழவியைச் சுட்டிக்காட்டியவாறு மன்னர் சபையில் இருந்தவர்களை நோக்கி இந்தக் கிழவியைப் பாருங்கள்! இவள் வயது எழுபது! இந்தத் தள்ளாத வயதிலும் தன் சொந்தக் கால்களில் நிற்கிறாள். இவள் தாய் சொன்னாளாம் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு திறமையை வளர்த்துக் கொண்டால் அது கஷ்டகாலத்தில் கைகொடுக்கும் என்று!

அதன்படியே இவள் சமையற்கலையை பரிபூரணமாகக் கற்றுக்கொண்டிருக்கிறாள். நேற்று இவளைச் சந்தித்த நான் இவள் சுட்டு வைத்த வடைகள் அத்தனையும் சாப்பிட்டு விட்டேன்.

என் வாழ் நாளில் அத்தனை சுவையான வடைகள் நான் உண்டதே இல்லை. இந்தக் கிழவியை நம் நாட்டிலுள்ள எல்லோரும் முன் னோடியாகக் கொள்ள வேண் டும் என்றார்.

பின்னர் கிழவியைப் பார்த்து பாட்டி! என் அம்மா எனக்காக மிகப்பிரியமாக சமைத்துப் போடுவதை நான் எப்படி சுவைத்து உண்டேனோ அது போல் நேற்று நீ செய்த வடைகளையும் மிகவும் ரசித்துச் சாப்பிட்டேன்.

நேற்று முதல் என் நாக்கு உன் கைப்பக்குவத் திற்கு அடிமையாகிவிட்டது. இன்று முதல் முச்சந்தியில் நீ பலகாரம் விற்கவேண்டாம். அரண்மனையில் நீ சமையல் செய்வாய்! நீதான் இனி தலைமை சமையற்காரி! ஏனைய சமையற்காரர்களுக்கும் உன் கைப்பக் குவத்தைக் கற்றுக் கொடு என்றார்.

ராசா! இந்தக்கிழவிக்கு இப்படியோர் அதிர்ஷ்டமா என்று மெய்சிலிர்த்த கிழவி தன் கைகளை கூப்பி மன்னரை வணங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

07



## மருத்துமாமலைவனத்துக் காதல்

நல்லூர் அரண்மனையின் முன் வாயிலோடு வடக்கு நோக்கிச் செல்கின்ற அரசப் பெரும் வீதி கல்வியங்காடு எனும் இடத்தைக் கடந்து வடக்கே செல்கின்றது. கல்வியங்காட்டிற்கும் அரசப் பெருவீதிக்கும் இடையில் அரசப் பெருவீதியை அடுத்து காணப்பட்ட மாளிகைகளின் செல்வப் பெருக்கில் இருந்து அவை அரச குடும்பத்தினருக்கும் மந்திரிகளுக்கும் சொந்த மானவை என்பதை உணரலாம். வெண்சுதையினால் பால்போல நிழற்றியிருந்தமை பார்ப்போர் கண்களை ஒரு கணம் கவரும் தன்மையான அவற்றில் ஒன்று மட்டும் ஒரு நந்தவனத்திலிருந்து விலகியிருந்தது. அம்மாளிகையின் உரிமையாளர் அப்பாமுதலி என்பவர். யாழ்ப்பாண அரசின் முதன்மை வாய்ந்த மந்திரிகளில் ஒருவர். அவர் தொண்டைமண்டலப் பிரபுக்களில் ஒருவர். மந்திரி அடியார் நல்லாருக்கு அடுத்த தானத்தில் இருந்தார்.




தற்போது இடிபாடுகளுடன் காணப்படும் சுரங்கப்பாதை



-செங்கை ஆழியான்-

அப்பாமுதலியின் மாளிகைக்குப் பின்புறமாக முப்பது பரப்பு விஸ்தீரணத்தில் மருத்து மாமலைவனம் அமைந்திருந்தது. பல்வகை மருந்து மூலிகைகளைப் பயிரிட்டு கிராமங்கள் தோறுமுள்ள வைத்தியசாலைகளுக்கு செகராசசேகரர் அனுப்பி வந்தார். இந்த மருத்துமாமலை வனத்தில் நாகம் தீண்டி ஒரு நாள் அவர் மரணத்தைத் தழுவினார். அதன்பின்னர் அந்த மூலிகைத் தோட்டத்தை பரநிருபசிங்கர் கவனிக்கிறார். செகராசசேகரன் கால செழிப்பு இல்லாவிடிலும் பரநிருபசிங்கர் காலத்தில் முற்றாகச் சோபை இழந்துவிடவில்லை.

மருத்துமாமலைவனத்தில் வீசிய ஆரோக்கியமான காற்றை சுவாசித்தபடி சங்கிலி, அப்பாமுதலியின் மகள் உதயவல்லிக்காகக் காத்திருந்தான். அவன் மனதைக் கொள்ளை கொண்ட பெண் உதயவல்லி. அவளை அவன் தனிமையில் அங்கு தான் சந்திப்பான். அவளுக்காகக் காத்திருந்தான். அவள் வந்தாள். இடை உடுக்காக மெலிந்திருந்தது. அதன் மேலும் கீழும் அகன்ற உடல்வாகு நெளிய நிலவிலிருந்து இறங்கி வந்த மங்கை போல் அவள் வந்தாள்.

"வெகுநேரம் காத்திருக்க வைத்துவிட்டேனா?"

பனிச்சையான கட்டிய அவள் குழல்கற்றையிலிருந்து வெளிப்பட்டு சிலும்பிநின்ற மயிர் கீற்றை தண் நிலவில் தோய்ந்த குளிர்த் தென்றல் தடவிவிட அவள் ஒருபுறம் இடைசாய்த்து மழலை மொழிந்தாள். அவளது மயக்கத்தைத் தரும் அழகை அள்ளி பருகிய அவன், அவள் கரங்களைப் பற்றினான்.

பட்டத்து இளவரசர் வீரபண்டாரமும் ராணி இலக்குமி தேவியும் மரணமாகி திங்கள் ஒன்று கழிந்துவிட்டது. அரண்மனையின் சோகம் இன்னமும் தீரவில்லை. நாடே துக்கம் கொண்டாடிக் கொண்டிருந்தது.

"என்ன அமைதியாகிவிட்டீர்கள்?"

"அப்படி ஒன்றுமில்லை உதயா. அரண்மனை நிலைமையை எண்ணிக் கொண்டேன்..."

"இனி நடக்க வேண்டியவற்றைக் கவனிக்காது இறந்தவர்களைப் பற்றி எண்ணுவதில் என்ன பயன் இருக்கிறது?"

"உண்மை தான்..."

இருவரும் கண்ணிமைக்காது ஒருவரையொருவர் பார்த்தனர். அவள் இடையில் படர்ந்த கரம்செய்த குறும்பால் அவள் சிலிர்த்தாள்.

"பொல்லாத பிள்ளை..."

"இந்தக் கரங்களைக் கட்டி வைக்கதான் வேண்டும்"

"கட்டித்தான் வையேன் உதய"

"காலம் வரட்டும்"

"காலம் வந்தால் கட்டுபவன் நானல்லவா?"

"கட்டுவது நீங்கள்தான். எங்களுக்குக் கட்டும்போது உங்களையே நீங்கள் கட்டிக் கொள்கிறீர்கள்..."

பசிகிடவா நாயொன்று தூரத்தில் நிலவைப் பார்த்து ஊளையிட்டது. அவள் அவனோடு நெருக்கமாக அமர்ந்தாள்.

"உதயவல்லி?"

"அரச குடும்பத்தினரை எண்ணப் பயமா இருக்கிறது... யாழ்ப்பாண அரசு குடும்பத்தினருக்கு மாறாத சாபம் போல... மூத்த பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டப்பட்டார். அடுத்து வீரபண்டாரம். பின் பட்டத்து ராணி... பட்டமேற்கும் உரித்துடைய பரநிருபசிங்கருக்கு என்ன நடக்குமோ? (தொடரும்)

# அடுத்த தலைமுறையும் போராடும் நிர்ப்பந்தம்!

செயற்கைக் கால்களைப் பெறும் பொருட்டு நீண்டிருந்த வரிசையில் நின்றிருந்த இளம்தாய், கால் கருகிய சிறுவனைத் தன் இடுப்பில் காவி வந்திருந்தாள். 'என்ரை பிள்ளைக்கும் ஒரு கால் தாங்கோ...' என்று கைகளை நீட்டியபடி அவள் கெஞ்சினாள்.

அந்தச் சிறுவன் வளர வளர தன் வாழ்க்கையில் எத்தனை பொய்க் கால்களுக்காக அலைய வேண்டும்?

கிளிநொச்சி- போர் தின்ற நகரம் என்ற நூல் கூறும் விடயம் இது:

"போர் முடிந்த பின்னர் கிளிநொச்சிக்கு மீண்டும் திரும்பும்போது என்னுடைய நண்பர்கள், உறவினர்களைத் தேடிச்சென்ற அனுபவங்களைத்தான் இந்த நூலில் எழுதியிருக்கிறேன். நான் படித்த கிளிநொச்சி மத்தியக் கல்லூரிக்குள்- போரில் காலை இழந்த அப்பண்ணா என்ற அண்ணா ஒருவரைத் தேடும் போது என்னைப் பாதித்த நிகழ்வு தான் நூலின் பகுதியை எழுதத் தூண்டின. உண்மையில் கால்களை இழந்த அப்பண்ணாக்களின் நகரமாக கிளிநொச்சி மாறியிருந்தது"

"ஈழ மக்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள்?"

"எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். பாரம்பரிய வாழ்விடங்களில் வாழ்ந்த மக்களை வனாந்தரங்களில் வீசிச் சென்றிருக்கிறது போர். அவர்கள் வாழ்ந்த பகுதிகளை இராணுவம் எடுத்துக்கொண்டது.

எங்கள் மக்களின் பூர்வீக நிலங்களில் தென்னிலங்கைச் சிங்கள வர்களைக் குடியேற்றுகிறார்கள். பயங்கரவாதிகளிடம் இருந்து மக்களை மீட்பதாகச் சொல்லி 2007 ல் சம்பூரைக் கைக்கொண்டது இலங்கை இராணுவம். ஆனால், இப்





போது போர் முடிந்த பிறகும் வளம் கொழிக்கும் சம்பூரை மக்களுக்குக் கிடையாது என அறிவித்துவிட்டது இலங்கை அரசு. இதுபோல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களின் பகுதிகளையும் மக்களிடம் மீண்டும் ஒப்படைக்கவில்லை. எங்கள் நிலப்பகுதி மீது படையெடுக் கும் இலங்கை அரசு, பயங்கரவாதிகளிடமிருந்து மக்களை மீட்கிறோம் என்று சொல்லி அந்த நிலங்களைக் கையகப்படுத்தி சிங்களவர்களைக் குடியமர்த்திக் கொள்கிறது. தனது தேவைக்கும் அரசியலுக்கும் ஏற்ப சூழலை மாற்றி மாற்றி பேசும் இலங்கை அரசின் பொய்ப் புரட்டுக் களைத்தான் இப்போது உலகமும் கேட்டுக்கொண்டிருக்கிறது"

"முகாம்களை மூடிவிட்டதாக இலங்கை அரசு சொல்கிறதே?"

"இல்லை. உலகின் கண்களுக்குக் காட்டிய முகாம்களை மூடிவிட்டு, வன்னிப்பெருநிலப்பரப்பையே பிரமாண்ட திறந்தவெளி முகாமாக மாற்றிவிட்டார்கள். மெனிக்பாம் முகாம் இப்போது இல்லை. ஆனால், கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் புதிய முகாம்களை உருவாக்கியிருக்கிறார்கள். தவிர விசாரணை முகாம்கள், ரகசியத் தடுப்பு முகாம்கள் என விதவிதமான முகாம்கள் அங்கு உள்ளன.

ஈழம்பற்றிப்பேசக்கூடியவர்களைக் கொன்றுவிட்டு எஞ்சியவர்களை எங்கே வைத்திருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. 50 பேர் வாழக் கூடிய இடங்களில் 150 பேரைக் குடிவைத்துவிட்டு மீள்குடியேற்றம் செய்துவிட்டோம் என்கிறது இலங்கை. கண்ணிவெடியைக் காரணம் காட்டியே இராணுவம் மக்கள் நிலங்களை அபகரித்து அங்கு முகாமிட்டிருக்கிறது"

"ஜெனீவா தீர்மானத்தை அந்த மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள்?"

"ஜெனீவா தீர்மானத்துக்கு எதிராகத்தமிழ் மக்கள் போராடுவது போன்று காட்ட யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் போராட்ட நாடகம் ஒன்றை நடத்தியுள்ளனர். வுவனியாவில் அப்பாவி மக்களைப் பலவந்தமாக அழைத்துச்சென்று போராட்டத்தில் ஈடுபடுத்தி இருக்கிறார்கள். மீள்குடியேற்றம், நிலம், அச்சமற்ற வாழ்வு, சுதந்திரமான நடமாட்டம் இவற்றிலேனும் ஒரு முன்னேற்றம் ஐ.நா. கொடுக்குமா என்பதுதான் ஈழ மக்களின் எதிர்பார்ப்பு. இந்தப் போரின் மீதும் இனப்படுகொலையின் மீதும் உலகம் ஒரு சிறிய பார்வையைக் கூட செலுத்தத் தவறியிருக்கிறது. போர்க்குற்றம், இனப்படுகொலை தொடர்பான விவகாரங்களில் உறுதியான நடவடிக்கையை எதிர்பார்க்கிறார்களே அன்றி அவர்கள் ஐ.நா. தீர்மானத்தை எதிர்க்கவில்லை"

"இப்போது வன்னிப் பகுதிக்குச் சுற்றுலா வந்து செல்லும் சிங்களவர்கள் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை எப்படிப் பார்க்கிறார்கள்?"

"தான் வாழும் பகுதியில் பார்க்க இயலாத ஒன்றை இன்னோர் இடத்துக்குச் சென்று கண்டுகளிப்பதற்குப் பெயர்தான் சுற்றுலா. அந்த வகையில் வடக்குப் பகுதியில் தமிழ் மக்கள், சிங்களவர்கள் வாழும் தென்னிலங்கைக்குச் சென்றால் அங்கே புத்தர் கோயிலையோ சிங்களக் கலாசாரங்களையோ காண்பார்கள். ஏனென்றால்தங்கள்பகுதியில்அதைப் பார்க்க முடியாது. ஆனால், இப்போது யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற வட பகுதிகளிலும் கூட புத்தரை மட்டுமே காண முடிகிறது. போர் அனைத்துப் பிரதேசங்களிலும் இந்து ஆலயங்களை அழித்துவிட்டு புத்தரைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டது. இது சிங்கள மக்களுக்கு ஓர் இனிய மன எழுச்சியாக அமைந்துள்ளதால் இந்தப் போரைப் பெருமிதமான வெற்றியாக நினைக்கிறார்கள். அப்படித்தான் சிங்கள அரசு சிங்கள மக்களை வைத்திருக்கி விரும்புகிறது. அந்தச் சிந்தனையும் பெருமிதமுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வெற்றி!"

"எந்தச் சட்டதிட்டத்துக்கும் அடங்க மறுக்கிற இலங்கை அரசிடம், ஈழத் தமிழர்கள் இழந்த உரிமைகளை மீளப்பெற முடியுமா?"

"உலகின் மௌனமே இலங்கை அரசின் சண்டித்தனங்களுக் காரணம். தன்னுடைய அரசியலுக்காக இலங்கை மீது இந்தியா கொண்டிருக்கும் பெரும் காதலும் ஒரு காரணம். எல்லா அரசுகளும் அதன தன் அளவில் செய்யும் கொலைகளுக்கு ஈடாக தான்செய்த கொலைகளைக் கொண்டு நியாயம் கேட்கப் பார்க்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச. ஆனால், நடந்த இனப் படுகொலைக்கும் போர்க் குற்றத்துக்கும் இந்த உலகம் நீதியை வழங்க மறுக்கும் போது எங்கள் அடுத்த தலைமுறையும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படுவார்கள்!"

-தீபச்செல்வன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



பன்முக ஆளுமை கொண்ட கலாநிதி த. கலாமணி அவர்கள் அகவை அறுபது எய்தி மணிவிழாக் காண்பதையிட்டு மனமகிழ் வடைகின்றேன். இசை நாடக வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த குடும்பத்தில் பிறந்தவர் அவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவராக, கல்வியியற் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக ஆக்க இலக்கியப் படைப்பாளியாக, இசை நாடகக் கலைஞனாகப் பல்வேறு தளங்களில் அவரது ஆளுமை யால் சமூகம் பயன்பெற்று வருகின்றது.


எமது மரபுரிமைகளைப் பேணிப்பாதுகாத்தல் அனைவரதும் கடனாகும். கலாநிதி கலாமணி அவர்கள் பல்கலைக்கழகம் சார்ந்த பணிகளுக்கு அப்பால் மரபுவழி நாடகக்கலையைப் பேண வேண்டுமென்பதில் கடுமையாக உழைத்துவருகின்றார். சைவவிழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு நாடகம் சிறந்த வடிவமாகத் திகழ்கின்றது. இது படித்தவர்களையும் பாமரர்களையும் ஒருசேர ஈர்க்கும் கலை வடிவமாகக் கொள்ளத்தக்கது. சமயச் செய்திகளை மக்கள் மத்தியில் சேர்க்கவல்லதாக இன்னும் புதிய இசைநாடகங்களை ஆக்குவதில் கலாநிதி த. கலா மணி அவர்கள் ஈடுபடவேண்டும் என்ற விருப்பத்தையும் இத்தருணத்தில் வெளிப்படுத்து கின்றேன்.

இறைவன் கருணையும் நல்ல மனையாளும் பிள்ளைகளும் ஒருங்கமைந்த காரணத்தாலேயே கலாமணி அவர்கள் இச்சிறப்புக்களைப் பெற்றிருக்கிறார் என்றால் மிகைப்படாது. அவரது மணிவிழாச் சிறக்கவும் சேவைகளால் இந்த மண் பயனுறவும் எனது நல்லாசிகள்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*
*இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம*

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச் செய்தி



அன்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்தகல்வியாளன் கலாநிதி த. கலாமணி அவர்களின் அகவை அறுபது நிறைவு குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன்.

பிறவிக் கலைஞனாக விளங்கும் கலாமணிஅவர்களின் கடவுள் பக்தியையும் யான் அறிவேன். அன்பு, அறிவு, ஆற்றல், அடக்கம் நிறைந்த பண் பாளன். உள்ளும் புறமும் நன்றேகலந்த புன்னகையாளன்.

அரங்கத்தில் ஆடிப் பாடி ஆயிரம் ஆயிரம் ஆத்மாக்களை ரசிக்க வைத்தநாடகக் கலைஞன். கற்றோரையும் மற்றோரையும் தன் இனியவார்த் தைகளால் அரவணைக்கும் மனிதநேயன். அகவை அறுபதினைஎட்டும் போதும்-பக்தியால் இளைஞனாக இறைவன் இவரைக் காக்கின்றான். மணிவிழாக் காணும் கலா மணிபெரியீர்! பல்லாண்டுபல்லாண்டுவாழவாழ்த்துகிறேன்.

பல்கலைக்கழகக் கல்விமான் என்றபெருமைக்குஅப்பால்,பாரம்பரிய இசைநாடகத் துறையில், இவர் கொண்டஆர்வத்தைமறக்கமுடியாது, கலைஞர்களைத் தேடி நாடிமதித்து வாழ்த்தும் பண்பாளனாகநம் மண்ணில் வாழும் அறிஞனின் மணிவிழாச் சிறக்க இதயபூர்வமாகவாழ்த்துகிறேன். தமிழ் இலக்கியவளர்ச்சிக்குத் தன் வீட்டையேகள நிலையமாக்கியவர் இவர். ஜீவநதியின் பிரவாகத்திற்குக் காரணமாக விளங்குபவர். இவரதுசீரியபணிகள் சிறக்கத் துர்க்காதேவியைப் பிரார்த்திப்பதோடு மணிவிழாநாயகன் சீரும் சிறப்போடும் பல்லாண்டுபல்லாண்டு வாழவாழ்த்தி அமைகிறேன்.

*-கலாநிதி ஆறு.திருமுருகன்*

## வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் வாழ்த்து



யாழ் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைதலைவரும் சிறந்தகல்விமானும் புகழ்பெற்ற கலைஞருமாகிய கலாநிதி த.கலாமணி அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடமராட்சி பிரதேசத்தில் பிறந்து தனது ஊக்கத்தினாலும் கடின உழைப்பி னாலும் கல்வியில் உயர்வடைந்து சிறந்த ஆசிரியனாக அர்ப் பணிப்புடன் கடமையாற்றி பல நன்மாணாக்கர்களை உருவாக் கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறை விரிவுரையாளராக மிகவும் சிறப்பாக பணியாற்றி பட்ட மேற்படிப்பு கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த பல கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்க ளிற்கு சிறந்த வழிகாட்டலை மேற்கொண்டதன் ஊடாக கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றியமை பாராட்டத்தக்கதாகும். சிறந்த நாடகக் கலைஞரான இவர் பல நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றி தனது சிறந்த நடிப்பினால் பல்லாயிரக்கணக்கான இரசிகர்களின் பாராட்டினைப் பெற்றதும் பெருமைக்குரியதாகும்.

அவர் ஆற்றியுள்ள கல்வி, கலை, சமூக பணிகளை பாராட்டுவதுடன் அவர் இன்னும் நீண்டகாலம் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து இன்னும் பலபணிகளை ஆற்றஎல்லாம்வல்ல இறைவன் அருள் புரியவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*சி.சத்தியசீலன், செயலாளர் -*
*கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,*
*வடமாகாணம.*

## எளிமையும் இனிமையும் கொண்டவர்



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியகலாநிதி கலாமணி அவர்களுடைய மணி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிரியராக, விரிவுரையாளராக, ஆய்வாளராக, ஆக்க இலக் கியகர்த்தாவாக,இசைநாடகக் கலைஞராக,பாடகராக, அண் ணாவியாராக, பத்திரிகையாசிரியராக, பதிப்பாசிரியராக, எனப் பல பரிமாணங் கொண்டவர் கலாநிதிகலாமணி அவர்கள். விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்ற ஆசிரியராய்த் தம்பணி தொடர்நது படிப்படியாய் தான் கற்ற கல்விகேள்வியால் பல்கலைக்கழக விரிவுரையாளராகி தற்போது யாழ் பல்கலைக்கழக சட்டபீடத் தலைவராக உயர்ந்துள்ளார். தந்தையாரான அண்ணா வியார் தம்பையா அவர்களின் வழியில் நமது பாரம்பரிய கலை வடிவங்களைப் பயின்று தானும் ஒரு இசைநாடகக் கலைஞனாகி பல இசை நாடகங்களை எழுதி இயக்கும் அண்ணா வியாராக மாறி யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத்தை முன்னின்று இயக்கும் மூல காரணரில் ஒருவராகவிளங்குகிறார்.


இலக்கியத் துறையில் பல்வேறு இலக்கிய கட்டுரைகளை படைத்துநவீன இலக்கிய ஆய்வுரைகளை வழங்கி 'அவை' இலக்கிய செயற்பாடுகளை வழிநடத்தி ஜீவநதிஎன்னும் இடையறாது தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் இலக்கிய சஞ்சிகையின் வெளியீட்டில் பெரும் பங்குவகிக்கிறார். விரிவுரையாளராக கல்வியியற் துறையிலும் தான் சார்ந்த கல்விப் புலத்திலும் சீரியப ணிபுரிகிறார். வடமராட்சிமண் பெற்றெடுத்த மாணிக்க மாகஅறிவிலும் ஆற்றலிலும் அனுபவத்திலும் சிறந்துவிளங்குபவர் இவர் என்றால் மிகையில்லை.

பழகஎளிமையும் இனிமையும் கொண்ட கலாநிதிகலாமணி அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெறவேண்டும் என இம் மணிவிழா நாளில் வாழ்த்துகிறோம். மேலும் எதிர்காலத்தில் சீருஞ் சிறப்பும் பெற்றுதமிழ்ச் சமூகத்திற்கு இன்னோரன்ன பணிகள்புரியவேண்டும் எனக்கேட்டுவாழ்த்திப் பணிகிறோம்.

*இ.த.ஜெயசீலன் - பிரதேச செயலர்*
*வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

## மணிவிழாக் காணும் கலைமாமணி த.கலாமணிக்கு வாழ்த்து

மேடையை அழகு செய்யும்
வித்தகக்கலைஞனுன்றன்
பாடலுக் கெனதுநெஞ்சு
பறிகொடுத் துன்பின்னாலே
ஓடுதல் தொழிலாய் வாழ்வேன்
அறுபதாஉனக்கு? பொய்,பொய்!
நீடுபல்லாண்டுவாழ்க!
மனையொடும் மக்களோடும்!
அறிவிற் கல்விக்குஅறுபதாவயது!
ஆற்றலுக் கறுபதாவயது!
பெறுமதிமிக்கபணிபலசூழும்
பெருமகற் கறுபதாவயது!
சுறுசுறுப் பினுக்குஅறுபதாவயது!
சுடரும் புன்னகைக்குமாவயது!
நெறிபிறழாதவாழ்க்கைவாழ்கின்ற
நேசனுக் கறுபதாவயது!



கவிஞர்
சோ.பத்மநாதன்

# பல்துறை வல்லா...
# கலாநிதி த.கலா...
## அவர்களி...
# மணிவி...
# சிறப்பு மலர் 0704



## கலாநிதி தம்பிஜயா கலாமணி

1. பெயர் : தம்பிஜயா கலாமணி
2. பிறப்பு : 04-02-1952
3. பிறந்த இடம்: அல்வாய் தெற்கு
4. கல்வி :
   - ✔ யா/தேவரையாளி இந்துக் கல் (ஆரம்பக் கல்...
   - ✔ யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (இ...
   - ✔ பேராதனைப் பல்கலைக்கழகஇலங்கை [(B...
   - ✔ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகஇலங்கை (P...
   - ✔ University of Wollongong Australia (...
5. பட்டங்கள்: விஞ்ஞானமாணிப் பட்டம், பட்டப்கல்வி டிப்ளோ...
6. தொழில்/பதவி நிலை:-
   - ✔ சட்டத் துறைத் தலைவர்-யாழ். பல்கலைழகம். (மே 2...
   - ✔ பதில் தலைவர், கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்க...
   - ✔ சிரேஷ்ட விரிவுரையாளர்-கல்வியியற்றுயாழ். பல்கலை...
   - ✔ விரிவுரையாளர்-கல்வியியற்றுறை, யாழ்கலைக்கழ...
   - ✔ உதவி விரிவுரையாளர்-கல்வியியற்றுயாழ். பல்க...
   - ✔ பட்டதாரி ஆசிரியர்-யா/புனித பத்திரிசியார்கல்லூரி (ஜன...
   - ✔ சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்-பனைஅபிவிருத்தி...
   - ✔ பௌதிகவியல் உதவி விரிவுரையாளர்-பௌதிகவியற்...
   - ✔ பௌதிகவியல் உதவி விரிவுரையாளர்-பௌதிகவியற்றுறை...

வருகை விரிவுரையாளர்:
- ✔ முதுகல்விமாணிப் பாடநெறி-யாழ்ப்பாணப் பல்கலைக்...
- ✔ முதுகல்விமாணிப் பாடநெறி-யாழ்ப்பாணப் பல்கலைக்...
- ✔ முதுகல்விமாணிப் பாடநெறி-தேசிய கல்வியகம் (தேசி...
- ✔ பட்டப்பின் கல்வி டிப்ளோமா-யாழ்... பல்கலைக்...
- ✔ பட்டப்பின் கல்வி டிப்ளோமா-யாழ்ப்பாணப் பல்கலைக்...
- ✔ பட்டப்பின் கல்வி டிப்ளோமா-திறந்த பல்கலைக்கழக...
- ✔ கல்விமாணிப் பாடநெறி (ஆங்கிலம்)-யாழ்ப்பாணப் ப...
- ✔ கல்விமாணிப் பாடநெறி (ஆங்கிலம்)-தேசிய கல்வி நி...
- ✔ தொழிலாளர் கல்விப் பாடநெறி-யாழ்ப்பாணப் பல்கலை...

7.பெற்ற புலமைப்பரிசில்கள்:-
- ✔ ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில்
- ✔ இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முத...
  தேர்ச்சி பெற்றமைக்கான புலமைப்பரிசில்
- ✔ இலங்கை உயர்கல்வி அமைச்சினால் உலக வங்கி...
  சிறப்புச் சித்தி பெற்று அவுஸ்திரேலியப் பல்கலைக்கழ...
  (M. Ed.) பட்டமும் தொடர்ந்து கல்வியற் கலாநிதி...
  உயர்கல்விப் புலமைப்பரிசில்

8. அண்ணாவியம் செய்த இசைநாடகங்கள்:-
   பூதத்தம்பி, வாலி வதை, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்...
   ஆத்மலிங்கம் பக்த பிரகலாதா, மார்க்கண்டேயர், கண்...
   கருணை, பாரிஜாதம் சதி சுலோசனா, பாஞ்சாலி சபதம்
9. நெறியாள்கை செய்த நவீன நாடகங்கள்:-
   மானுடம் என்பது புல்லோ, விட்டில் பூச்சி, நூறு பூக்கள் மல...
10. நடித்த இசைநாடகங்களும் கதாபாத்திரங்களும்:-

| | |
|---|---|
| பூதத்தம்பி (46 மேடைகள்) | பூதத்தம்பி |
| வாலிவதை | இராமன் |
| சத்தியவான் சாவித்திரி | சத்தியவான், சாவித்... |
| ஸ்ரீவள்ளி | நாரதர்,முருகன்,வே... |
| கோவலன் கண்ணகி | கோவலன், பாண்டி... |
| பவளக்கொடி | அர்ச்சுனன், புலந்திர... |
| மார்க்கண்டேயர் | மார்க்கண்டேயர் |
| கண்ணப்பன் | சிவகோசரியார் |
| பக்த நந்தனார் | வேதியர் |
| சதி அகல்யா | இலக்குமணன் |
| பாஞ்சாலி சபதம் | விதுரர் |
| அரிச்சந்திரா | லோகிதாசன், அய... |

11. நடித்த நவீன் நாடகங்கள் :- விட்டில் பூச்சி, சூரியன், மனு...
12. நடித்த கூத்துகள் :- காத்தவராயன் (சிந்துநடைக் கூ...
ஒரு பயணத்தின் கதை (வட்டக்களரிக் கூத்து)-பிரதம உரைஞ...
13. எழுதிய நூல்கள் :-
   - ✔ மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல் (ஆ...
   - ✔ நாட்கள், கணங்கள்... நமது வாழ்க்கைகள் (சிறுக...
   - ✔ பாட்டுத்திறத்தாலே (சிறுகதைத் தொகுதி)
   - ✔ அம்மாவின் உலகம் (சிறுகதைத் தொகுதி)
   - ✔ புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும் (...
   - ✔ ஏனிந்தத் தேவாசுர யுத்தம்? (கவிதைத் தொகுதி)
   - ✔ இளையோர் இசைநாடகங்கள் (நாடகநூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்லோன்
லாமணி
ளின்
விழா
07.04.2013

### பா கலாமணி விபரக் குறிப்பு

ந்துக் கல்லூரி (ஆரம்பக் கல்வி)
மகா வித்தியாலயம் (இடைநிலைக் கல்வி-உயர் நிலைக் கல்வி)
லக்கழகம், இலங்கை [(B. Sc. (Special-Physics)]
லக்கழகம், இலங்கை (P. G. D. in Edu.)
llongong, Australia (Ed. D)
ம், பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம், கல்வியியற் கலாநிதிப் பட்டம்

பல்கலைக்கழகம். (மே 2011 முதல் இன்று வரை)
றை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யற்றுறை, யாழ். பல்கலைக்கழகம். (பெப்ரவரி 2005 முதல் இன்று வரை)
றை, யாழ். பல்கலைக்கழகம். (ஆகஸ்ட் 1993-ஜனவரி 2005)
யியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம். (ஆகஸ்ட் 1992-யூலை 1993)
த்திரிசியார் கல்லூரி (ஜனவரி 1982-யூலை 1992)
த்தர்-பனை அபிவிருத்திச் சபை, இலங்கை. (1980-1981)
ரயாளர்-பௌதிகவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம். (1978-1979)
யாளர்-பௌதிகவியற்றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம். (1976-1977)

-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா நிலையம்.
தேசிய கல்வி நிறுவகம் (தேசிய கல்வியியற் கல்லூரி நிலையம், யாழ்ப்பாணம்).
-யாழ்[illegible]கலைக்கழகம்.
-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வவுனியா நிலையம்).
-திறந்த பல்கலைக்கழகம், இலங்கை (யாழ். பிராந்திய நிலையம்).
கிலம்)-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
கிலம்)-தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ரிசில்
கலைக்கழகத்தில் முதலாம் வருடப் பரீட்சையில் (GSQ Exam) சிறப்புத்
மைப்பரிசில்
ச்சினால் உலக வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பரீட்சையில்
திரேலியப் பல்கலைக்கழகமொன்றில் முதலில் முதுகல்வியியல் மாணிப்
து கல்வியியற் கலாநிதிப் பட்டமும் பெறுவதற்கான உலக வங்கியின்
ம்
ள்:-
வான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, கோவலன் கண்ணகி, பவளக்கொடி,
ார்க்கண்டேயர், கண்ணப்பன், பக்த நந்தனார், கர்வபங்கம், காத்தவன்
னா, பாஞ்சாலி சபதம்
ள்:-
பூச்சி, நூறு பூக்கள் மலரும், சூரியன், விஞ்ஞான தீபம், மனுஷா மனுஷா
ங்களும்:-
பூதத்தம்பி
இராமன்
சத்தியவான், சாவித்திரி
நாரதர், முருகன், வேடன், நம்பிராசன்
கோவலன், பாண்டியன்
அர்ச்சுனன், புலந்திரன்
மார்க்கண்டேயர்
சிவகோசரியார்
வேதியர்
இலக்குமணன்
விதுரர்
லோகிதாசன், அயலாத்துப் பிள்ளை
பூச்சி, சூரியன், மனுஷா மனுஷா
ராயன் (சிந்துநடைக் கூத்து)-காத்தான்
த்து)-பிரதம உரைஞன்

குடன் இணைதல் (ஆசிரியர் கல்விப் பாடநூல்)
வாழ்க்கைகள் (சிறுகதைத் தொகுதி)
த் தொகுதி)
தைத் தொகுதி)
புதிய அர்த்தங்களும் (இலக்கிய விமர்சன நூல்)
(கவிதைத் தொகுதி)
ள் (நாடகநூல்)

## பல்லாண்டு வாழ்ந்து பணி செய்க





கலாநிதி கலாமணி அறுபது அகவை அடைந்து விட்டார் என்று அறிந்தபொழுது அவரைவாழ்த்துதற்குநாம் மகிழ்வுடன் விரும்பினோம். கலாமணியின் தந்தையார் நாடகக் கலைஞர் அண்ணாவியார் தம்பையா அவர்களை நாம் நன்கு அறிவோம். அவர் வடமராட்சியில் நாடக மேடைகளிலே தோன்றிநடிக்கின்ற காலங்களில் தன்னுடையமகள் பர்வதாமணியையும் மகன் கலாமணியையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். தந்தையினுடைய இந்தப் பயிற்சியினை மகன் கலாமணி நன்கு பயன்படுத்திக் கொண்டார். இதனால் கல்வியியலாளனாக உருவாகிய கலாமணி ஒருநல்ல கலைஞனாகவும் உருவாகிவிட்டார்.

ஆசிரியராகப் பணியாற்றி வந்த கலாமணி தன் முயற்சியினால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வித்துறை விரிவுரையாளரானார். அவுஸ்திரேலியா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. கல்வியியலிலே கலாநிதிப் பட்டம் பெற்று நாடு திரும்பினார்.

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் தலைவராகநான் பலஆண்டுகள் பணிசெய்தேன். இளையவர் ஒருவர் அக்கழகத் தலைவராக வரவேண்டுமென எண்ணினோம். ஒருநாடகப் பாரம்பரியத்தில் வந்தகலாநிதிகலாமணி அப் பதவிக்கு மிகவும் தகுதியானவரென்றுகண்டுஅவரைநாங்கள் தலைவராகத் தெரிவுசெய்தோம்.

யாழ்ப்பாணத்தில் ஒருதமிழ்ச் சங்கம் அண்மையிலேஉருவாகியது. அச்சங்க உருவாக்கத்திலே தொடக்கத்தில் சிலரே முன்வந்து சேர்ந்தனர். அவ்வாறு வந்தவர்களில் கலாநிதிகலாமணியும் ஒருவர். சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக அவர் இருந்து பணியாற்றுகிறார். பல்கலைக்கழக அனுபவத்தினை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும் அறிஞர்கள் வரிசையிலேகலாநிதிகலாமணியும் இடம்பிடித்துள்ளார். கலாமணி குடும்பத்துடன் எங்களுக்கு நீண்டகால நெருங்கிய தொடர்புண்டு. அவருக்கு எங்களுடைய அன்பு என்றுமே உண்டு. எனினும் அறுபது ஆண்டு என்னும் வாழ்க்கை வட்டத்தினை முடித்து அடுத்த வட்டத்திலே கால் பதிக்கும் அவருக்குஎங்கள் வாழ்த்துக்களை கனடாவிலிருந்து தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறோம்.

*பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதிமனோன்மணிசண்முகதாஸ்*

## நண்பன் கலாநிதி தம்பிஐயா கலாமணி



எனது நண்பரது மணிவிழா மலருக்குப் பலரும் பலகோணப் பார்வையில் தமது வாழ்த்துகளை அனுப்பியிருப்பர். அவ் வாழ்த்துகள் உறவுமுறைகளைக் கூறுபவையாகவும் பண்பியல் தன்மைகளைக் கூறுபவையாகவும் கற்கைநெறிப் பண்புகளைக் கூறுபவையாகவும் நாடகவியல் பண்புகளைக் கூறுபவையாகவும் அவற்றில் நண்பரது பங்குபற்றிக் கூறுவனவாகவும் அமைந்திருக்கும்.

ஒருவரை அவரது உண்மையான இருப்புநிலையில் இருந்து அவரை அவராகவே படைப்பது என்பதுமிகக் கடினமானவிடயம் என்பதைப் பல்வேறு நாடுகளைச் சார்ந்த அறிஞர்கள் தெளிவாகக் கூறியுள்ளனர்.

நண்பர் கலாமணி அவர்களுடனான எனது தொடர்பு நீண்டகாலமானது. பல்கலைக்கழக விரிவுரையாளராக அவரை அறிந்து கொண்டதற்கும் பின்னர் ஆறுதல் நிறுவனத்தின் ஆலோசகராகஅறிந்துகொண்டதற்கும் பாரியவேறுபாடுகள் உண்டு.அவர் ஆறுதல்நிறுவனத்தின் ஆலோசர்களில் ஒருவர்,அவர் அத்துடன் பணிப்பாளரும் ஆவார். "வடலிகள் வானுயரும்" என்ற ஆறுதலின் குறிக்கோளை அடைவதற்கு அல்லது விளங்கிக் கொள்வதற்கு மானிடநேயமும் அறிவியல் உள்ளடக்கம் கொண்ட சமுதாயம் பற்றியஒருநேசமான,நேர்மையானபார்வையும் அவசியம். இப்பண்புகளையும் தன்மைகளையும் நிறைவாகத் தன்னகத்தே கொண்டவராக நண்பன் கலாமணியை நான் கண்டிருக்கிறேன், காண்கின்றேன்.

எமது நிறுவனத்தில் பல்வேறு நடவடிக்கைகளிலும் தன்னை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு செயற்படுகின்ற அந்த நண்பருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பும் என்னோடு எமது வடலிகளும் இணைந்துகொள்கின்றனர் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நண்பன் நீண்டகாலம், வாழ்ந்துஎதிர்காலத்தில் தன்நிறைவுகொண்ட, மகிழ்ச்சி நிறைந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு வாழ்நாள் வரை உழைப்பார் என்பது எமது பூரணமான நம்பிக்கை ஆகும்.

*அன்பன், சுந்தரம் டிவகலாலா.*

## பல்துறை ஆற்றல்மிகு பண்பாளன்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்விசார் நடவடிக்கைகளோடு நீண்ட காலமாக நெருங்கிய தொடர்புடையவர் கலாநிதி த.கலாமணி அவர்கள். அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எமதுஆசிரியர் கலாசாலையினுடைய கல்விசார் பயிற்சிகளுக்காக வெளியிலிருந்து அழைக்கப்படுகின்ற வளவாளர்களுள் கலாநிதி கலாமணி அவர்கள் முக்கியமானவர். அவர் மூலம் எமது கலாசாலை பெற்றுக்கொண்ட பணி போற்றுதற்குரியது. காலத்தால் அழியாதது. கற்பித்தல் தொடர்பான விஷேட செயற்றிட்டங்களில் கலந்துகொண்டு ஊதியத்தை எதிர்பாராது பலநூறு ஆசிரியர்களை கல்வியுலகிற்கு வழிப்படுத்தியவர். வளப்படுத்தியவர். பல்கலைக்கழகத்தில் பயிற்சிபெறும் வாய்ப்பற்றஆசிரியமாணவர்கள் பலரும் எமது கலாசாலையினூடாக அவரிடம் பயிற்சிபெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டனர்.

எளிமையாக எல்லோருடனும் பழகும் சுபாவமுடையவர் என்பதாலும் தனது துறையில் ஆற்றலும் அறிவும் ஆளுமையும் மிக்கவர் என்பதாலும் எல்லோரையும் தன்பக்கம் ஈர்த்துக்கொள்ளும் வல்லமையுடையவர். அதுமட்டுமின்றி அனைவரையும் தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தும் உயர்ந்த பண்பு அவரிடம் உண்டு. மற்றவரிடம் காணப்படுகின்ற நல்ல விடயங்களை மனமுவந்து பாராட்டும் நல்லுள்ளம் கொண்டவர். தன்னைப் போலமற்றவர்களும் உயர்நிலை அடையவேண்டும் என்ற வாஞ்சையுடையவர்.

சிரேஷ்ட விரிவுரையாளர், வளவாளர் என்றபணிகளுக்குஅப்பால் அவர் சிறந்தகு கலைஞர். மரபுவழிக் கலைகளை அழியவிடாது காத்துவருகின்ற அரும்பணியை ஆற்றி வருகின்றார். இயக்குநராக, நடிகராக நாடகங்கள் பலவற்றை ஆற்றுகை செய்துள்ளார். இனிமையான தனது குரலால் எல்லோரையும் தன்பக்கம் ஈர்த்து வைத்திருக்கும் வல்லமை அவருக்குண்டு. எழுத்துத் துறையிலும் எண்ணிறைந்த பணிகளை ஆற்றியுள்ளமை அவரது ஆளுமையின் மற்றொரு பரிமாண மாக அமைகின்றது. இத்தனை சிறப்புகளையுடைய கலாநிதி கலாமணி அவர்கள் மேலும் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும். அவரது கல்விப் பணியும் கலைப் பணியும் சமூகத்திற்கு மேலும் கிடைக்க வேண்டும் என எமது ஆசிரியர் கலாசாலை சமூகத்தின் சார்பில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

*வே.கா.கணபதிப்பிள்ளை, அதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.*

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



எமது பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி த.கலாமணி அவர்களுடைய மணிவிழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் கடந்தபலவருடங்களாகக் கல்வியியற்றுறையில் சேவையாற்றி வருகின்றார். நல்லாசிரியராக,சிறந்த இசைநாடகக் கலைஞராக, அண்ணாவியாராக,எழுத்தாளராக, இலக்கியவாதியாக, விமர்சகராகப் பன்முகஆளுமைகளைவெளிக்காட்டி வருகின்றார்.

வடமராட்சி அல்வாய் கிராமத்தில் பிறந்துநெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பேராதனைப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலிய வூலொன்கொங் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்விபயின்றவர்.

மேலும்,சமகாலக் கல்வித்துறை அபிவிருத்தி, சீர்திருத்தங்கள் தொடர்பாக எமது பிரதேசப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்களுக்குப் பல்வேறு செயலமர்வுகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொண்டுசிறந்த சேவையையும் ஆற்றிவருகின்றார்.

கலாநிதி த. கலாமணிஅவர்களுடையமாணவர்களும் ஊரவர்களும் இணைந்து அவருக்கு மணிவிழா எடுப்பது பாராட்டத்தக்கது. இம்மணிவிழாஅமைப்பினருக்கும் எனதுவாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் கலாநிதி த. கலாமணிஅவர்கள் சிறந்தகல்விச் சேவையாற்றிநல்வாழ்வுவாழஎன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*பேராசிரியர் வசந்திஅரசரத்தினம், துணைவேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத் துறைத் தலைவரும் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்வி ஆலோசனைச் சபை உறுப்பினருமான கலாநிதி த.கலாமணிஅவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தியைவழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பன்முக ஆற்றலும் ஆளுமையும் உயர்ந்தமானிடப் பண்பும் கொண்ட நல்லாசிரியராகக் கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக எமதுமண்ணில் இவர் கல்விச் சேவை ஆற்றிவருகின்றார்.

எமது யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி ஆலோசனைச் சபை உறுப்பினராக இருந்து கல்லூரி வளர்ச்சிக்கு ஒத்துழைத்ததுடன் தேசிய கல்விநிறுவக B. Ed. ஆங்கிலப் பாடநெறி M. Ed.பாடநெறிஆகியபாடநெறிகளைநாம் நடத்துவதற்குப் பேர் ஒத்துழைப்பையும் நல்கிவருபவர். முன்மாதிரிக் கல்வியியலாளராக இருந்து ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவக் கல்வியைவழங்குவதில் வல்லவர். ஆசிரியர்களின் உயர்கல்வியைவிருத்தியாக்க,அவர்களுடையஆய்வுப் புலமையை உயர்விக்க வழிகாட்டி வருபவர். சிறந்தகல்வியியல் எழுத்தாளர், சிறுகதை, இலக்கியஎழுத்தாளர், விமர்சகர், பேச்சாளர்,நாடகத் துறைசார் ஆற்றலுடைய அருமையான கலைஞன், அண்ணாவியார் என இவருடையபன்முகஆற்றல்கள் போற்றுதலுக்குரியனவும் உன்னதமானவையுமாகும். தனது வாழ்வில் பலசாதனைகளை ஏற்படுத்தியிருக்கும் கலாநிதி த. கலாமணி அவர்களுக்கு மணிவிழா எடுப்பது போற்றுதலுக்குரியது. மணிவிழாக் குழுவினரையும் இவ்வேளைபாராட்டுகின்றேன்.

சிறந்த கல்வியியலாளரும் மனிதப் பண்புமிக்கவரும் பண்பானவருமானகலாநிதி த.கலாமணிஅவர்கள் தொடர்ந்துஎமதுமண்ணில் சிறந்தகல்விப் பணியாற்றவேண்டும். நல்லஉடலாரோக்கியத்துடன் நல்வாழ்வுவாழ இவ்வேளை இறையருளை வேண்டுகின்றேன். எனது இதயபூர்வமானமணிவிழாவாழ்த்துகளையும் இவ்வேளை தெரிவித்துக் கொள்கிறேன்.

*S. K.யோகநாதன் (பீடாதிபதி)*
*யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி*

## பன்முக ஆளுமையாளன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி த.கலாமணி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக நீண்டகாலம் பணியாற்றி கல்வி உளவியல், கல்வித் தத்துவம், கல்வி அளவீடும் மதிப்பீடும்,ஆய்வு முறையியல் போன்ற துறைகளில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைத் தக்கவைத்த பெருமைக்குரியவர். பௌதிகவியற்றுறையில் சிறந்த ஆசானாக விளங்கியது மட்டுமன்றி கல்வித் துறையிலும் ஆழ, அகல கால் பதித்து கல்விமான்கள் பலரை, கல்வியியலாளர்களை உருவாக்கித் தன்னை ஓர் உயர்நிலையில் நிறுத்திக்கொண்டவர். தான் செய்யும் வேலையைக் கடமையுணர்வோடுநேசித்து,மாணாக்கர் மீது அக்கறை கொண்டு, அன்பும் கண்டிப்பும் பொருந்தக் கடைப்பிடித்து,சமூகம்சார் மேம்பாட்டுக்காக உழைத்து, கல்விச் சமூகத்தின் நன்மதிப்பைத் தனதாக்கிக் கொண்டவர். தன்னிடம் கல்விபயிலும் மாணவர்களை மாணாக்கராக, நண்பராக மதித்து இதமான, மென்மையான வார்த்தைகளால் ஊக்கப்படுத்தி அறிவுரை பகர்ந்து,ஆற்றுப்படுத்துவதிலும் வல்லவர்.

கலாநிதி கலாமணி அவர்கள், கல்வித்துறை விரிவுரையாளர் மட்டுமன்றி சிறந்த நாட்டுக் கூத்து, நாடகக் கலைஞருமாவார். இவரே பலநாட்டுக் கூத்துக்களையும் நாடகங்களையும் நடித்து,நெறியாள்கைசெய்துமேடையேற்றியமை இவரது பல்துறை ஆளுமைக்குத்தக்க எடுத்துக்காட்டாகும். மேலும் இவரதுதமிழ்மொழிப் புலமையும் இலக்கியஆர்வமும் தெள்ளிதின் எடுத்துரைக்கும் பேச்சுவன்மையும் இவரது ஆளுமையின் பிறிதொரு வெளிப்பாடாகும்.

வடக்குமாகாணப் பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு விரிவுரையாளராக இருந்துஅவர்களின் கற்றல் கற்பித்தல் வாண்மைவிருத்திச் செயற்பாடுகளுக்கு உரமூட்டியதோடு ஒருவகையில் வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கும் பக்கபலமாக அமைந்தவர். வடமாகாணக் கல்வித் திணைக்களத்தோடும் அதற்கு அப்பாலும் கல்விசார் விசேட செயற்றிட்டங்களுக்கு வளவாளராகவும் ஆலோசகராகவும் செயற்பட்டுவடமாகாணத்திற்குப் பலம் சேர்ப்பவர்.

சிறந்த கல்வியியலாளன், நற்பண்பாளன், ஆற்றல் மிகுபடைப்பாளி, சமூக அக்கறையாளன் என்று பலவகையிலும் சிறந்து விளங்கும் கலாநிதி கலாமணி அவர்கள் மேலும் பலசிறப்புக்களைப் பெற்று நலமுடன்வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்

*வ.செல்வராசா, மாகாணக் கல்விப் பணிப்பாளர்.*

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலரின் வாழ்த்து



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் என்றவகையில் கலாநிதி த. கலாமணி அவர்களுக்கு மணி விழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்றமகிழ்ச்சிஅடைகின்றேன். கலாமணி அவர்களின் பல்பரிமாண ஆளுமையினைப் பார்த்துப் பெருமை கொள்பவர்களுள் நானும் ஒருவன். இவர் ஒருகல்வியியற்றுறை விரிவுரையாளர் என்பதற்கு மேலாக வடமராட்சிக்கே உரித்தான கல்விப் புலமையும் நிர்வாகத் திறமையும் கொண்டஒருவராக இருந்ததுடன் இயல்பாகவாய்க்கப் பெற்றகுரல் வளமும் நடிப்பாற்றலும் இலக்கியஆர்வமும் இணைந்திருந்தமையினால் தொழில் முறைக்கப்பால் சிறந்ததோர் இசைநாடகக் கலைஞனாகவும் இலக்கியவாதியாகவும் பிரகாசித்துவந்தார்.

இவர் எமது பிரதேச கலாசாரபேரவையின் ஆரம்பகால உறுப்பினராகவும் திருவுடையாள் மலர்க் குழுவின் இணையாசிரியர்களுள் ஒருவராகவும் இருந்து காத்திரமான சேவையாற்றிப் பல நல்ல அறுவடைகளைத் தந்திருப்பது இவரது சேவைக்கான சான்றாகும். குறிப்பாக எமது நான்கு திருவுடையாள வெளியீட்டுக்கும் இவரது பங்களிப்பு அளப்பரியது. இவர் நம் மத்தியில் உள்ளபெரியதொரு வளம் என்பதனால் எனக்குமுன்பிருந்தவர்களே அவரை நன்கு பயன்படுத்தியிருந்தனர். இதற்கு எனது மனப்பூர்வமான நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

மணிவிழாநாயகன் சகலசௌபாக்கியங்களுடனும் நெடுங்காலம் வாழ்ந்து அவரதுசேவையிற் சிறக்கமீண்டும் வாழ்த்துகளைக் கூறிஅமைகின்றேன்.

*ச. சிவஸ்ரீ, பிரதேசசெயலாளர், பிரதேசசெயலகம், கரவெட்டி*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

**ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்**

**புனர்பூசம் 4 ஆம் பாதங்கள், பூசம், ஆயிலியம்**

**வழிபாட்டால் திருப்தி காணும் வருடம்!**

**உதவிகள் செய்தவன் மூலம் நல்ல பதவிகளை வரவழைத்துக் கொள்ளும் கடக இராசி நேயர்களே!**

"விஜய" வருடம் உங்களுக்கு வெற்றிகளை கொடுக்கும் ஆண்டு தான். என்றாலும், அதைப் போராடித்தான் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கமும், அர்த்தாஷ்டம இராகுவின் ஆதிக்கமும் இருப்பதால் எண்ணங்களை எளிதில் செயலாக்குவது கடினமாகும். இருந்தாலும், இறைவழிபாட்டில் நீங்கள் முழுமையாக கவனம் செலுத்தும் பொழுது அரைகுறையாக நின்ற பணிகளும் தொடரும். அன்றாட வாழ்க்கையும் நன்றாக அமையும்.

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் உச்சம் பெற்று குருவோடு சஞ்சரிக்கிறார். தனாதிபதியும் உச்சம் பெற்று தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். யோகாதிபதி செவ்வாயும் சொந்தவீட்டில் இருக்கிறார். விரயாதிபதி புதனும் நீச்சம்.

இத்தனை கிரகங்களும் உங்களுக்கு நன்மையை வழங்க ஆயத்தமாக இருக்கும் பொழுது சப்தம, அஷ்டமாதிபதியான சனி மட்டும் உச்சமும் பெற்று, அர்த்தாஷ்டம சனியாகவும் விளங்குவதால் வளர்ச்சிக்கு மத்தியில் தளர்ச்சி ஏற்படலாம். இந்த விதமான கிரக அமைப்புகள் இருக்கும்போது மகத்துவம் கிடைக்க மந்தன் சனியை கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள். சிந்தனையை வெற்றிபெற வைப்பது வழிபாடுகள்தான்.

**நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்பவர்கள்!**

சாமர்த்தியாகப்பேசி சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கண்டித்துப் பேசுவீர்கள். கருணை உள்ளத்தோடும் காட்சியளிப்பீர்கள். இருமுகத்தோற்றம் கொண்ட உங்களை எவராலும் புரிந்து கொள்ள இயலாது. கோடீஸ்வரராக இருந்தாலும், கூலித்தொழிலாளியாக இருந்தாலும் சரி, நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளே இருக்கும். வி.ஐ.பி.க்களின் பட்டியலில் விரைவில் இடம்பிடிப்பீர்கள். பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும் வரை விடமாட்டீர்கள். உங்கள் இராசிநாதன் சந்திரன் என்பதாலும் அது வளர்ந்து தேயும் கிரகம் என்பதாலும் ஏற்ற இறக்கமான

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக் கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.**

த்த நிதியையும் எடுத்து, அவைகளுக்கான ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகை செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

இருப்பினும் வரவு திருப்திகரமாகவே இருக்கும். காரியங்கள்



கடைசி நேரத்திலேயே கைகூடிவிடும். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதால் சென்ற வருடத்தில் சிலரிடம் ஏற்பட்ட அனுபவத்தால் ஏமாற்றங்களை முறிய

தேர்ந்தெடுத்துச் சூட்டுவது நல்லது.

**மாறிடும் குரு கூறிடும் பலன்கள்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விபரீத இராஜயோகம் செயற்படப்போகிறது. பொதுவாக 6 க்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜயோகம் உருவாகும். எனவே, நீங்கள் திட்டமிடாது செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும்.

எல்லா இராசிக்கும் போல் குருப் பெயர்ச்சியானாலும்கூட உங்கள் இராசியைப் பொறுத்தவரை தன்வீட்டைத் தானே பார்க்கிறார். எனவே, 6ஆம் இடம் புனிதமடைகிறது. நோய் நொடிகளையும் கடன் சுமைகளையும் எதிரிகளின் பலத்தையும் உணர வைக்கும் அந்த இடம்புனிதமடைவதால் குருப்பெயர்ச்சியின் விளைவாக நோய் நொடிகள் அகலும். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, கல்விக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தாய்வழி ஆதரவு பெருகும். தக்கசமயத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள்.

க்கு அதிபதியாகிறார். அதன் பார்வை சனியின் மீது பதியும் பொழுது பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகும். செவ்வாய், சனி பார்வைக் காலத் தில் மிகுந்த பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும்.

அங்காரகப் பரிகாரமும் சர்ப்ப சாந்தியும் யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு ஸ்தலங்களில் செய்தால் சந்தோஷத்தை நாளும் தக்க வைத்துக் கொள்ளலாம்.

**குருவின் வக்ர காலமும் செவ்வாயின் வக்ர காலமும்!**

13.11.2013முதல் 12.03.2013 வரை குரு வக்ரம் பெறுகிறார். 6 க்கு அதிபதியாக குரு உங்கள் இராசிக்கு அமைவதால் கொடுக்கல்- வாங்கல்களில் திடீர் திருப்பம் ஏற்படும். வராத கடன்கள் வசூலாகும். எதிரிகளின் பலம் குறையும். உடல் ஆரோக்கியத்தில் ரண் சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் இனி சாதாரண சிகிச்சை போதும் என்று சொல்லுமளவுக்கு குணமாக்கிக் கொண்டே வரும்.

9 க்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் தந்தை வழி விரோதங்கள் உண்டாகும். பங்காளி பகைகளும் பக்குவமில்லாத உறவினர்களின் தொடர்பால் பிரச்சினைகளும் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கும். வாகனங்களை மாற்றிக் கொள்ள முன்வருவீர்கள்.

டிப்பீர்கள். குருப்பெயர்ச்சி வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

விஜய ஆண்டின் தொடக்கத்தில் தனாதிபதி உச்சம் பெற்றிருக்கிறார். எனவே, பணத்தேவைகள் பூர்த்தியாகும். எந்தவொரு காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிக்க நினைத்தாலும் சனி கொஞ்சம் தாமதப்படுத்தலாம். தாமதத்தை தவிர்க்க சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

தொழிலுக்காக எவ்வளவு தொகை கடன் வாங்கி இருந்தாலும் அவ்வளவு தொகையையும் திருப்பிக் கொடுக்கும் அளவிற்கு ஆதாயம் அதிகரிக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

குருவின் பார்வை பலத்தால் பயணங்கள் அதிகரிக்கும். பக்கபல

## வெற்றிகளையே தரும் ஆண்டு!

வாழ்க்கையே உங்களுக்கு அமையும்.

களத்திரக்காரகன் உங்கள் இராசிக்குப் பாதகாதிபதியாக இருப்பதால் தான், கல்யாண காலத்தில் பொருத்தம் பார்த்துச் செய்வதால்தான் வருத்தம் இல்லாத வாழ்க்கை அமையும்.

**விஜய ஆண்டின் தொடக்கம் வீடுகட்டும் வாய்ப்புக் கிட்டும்!**

ஆண்டு தொடங்கும் பொழுதே அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் விரயங்களே மேலோங்கும். எனவே, வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சி கைகூடும். குடும்பத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவது மட்டுமல்ல, குழந்தைகளுக்காகச் சேமி

மாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் உயரும். குரு சந்திரயோகம் செயற்படுவதால் உத்தியோகத்தில் இருப்பவர்கள்கூட இடமாற்றம், உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றைக் காண்பர்.

வி.ஆர்.எஸ். பெற்று விருப்ப ஓய்வில் வந்தவர்கள் புதிய தொழில் தொடங்கப் பொன்னான தருணமிது. தொழில் தொடங்க நினைப்பவர்கள் யார் பெயரில் தொழில் தொடங்கினால் எல்லையில்லாத அளவு லாபம் வரும் என்பதை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகு தொடங்கும் தொழிலுக்கு [illegible] நல்ல பெயரை எண்கணித ரீதியாகத்

நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நிதி வந்து சேர்ந்து புதிய வண்டி வாகனங்கள் வாங்க முற்படுவீர்கள். அரசுவழி ஆதரவு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சிக்கும் வித்திடுவீர்கள்.

**மந்தன் சனியால் வரும் மாற்றங்கள்!**

# கடகம்



சனி 4 ஆம் இடத்தில் உச்சம் பெற்று, வருடம் தொடக்கத்திலேயே வக்ரமும் பெற்று சஞ்சரிக்கின்றார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாயின் பார்வை காலம் ஏற்படுகிறது.

உங்கள் இராசிக்கு 7,8 க்கு அதிபதியான சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, மற்றவர்கள் கருத்தைப் புரிந்துகொண்டு நடப்பது நல்லது. குடும்பச் சுமை கூடும். வரவு ஒருமடங்கானால் செலவு இருமடங்காகும். உடன்பிறப்புகள் உங்களுக்கு ஒத்துவர மறுப்பர். கடன்சுமைகள் அதிகரிக்கும். திடீர்ப் பயணங்களைத் தள்ளி வைப்பது நல்லது. பூர்வீக இடம் சம்பந்தமாக எடுத்த முடிவில் மாற்றம் ஏற்படும்.

செவ்வாய் உங்கள் இராசிக்கு 5,9

**பலன் தரும் பரிகாரம்!**

**திங்கட்கிழமை தோறும் நம்பிக்கையோடு தும்பிக்கையானைத் தொழுது வழிபாடு செய்யுங்கள். கவலைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.**

செவ்வாயின் வக்ர காலமான 01.03.2014 முதல் 13.04.2014 வரை பிள்ளைகளின் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய நேரமாகும். அவர்களை அன்போடு திருத்திக் கொண்டு வருவதும் ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கச் சொல்வதும் உங்கள் பொறுப்பாக அமையும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். அங்காரகனுக்கு பரிகாரங்கள் செய்தால் தங்கு தடைகள் அகலும்.

**கடக இராசியில் பிறந்த பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரம். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தோடு வருடம் பிறப்பதால் குடும்பச் சுமை கூடும். பிடிவாத குணத்தை மாற்றிக் கொண்டால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். வீட்டுப் பெரியவர்களின் ஆலோசனைகளைக்கேட்டு நடந்தால் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும். கணவன்-மனைவிக்குள் கனிவுகூட விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள்.**

**தெசாபுத்திக்கேற்ப தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால் தித்திக்கும் வாழ்க்கை அமையும். சனி, செவ்வாய் பார்வை காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். யாருக்கும் பணப்பொறுப்பு சொல்வதை யோசித்துச் சொல்வது நல்லது. கோவில் திருப்பணிகளில் ஆர்வம் கூடும். இடமாற்றச் சிந்தனை மேலோங்கும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியின் ஓர் அங்கமாகிய எழுத்தாக்கப் போட்டியின் குறுநாடக ஆக்கம், இலக்கணம், திறனாய்வு, இடைநாடகம் ,சிந்து நடைகக் கூத்து ஆகிய போட்டிகளின் வலய மட்ட முடிவுகளினை துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி. எல் மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

**குறு நாடக ஆக்கம் பிரிவு IV**

வி. மஹிந்தனா (மு/ கற்சிலைமடு அ.த.க பாடசாலை), ப. ஜெசிந்தா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), தி.கஜிதா(மு/ பாண்டியன்குளம் ம.வி)

**பிரிவு V**

ச.குணாளினி (மு/மல்லாவி மத்திய கல்லூரி),ச. கஜிதா(மு/பாண்டியன் குளம் ம.வி), த.விதுஷா(மு/ மாங்குளம் ம.வி)

**இலக்கணம் பிரிவு iv**

எஸ். ஸ்ரெலாமேரி (மு/ஒட்டுசுட்டான் ம.வி), சி.ரவிவர்சன்(மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை), கு. ஆரணி(மு/ பாலிநகர் ம.வி).

**பிரிவு v**

இ. தர்மிதா (மு/முத்தையன் கட்டு வலது கரை ம.வி), ர.சிவகலா(மு/ மாங்குளம் ம.வி), ப.புஸ்பகாந்தி (மு/ ஒட்டுசுட்டான் ம.வி).

**திறனாய்வு பிரிவு iv**

அ.கஜன் (மு/ மல்லாவி மத்திய கல்லூரி), ப.றஜிதா (மு/ பாண்டியன் குளம் ம.வி), மே. றசோப்பிரியா(மு/ ஒட்டுசுட்டான் ம.வி)

**இசைநாடகம்**

மு/மாங்குளம் ம.வி,சிந்து நடைக் கூத்து (காத்த வராயன்), மு/கூழா முறிப்பு அ.த.க பாடசாலை , மு/மல்லாவி மத்திய கல்லூரி. (அ-3-15)

# 30 பந்து பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 30 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மட்டுப்படுத்தப் பட்ட துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை 8.15 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இத் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டியில் காமாட்சி விளையாட்டு கழக அணியை எதிர்த்து ரி.வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி களமிறங்கவுள்ளது.

இன்றைய மாலை நேர போட்டியில் பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியை எதிர் கொண்டு நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி துடுப்பாட களமிறங்கவுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக கழகத்தின் ஆரம்ப கால துடுப்பாட்ட வீரரும் உறுப்பினருமான ட.நற்குனேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-5)

# வானிலிருந்து வீழ்ந்த மர்மப்பொருள்!

## சிலாபம் பகுதியில் பரபரப்பு

பாரிய சத்தத்துடன் வானில் இருந்து விழுந்துள்ள மர்மப்பொருளினால் பள்ளம அம்பகெலே கிராம மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இச்சம்பவம் சிலாபம் பிரதேசத்தில் பள்ளம அம்பகெலே என்ற கிராமத்திலேயே நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.குறித்த கிராமத்திலுள்ள வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை மரத்தின் மீதே இந்தப் பொருள் விழுந்துள்ளது.

11/2 அடி நீளம் 6 அங்குலம் அகலம் 7 கிலோ பாரமானதாகவும் இந்த மர்மப்பொருள் இருந்துள்ளது.

இது தொடர்பாக விளக்கமளித்த வீட்டு உரிமையாளர் பாரிய சத்தத்தையடுத்து என்னவென்று பார்க்க தோட்டத்திற்குள் வந்தேன். அதன் போது வீட்டுக்கு அருகே உள்ள தென்னை மரத்தின் பகுதிகள் சேதமடைந்திருந்தன. தொடர்ந்து பார்த்த போது மர்மப் பொருளொன்று விழுந்துகிடந்துள்ளது.

இரும்பு சட்டம் போன்ற அமைப்பில் அந்தப் பொருள் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிலாபம் பொலிஸாருக்குத்தகவல்கொடுத்திருப்பதாக குமார தெரிவித்தார். (செ-2)

# ஆட்சிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்

நாடாளுமன்ற ஆட்சி முறையொன்று உருவாக்கப்படாவிட்டால் நாடு பாரிய அழிவுகளை சந்திக்க நேரிடும் என மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி முறைமையை மாற்றி அமைப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

1978 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் அமுல்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு இரத்துச் செய்யப்பட வேண்டும்.

அதற்கு பதிலாக புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்படவேண்டுமென அவர் கோரியுள்ளார். (அ-2)

# விடைத்தாள் மீள் திருத்தத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் விடைத்தாள் மீள் திருத்தத்திற்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை மே மாதம் 10 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர் மூலம் தங்களது விண்ணப்பத்தை அனுப்பிவைக்கமுடியும்.

தனியார் பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கலாம். (அ-2)

# இலங்கை உயர்ஸ்தானிகர் பற்றிய கருத்துக்களில் உண்மையில்லை-அனுர

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரிய வசம் பற்றி தமிழக அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்துக்களில் உண்மையில்லை என இலங்கையின் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் இலங்கை உயர்ஸ்தானிகருக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர்.

இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் அனுபவம் நிறைந்த திறமை மிக்கவர்.

இதன் காரணமாகவே இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகரான அவரை நியமித்தோம்.அவர் எந்த சந்தர்ப்பத்திலும் பிழையான கருத்துக்களை வெளியிடமாட்டார்.

தமிழக கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை இந்திய மத்திய அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை என அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (செ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1521-பெர்டினென்ட் மகலன் பிலிப்பைன்சின் சேபு தீவை அடைந்தார்.

★1541-புனித பிரான்சிஸ் சேவியர் போர்த்துக்கீச இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டு லிஸ்பன் நகரில் இருந்து புறப்பட்டார்.

★1795-பிரான்ஸ் மீற்றர் அளவு முறையை அறிமுகப்படுத்தியது.

★1827-ஆங்கிலேய வேதியியலாளர் ஜோன் வோக்கர் தான் கண்டுபிடித்த தீக்குச்சியை விற்பனைக்கு விட்டார்.

★1906-வேசுவியஸ் மலை தீ கக்கியதில் நேப்பில்சில் பலத்த சேதம் ஏற்பட்டது.

★1906-ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் மொரோக்கோ வந்தது.

★1927-முதலாவது தொலை தூர தொலைக்காட்சி சேவை வோஷிங்டன் டிசி. நியூயோர்க் நகரம் ஆகியவற்றிற்கிடையில் இடம்பெற்றது.

★1928-வேல்ட் டிஸ்னி தனது புகழ்பெற்ற கார்ட்டூன் பாத்திரமான மிக்கி எலியின் படத்தை வரைந்தார்.

★1939-இரண்டாம் உலகப் போர்: இத்தாலி அல்பேனியாவை முற்றுகையிட்டது.

★1942-இரண்டாம் உலகப் போர்: ஆட்மிரால்ட்டி தீவுகளை ஜப்பான் கைப்பற்றியது.

★1943-யூதப் படுகொலைகள்: உக்ரேனில் டெரெபோவ்லியா என்ற இடத்தில் நாசிகள் ஆயிரத்து 100 யூதர்களை அரை நிர்வாணமாக்கி நகர வீதி வழியே அழைத்துச் சென்று பின்னர் அவர்களைச் சுட்டுக் கொன்று புதைத்தனர்.

★1945- இரண்டாம் உலகப் போர்: உலகின் மிகப் பெரும் போர்க்கப்பலான ஜப்பானின் யமாட்டோ ஒக்கினாவா அருகில் தென்கோ நடவடிக்கையின் போது அமெரிக்கப் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது.

★1946-பிரான்சிடம் இருந்தான சிரியாவின் விடுதலை அங்கீகரிக்கப்பட்டது.

★1948-உலக சுகாதார நிறுவனம் (who) ஐக்கிய நாடுகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

★1963-யூகோஸ்லாவியா சோசலிசக் குடியரசாகியது. மார்ஷல் டீட்டோ ஜனாதிபதியானார்.

★1964-ஐபிஎம் தனது System/360 ஐ அறிவித்தது.

★1978-நியூத்திரன் குண்டு தயாரிக்கும் திட்டத்தை ஐக்கிய அமெரிக்கா கைவிட்டது.

★1983-ஸ்ரோரி மஸ்கிரேவ், டொன் பீட்டர்சன் இருவரும் மீள் விண்ணோடத்தில் இருந்து விண்ணில் நடந்த முதல் வீரர்களானார்கள்.

★1992-ஸ்ருப்ஸ்கா குடியரசு விடுதலையை அறிவித்தது.

★1994-ருவாண்டாவின் கிகாலியில் டுட்சி இனத்தவர்களை அழிக்கும் படலம் ஆரம்பமானது.

★2001-மார்ஸ் ஒடிசி விண்கலம் ஏவப்பட்டது.

★2003-அமெரிக்கப் படைகள் பக்தாத் நகரைக் கைப்பற்றின. சதாம் உசைனின் அரசு இரு நாட்களின் பின்னர் வீழ்ந்தது.

**பிறப்புக்கள்**

★1889-கப்ரியேலா மிஸ்ட்ரல், நோபல் பரிசு பெற்ற சிலி எழுத்தாளர் (இ.1957)

★1920-ரவி சங்கர், சித்தார் கலைஞர்

**இறப்பு**

★1761-தோமஸ் பேயிஸ், ஆங்கிலேய கணிதவியலாளர் (பி.1702)

**சிறப்பு நாள்**

★உலக சுகாதார தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதலாவலவின் சொத்துக்களை கண்டுபிடிக்க விசேட அணி

செலிங்கோ குழும நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொதலாவலவின் சொத்துக்களை கண்டுபிடிக்க விசேட படையணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

லலித் கொதலாவல மற்றும் கோல்டன் கீ நிறுவனத்தின் ஏனைய பணிப்பாளர்களின் சொத்து விபரங்களைத் திரட்டுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பணிப்பாளர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து அதன் மூலம் ஈட்டப்படும் பணத்தை வைப்பாளர்களுக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் புதிய பணிப்பாளர் சபையொன்று நிறுவி நிறுவனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மத்திய வங்கிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (செ-2)

# போரினால் சிதைந்த வீடுகளுக்கு புனரமைப்பு நிதி வழங்கப்படவில்லை

## முழுமைப்படுத்துமாறு பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் சேதமடைந்த வீடுகள் புனரமைப்பதற்கான நிதி அநேகமானவர்களுக்கு வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுரைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, புதுக் குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் போரினால் முழுமையாகவும் சிறிய, நடுத்தர பெரிய பகுதிச் சேதங்களாகவும் வீடுகள் சேதமடைந்திருந்தன.

மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் இவ்வாறு சேதமாக்கப்பட்ட வீடுகளில் வெயிலிலும், மழையிலிலும் பெரும் சிரமங்களை அனு பவித்தே வாழ்ந்து வருகின்றனர்.

இதில் வீடுகள் பகுதிச் சேதங்களாக சேதமடைந்தவர்களுக்கு 11/2 இலட்சம், 2 இலட்சம், 2 1/2 இலட்சம் என நஷ்டஈடு வழங்கப்பட்டதுடன் ஆயிரத்திற்கு மேற்பட்டோரிற்கு இந் நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

இவ்வாறு நஷ்டஈடு வழங்கப்படாமையினால் அவதியுற்று தமது நகைகளை அடைவு வைத்து கடன் பெற்று வீடுகளை புனரமைத்த மக்களுக்கு புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளது என கூறி நஷ்ட ஈட்டை வழங்க மறுக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு தமக்கு வீட்டுச்சேத நஷ்ட ஈட்டை வழங்க முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# அறுவடைப் பொங்கல் விழா இன்று ஏற்பாடு அநுராதபுரத்தில்

அறுவடைப் புதிர்ப் பொங்கல் விழா இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

அரச அனுசரணையில் நடைபெறும் குறித்த விழாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமை தாங்கவுள்ளார்.

மன்னார் காலந்தொட்டு வருடா வருடம் நடத்தப்படும் இந்த விழா இம்முறை 46 ஆவது தடவையாக அநுராதபுர ஸ்ரீமாபோதி விகாரையில் நடைபெறவுள்ளதுடன் நாடளாவிய ரீதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பெரும்போக அறுவடையின் பின்னர் அந்த புதிர் நெல்லை ஸ்ரீமாபோதிக்கு படைத்து பொங்கலிட்டு நாடு அரிசியில் தன்னிறைவு காண்பதுடன் பொருளாதாரத்தில் நாடு சுபீட்சமடையவும் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

இம்முறை சிறப்பு அம்சமாக நாட்டினதும் நாட்டு மக்களினதும் சுபீட்சத்துக்காக விசேட மத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (செ-2)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து இலங்கை வெளியேற்றப்படலாம்

## ஐ.தே.க. எச்சரிக்கை

சர்வதேச கிரிக்கெட் குழுவினால் கொடுக்கப்பட்ட காலக்கெடு முடிவதன் முன்னர் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தேர்தல்களை நடத்த தவறினால் இலங்கை சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து வெளியேற்றப்படலாம் என ஐக்கிய தேசிய கட்சி எச்சரித்துள்ளது.

முன்னர் வழங்கப்பட்டிருந்த காலக்கெடு இலங்கை கேட்டதற்கு இணங்க 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை நீடிக்கப்பட்டது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேர்தல்களை நடத்த இலங்கை போதிய காலத்தை ஐ.சி.சி கொடுத்துவிட்டது. ஆனால் இலங்கை இடைக்கால குழுவை தொடர்வதில் பிடிவாதமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் அடிப்படையில் நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவை விடுத்து தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா கிரிக்கெட் என்பதில் ஐ.சி.சி அக்கறையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (செ-2)

# உதவி அரசாங்க அதிபர் இன்மையால் புதுக்குடியிருப்பு அபிவிருத்திகள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கு கடந்த நான்கு மாதங்களாக நிரந்தர உதவி அரசாங்க அதிபர் இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கு உதவி அரசாங்க அதிபர் இன்மையால் அதற்குப் பதிலாக புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலரே கடமையாற்றுகின்றார்.

பல அபிவிருத்தித் திட்டங்கள் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் உதவி அரசாங்க அதிபர் இன்மையால் இத்திட்டங்கள் புதுக்குடியிருப்பில் பாதிப் படைவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-3-267)

# நாட்டை பிளவுபடுத்த அரசு இடமளிக்காது

## சதிகளை முறியடிப்போம் என்கிறார் அமைச்சர்

மக்களை இன, மத அடிப்படையில் பிளவு ஏற்படுத்த அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மதங்களிடையே சந்தேகம் ஏற்படத் தேவையில்லை எனவும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு இன முறுகல்களை ஏற்படுத்தும் சதி முயற்சிகளை கட்டுப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், இனங்களுக்கிடையில் குழப்பம் ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர்,

அண்மைக் காலத்தில் கவலைக்கிடமான சில சம்பவங்கள் இடம்பெற்றன. இவற்றுடன் அரசாங்கத்திற்கோ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கோ எதுவித தொடர்பும் கிடையாது.

இனங்களிடையே பிரச்சினை ஏற்படுத்தவோ ஏதும் இனத்தவருக்கு அநியாயம் செய்யவோ அரசாங்கம் இடமளிக்காது.

மக்களை இன, மத ரீதியில் பிரிக்க அனுமதிக்கமாட்டோம். இது தொடர்பில் எந்த இனத்தவரும் சந்தேகப்படத் தேவையில்லை.

அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு இன அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது என்றார் அமைச்சர். (செ-2)

# சிறுவர், வயோதிபர்களை தாக்கும் உஷ்ண கால புதுவகை வைரஸ்

## வைத்திய நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போது நிலவும் அதிக உஷ்ணத்துடன் கூடிய காலநிலை காரணமாக டெங்கு காய்ச்சலை ஒத்த புதுவகை வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக சிறுவர் நோய் தொடர்பான வைத் திய நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா கூறி யுள்ளார்.

சிறுவர்களையும் பெரியவர்களையும் தாக்கக்கூடியதாக இந்த வைரஸ் நோய் காணப்படுவதால் காய்ச்சல் பீடித்தவுடன் வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.


மூன்று நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின் வைத்தியரின் பரிந்துரையுடன் இரத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.


மேற்படி காய்ச்சலுக்கு பரசிட்டமோல் வில்லைகளே பயன்படுத்த வேண்டும். ஏனெனில் மேற்படி வைரஸ் நோயாயின் வேறு நிவாரண வில்லைகள் பாவித்தால் அதிக இரத்த ஓட்டம் ஏற்படும் எனவும் எச்சரிக்கிறார்.

கடுமையான காய்ச்சல், கடுமையான தலைவலி, மூட்டுக்கள் நோவு, உடல் உளைச்சல் என்பனவே இந்த நோய்க்கான அறிகுறியாகும்.

மேலும் இந்த வெப்ப கால நிலையால் சிறுவர்களின் தோலில் வெயில்கூரு கொப்பளங்களும், கை கால் வாய்ப்பகுதிகளில் சிறு புண்களும் கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

இச்சந்தர்ப்பங்களில் உடலை அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம். அதிகமாக நீர் ஆகாரங்களை அருந்துவதும் நோய் நிவாரணியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-2)






திருகோணமலை பத்திர காளி அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் பத்துத்தினங்களும் தொடர் தெய்வீகப் பேருரையாற்றிய தமிழருவி த.சிவகுமாரனுக்கு ஆதீனகர்த்தா சிவ ஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி பூமாலை சூட்டி கௌரவிப்பதையும் சொற்பொழிவில் கலந்து கொண்ட அடியார்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் வருவாயில் தான் குடும்பம் ஓடுகிறது

சுப்ரமணியபுரம் படம் மூலம் டைரக்டர் சசிகுமாரால் தமிழ் சினிமாவில் அறிமுகம் செய்யப்பட்டவர் நடிகை சுவாதி. இப்படத்தில் வரும் கண்கள் இரண்டால்... பாட்டு மூலம் தமிழ் ரசிகர்களை கட்டி இழுத்தார் என்று தான் சொல்ல வேண்டும். தமிழ் சினிமாவில் பெரிய ரவுண்ட் வருவார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் தமிழில் போராளி படத்திற்கு பிறகு பெரிய வாய்ப்பு எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை. தெலுங்கில் மட்டும் அவ்வப்போது சிறிய வேடங்களில் தலை காட்டி வந்தார். இந்நிலையில் தான் ரொம்பவும் கஷ்



டப்படுவதாக கூறியுள்ளார். இதுகுறித்து சுவாதி கூறியுள்ளதாவது. சினிமாவில் நான் ஒன்றும் பெரிதாக சம்பாதிக்கவில்லை. சில படங்களில் நடித்திருந்தாலும் இன்னும் நடுத்தர குடும்ப சூழ்நிலையில் தான் இருக்கிறேன். என்னிடம் ஆடம்பர கார் கிடையாது. ஆடம்பர பங்களா கிடையாது சிறிய வீட்டில் தான் வசித்து வருகிறேன். தந்தையின் வருவாயில் தான் குடும்பம் நடக்கிறது. இதனால் கஷ்டப் படுகிறோம் என்று கூறியுள்ளார்

இயக்குநர் ஹரி இயக்கத்தில் நடிகர் சூர்யா நடிக்கும் படம் சிங்கம் 2, முன்னதாக சூர்யா அனுஷ்கா நடித்த சிங்கம், ஒரு சிறந்த வெற்றி படமாக அமைந்தது. இந்நிலையில், தற்போது அனுஷ்கா ஷெட்டி, ஹன்சிகா மோத்வானி, விவேக்,. சந்தானம் மற்றும் பலர் நடிக்கும் படமாக சிங்கம் 2 உருவாகிறது. இதுகுறித்து சூர்யா கூறுகையில், 'இதுவரை எனக்கு அமைந்த அக்ஷன் படங்களில் சிறந்த படமாக ஹரி இயக்கும் 'சிங்கம் 2 அமையும். இதற்காக தென் னாபிரிக்காவில் படமாக்கப்பட்ட காட்சிகள் எல்லோரையும் கவரும் என நம்பிக்கை ,தெரிவித்திருக்கிறார் சூர்யா.




# சிறிய பாத்திரம் வேண்டாம்


விஜய் நடிக்கும் ஜில்லா படத்தில் மகத் ஜோடியாக நடிக்க நிஷா அகர்வாலை கேட்டபோது அவரின் அக்கா காஜல் அகர்வால் மறுத்துவிட்டாராம்.

நேசன் இயக்கத்தில் விஜய், காஜல் அகர்வால், மோகன்லால், மகத் உள்ளிட்டோர் நடிக்கும் படம் ஜில்லா. இதில் மதுரைக்காரராக வருகிறார் விஜய்.

காஜலுக்கு நிஷா அகர்வால் தங்கை. அவர் அக்காவைப் போன்று தெலுங்கு படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். அவர் தமிழில் நடித்த இஷ்டம் படம் வந்ததும் தெரியவில்லை, போனதும் தெரியவில்லை. இந்நிலையில் ஜில்லா படத்தில் நடிக்க நிஷாவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஜில்லா படத்தில் விஜய்யின் தம்பியாக நடிக்கும் மகத்துக்கு ஜோடியாக நடிக்க நிஷாவை கேட்டார்களாம். ஆனால் சிறிய கதாபாத்திரங்களில் எல்லாம் என் தங்கை நடிக்கமாட்டார் என்று காஜல் சொல்லிவிட்டாராம். என் தங்கை நிஷா நல்லா வருவாள். பெரிய நடிகை ஆவாள் என்று அக்கா காஜல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நிஷா நடித்த முதல் தமிழ் படமான இஷ்டம் ஓடாவிட்டால் என்ன, நான் கூட ஆரம்பத்தில் நடித்த தமிழ் படங்கள் ஓடவில்லை. பொறுமையாக இருந்து நடித்ததில் தற்போது நல்ல பலன் கிடைத்துள்ளது. அது போன்று தான் என் தங்கைக்கும் என்றார் காஜல்.



# 'உ' சர்ச்சையில்

'உ' படத்தலைப்பு தன்னுடையது என உரிமைகோரி கோலிவுட்டின் இரண்டு படத்தயாரிப்பு நிறுவனங்கள் களத்தில் குதித்துள்ளன. ஃபீனிக்ஸ் பிக்சர்ஸ் தயாரிப்பில் ஆஷிக் இயக்கத்தில் தம்பி ராமையா முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க, சுப்பர் சிங்கர் ஆஜீத் உட்பட பல புதுமுகங்கள் நடிப்பில் உருவாகி வரும் படம் 'உ'.

இந்தப் படம் படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து ரிலீசுக்கு ஆயத்தமாகி வரும் நிலையில் திடீரென்று தமிழக ஊடகங்களுக்கு 'உ' என்ற தலைப்பிடப்பட்டு வேறு ஒரு படத்தின் செய்தி வந்தது. இதனையடுத்து, இரு தரப்பும் தங்கள் மோதலை ஆரம்பித்துள்ளன.

F1 Studio சார்பில் எஸ்.எஸ். வாசன் முதன் முறையாக 'உ' என்ற தமிழ் படத்தைத் தயாரிக்கிறார்.இது அதிவேக நாகரிக வளர்ச்சியில் கண்மூடித்தனமாக வாழும் மனிதர்களின் வாழ்வில் நடக்கும் சுவாரஸ்யமான விடயங்களை சொல்கிற படம்தான் இந்த 'உ'.

இப்படி செய்தி வந்ததைக் கேள்விப்பட்ட இன்னொரு 'உ' படத்தின் இயக்குநர் ஆஷிக் தன் பி.ஆர். ஓ வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நாங்கள் 'உ' தலைப்பை 2012ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 30ஆம் திகதி (30.06.2012).தென்னிந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்களிடம் பதிவுசெய்தோம்.

அதன்படி, ஜூலை மாதம் 31 ஆம் திகதி (31.07.2012) 'உ' என்ற இதுவரை வேறு யாரும் பதிவு செய்யவில்லை என்பதை உறுதி செய்த பின் எங்களுக்கு வழங்கினார்கள். 'உ' தலைப்பை 29.06.2013 வரை பயன்படுத்திக்கொள்ளும் உரிமை எங்களுக்கு மட்டுமே உள்ளது. இந்நிலையில் இன்னொரு 'உ' படத்தின் செய்தி எங்கள் 'உ' படத்தின் தலைப்பில் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இது சம்பந்தமான எல்லா ஆதாரங்களும் இந்த தகவலுடன் இணைத்துள்ளோம். முறையாக பதிவுசெய்து நாங்கள் வைத்திருக்கும் தலைப்பை இன்னொரு நிறுவனம் பயன்படுத்துவதில் எந்த நியாயமும் இல்லை. அது ஏற்கத்தக்கதும் இல்லை

கூகுள் இணைய தளத்தில் Vu Tamil Film அல்லது vu tamil movie என்று தேடினால் எங்கள் உ படத்தை பற்றிய செய்திகள், புகைப்படங்கள், போஸ்டர் டிசைன்கள் உடனடியாக வரும்.

இவ்வளவும் நடந்த பின் வேண்டுமென்றே 'உ' படத் தலைப்பை அபகரிக்க திட்டமிட்டு, இப்படி ஒரு செயலில் இறங்கி இருக்கிறார்கள். இவ்வளவும் நடந்திருப்பது அவர்களுக்கு தெரியாதா.... ஒருவேளை இந்த தலைப்பை அவர்கள் முறையாக பதிவு செய்திருந்தால் எங்களிடம் ஒரு வார்த்தை கூட இதுவரை கேட்காமல் இருந்தது ஏன்?

இவ்வளவு நாளும் அமைதியாக இருந்து விட்டு, திடீரென இப்படி கிளம்பி இருக்கிறார்கள். இது ஆரோக்கியமானதல்ல. தெரியாது என்றால் இனிமேல் அவர்கள் எங்கள் தலைப்பை இப்படி முறைகேடாக பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும்.

நாங்கள் இது சம்பந்தமாக தென்னிந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

நாங்கள் தமிழில் 'உ' என்றும் ஆங்கிலத்தில் அதையே ஏரு என்றும் பதிவு செய்துள்ளோம். ஆனால் அவர்கள் ஆங்கிலத்தில் WOO (ஊ) என்று பதிவு செய்து விட்டு அதை தமிழில் 'உ' என்று மாற்றி சொல்கிறார்கள். இது மோசடி ஆகும் என்று 'உ' படத்தின் இயக்குநர் ஆஷிக் கூறியிருக்கிறார்.






'உ' இல் பஞ்ச நாயகர்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைத்து படுகொலைகளுக்கும் நியாயமான விசாரணை தேவை

## கோருகிறார் சஜித்

அனைத்து சட்டவிரோத படுகொலைகள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

காலங்களையோ அல்லது அரசாங்கங்களையோ கருத்திற் கொள்ளாது சகல சட்ட விரோத ப்டுகொலைச் சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

1971 ஆண்டு ஏப்ரல் மாத கிளர்ச்சி முதல் சகல கொலைச்சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய தரப்பினர் என பாரபட்சம் காட்டாது அனைத்து தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஒரு தரப்பினரை குற்றவாளியாக்கும் நோக்கில் அல்லது உண்மையைக் கண்டறியும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாத்தளையில் மட்டுமின்றி ஏனைய இடங்களிலும் இவ்வாறான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தலையீடுகள் இன்றி நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையுடன் வெளிப்படையாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாத்தளை மனித எச்சங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (செ-2)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்து பரீட்சையை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி முதல் மதியம் 12 மணி வரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

விரிவுரையாளர்களின் வழிகாட்டலில் நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு பங்குபற்ற இருப்பவர்கள் தங்களை பதிவு செய்து வழிகாட்டல் கருத்தரங்கில் பங்கு பற்றுமாறு பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-2)

# தமிழீழம் தவிர்க்க முடியாததாகிவிடும்

## யஸ்வந்த் சின்ஹாவின் எச்சரிக்கையை உதாசீனம் செய்து விட முடியாது-ஐ.தே.க

(கொழும்பு)

இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சியின் எச்சரிக்கையை உதாசீனம் செய்துவிட முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது .

இலங்கைத் தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தனி ஈழ இராச்சியத்திற்கு ஆதரவளிக்க நேரிடும் என பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் ய்ஸ்வந்த் சிங்ஹா தெரிவித்திருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.வடக்கு கிழக்கு மக்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வினை வழங்காமையே இந்தியா தலையீடு செய்யக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியை விடவும் பாரதீய ஜனதா கட்சி கடும் போக்கான மதவாத சிந்தனைகளைக் கொண்ட கட்சி எனவும் அந்தக் கட்சியின் எச்சரிக்கையை உதாசீனம் செய்யக்கூடாது என்வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் தடவையாக இந்தியாவின் பிரதான அரசியல் கட்சியொன்று பகிரங்கமாக ஈழம் அமைப்பது குறித்து கருத்து வெளியிட்டுள்ளதாகவும், இது ஆரோக்கியமான நிலைமை கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மையினத்தவருக்கு உரிய முறையில் அரசாங்கம் சலுகைகளை வழங்கத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் தற்போதைய வெளியுறவுக் கொள்கையை துரித கதியில் மீளாய்வு செய்து பொருத்தமானவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# கடத்தலில் ஈடுபட்ட ஜப்பான் பிரஜை கைது

ஒருகோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள் என்பவற்றை நாட்டில் இருந்து கடத்த முயன்ற ஜப்பான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க அதிகாரிகள் குறித்த நபரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர். இவரிடம் இருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களின் பெறுமதி 30 இலட்சம் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுங்க அதிகாரி லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார். (செ-2)

# பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு திட்டம்

பாலியல் துஷ்பிரயோகம் பற்றி பாடசாலை பிள்ளைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கவிருப்பதாக செயற்படும் கொள்கை எனும் நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை தடுப்பதற்கென வடிவமைக்கப்பட்ட இலங்கையின் சமூக ஊடக அமைப்பின் முதலாவது முயற்சி இதுவாகும்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதில் பல சம்பவங்கள் அறிக்கைப்படுத்தப்படாமலே போகின்றன என்றும் செயற்படும் கொள்கை அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் நில்ஹான் டிமெல் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அறிவூட்டுவதற்கு சமூக ஊடகங்கள் மிகவும் சக்தி வாய்ந்த கருவிகளாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இணையத்தில் ஒரு வாரத்தில் 15 நிமிடங்கள் தொண்டு பணிபுரிவதன் மூலம் இந்த சமூக ஊடகத்தில் யாரும் சேர்த்துக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஆரம்ப விழாவில் செயற்படும் கொள்கை அமைப்பின் ஆலோசகர் பிரட்மன் வீரகோன் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய உத்தியோகபூர்வ புள்ளி விபரங்கள் மிதக் கும் பனிப் பாறையின் நீர் மேலே தெரியும் நுனி போன்றதாகும் எனக் கூறினார்.

வருடம் தோறும் ஆயிரக்கணக்கில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் பிள்ளைகளுக்கு உதவுவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியே இதுவாகும்.

நிச்சயமாக அவர்களை நாம் தேடிச் சென்று உதவவேண்டும் என்று செயற்படும் கொள்கை அமைப்பின் முகாமையாளர் இஷானி அலுவிகார தெரிவித்தார். (செ-2)

# முல்லை.பேருந்துகளில் மிதிபலகைப் பிரயாணம்!

## குற்றப்பணமும் விபத்தும் காத்திருக்கிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு பயணம் செய்யும் அரச, தனியார் பேருந்துக்களில் உள்ள மிதிபலகைகளில் நின்று பயணிகள் பயணம் செய்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மேற்குறித்த இடங்களுக்கு செல்லும் அரச, தனியார் பேருந்துகளிலும் முல்லைத்தீவு மாவட்ட அரச, தனியார் பேருந்துகளிலும் சீருடையினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை மிதிபலகைகளில் வைத்தே பேருந்து சாரதியும், நடத்துநரும் பயணத்தை மேற்கொள்கின்றனர். இவ்வாறு மிதிபலகைகளில் பயணிகளை வைத்து பயணம் செய்யும் சாரதிக்கும், நடத்துநருக்கும் குற்றப்பணம் அறவிடுவது வழக்கம்.

இதனால் பல விபத்துச் சம்பவங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

எனவே இச் செயற்பாட்டை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வர வேண்டுமென பயணிகள் கோருகின்றனர்.

இதேபோன்று மிதிபலகையில் பிரயாணம் செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3-267)





மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலையான முருகானந்தா கல்லூரியின் மாணவர்களுக்கான முன்னோடி பதக்கம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளி/முருகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றபோது...
(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பிரதான வீதியில் பாரவூர்தி தீப்பற்றியது

## சாரதி காயம்

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் இடம்பெற்ற தீ விபத்தில் பாரவூர்தியொன்று தீப்பற்றி எரிந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்புவம் இலங்கை அரச போக்குவரத்துச் சேவை டிப்போவிற்கு அருகாமையில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தில் காயமடைந்தவர் மன்னார் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளணர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கை அரச போக்குவரத்துச் சேவை டிப்போவிற்கு அருகாமையில் குவித்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மின் கம்பங்களை வாகனம் ஒன்றில் ஏற்றும் பணியில் வவுனியா மின்சார சபையைச் சேர்ந்த இருவர் ஈடுபட்டு வந்தனர்.

பாரவூர்தியுடன் பெக்கோவின் இணைப்புக்கள் பொருத்தப்பட்ட நிலையில் குறித்த மின் கம்பங்கள் பாரவூர்தியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த சமயம் பெக்கோவின் மேற்பகுதி மேலே காணப்பட்ட அதியுயர் மின் கம்பிகளுடன் முட்டியுள்ளது.

இதன்போது குறித்த பாரவூர்தியில் மின்சாரம் பாய்ந்து உடனே பாரவூர்தி எரிய ஆரம்பித்தது. இதன்போது சாரதியாக செயற்பட்டவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கானார்.

இந்நிலையில் நீண்ட போராட்டத்தின் மத்தியில் அவர் காப்பாற்றப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பாரவூர்தியின் முக்கிய பாகங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-2)

# நிரந்தரத் தீர்வு தமிழீழமே; மாணவர்கள் தீர்மானம்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த அனைத்து சட்டக் கல்லூரி மாணவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கு தனித் தமிழீழமே தீர்வாகும் உள்ளிட்ட ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக சட்டக் கல்லூரி மாணவர் ஆர்.முருகானந்தம் தெரிவித்தார்.

இலங்கையில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை. அதற்கு நம்பத்தகுந்த சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதுடன் அந்த படுகொலைகளுக்கு காரணமாக இருந்தவர்களை தண்டிக்க வேண்டும்.

தனித் தமிழீழமே நிரந்தரத் தீர்வு. அதற்கு ஐ.நா. சபை சார்பாக பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இலங்கை அரசின் மீது இந்தியா பொருளாதாரத்தடை விதிக்கும். அதேவேளை இலங்கை அரசு உடனான அனைத்து உறவுகளையும் துண்டிக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் தொடர் தாக்குதலை நிறுத்தும் அதேவேளையில் கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும்.

தமிழீழ வரலாற்றை தமிழ்நாட்டு மாணவர்களின் பாடநூல்களில் சேர்க்க வேண்டும் ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-2)

# மன்னார் மைதானத்தில் கைக்குண்டு மீட்பு!

மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலய பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் நாளையும் நாளை மறுதினமும் மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக மன்னார் பிரதேச செயலகமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து விளையாட்டு மைதானத்தை துப்புரவு செய்யும் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போது பாடசாலை விளையாட்டு மைதானத்தின் சுற்று மதிலோரத்திற்கு அருகில் கைக்குண்டொன்று காணப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இது தொடர்பில் இராணுவத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் நின்ற அனைவரையும் வெளியேற்றி கைக்குண்டை அவ்விடத்திலேயே செயலிழக்கச் செய்ததாக மன்னார் பிரதேச செயலாளர் செல்லையா தயானந்தா மேலும் தெரிவித்தார். (செ-2)

# தொழிலாளர் உரிமைகளுக்காக அமெரிக்கா நிதிப்பங்களிப்பு

தொழிலாளர் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்கா 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் மிச்சர் ஜே சிசோன் இந்த திட்டத்தை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் ஒழுங்கமைப்பு மற்றும் இலங்கை தொழிற்றுறை அமைச்சின் ஊடாக இந்த நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

நீண்ட கால பெருளாதார அபிவிருத்திக்காக தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர். எனினும் அவர்களின் உரிமைகள் எந்த அளவுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது என்பது கேள்விக்குரிய விடயம்.

இந்த நிலையில் அவர்களின் உரிமையையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டியது எமது கடமை என்ற அடிப்படையில் இந்த நிதி வழங்கப்படுவதாக தூதுவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# பிரான்ஸுக்கான தூதுவராக ஹங்கவத்த நியமனம்

பிரான்ஸ் நாட்டுக்கான புதிய இலங்கைத் தூதுவராக பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் தூதுவராகவும் அவர் செயற்படவுள்ளதுடன் யுனெஸ்கோவிற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் ஹங்கவத்த நியமிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கான நியமனப் பத்திரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹங்கவத்தவிடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க குடியுரிமையைக் கொண்டுள்ள ஹங்கவத்த லாஸ் வெகாஸிலுள்ள நெவடா பல்கலைக்கழகத்தில் குற்றவியல் நீதித்துறையில் பேராசிரியராகவும் உள்ளார்.

மேலும் இலங்கை உள்நாட்டுப் போரின் 2002 முதல் 2009 மே மாதம் இறுதிக் கட்டம் வரையான காலப்பகுதி தொடர்பாக ஆராயும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவில் ஹங்கவத்த உறுப்பினராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# பொதுபலசேனாவை சீர்குலைக்க அரசியல்வாதிகள் முயற்சி

## அமைப்பின் செயலாளர் குற்றச்சாட்டு

பொதுபலசேனா அமைப்பை தடை செய்து அதன் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் சூழ்ச்சியில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், சில இணைய தளங்கள் இணைந்து ஈடுபட்டுள்ளதாக அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து புலனாய்வு பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தமது அமைப்பை சீர்குலைக்கவோ தடை செய்யவோ எந்த சக்திக்கும் இடமளிக்க போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இணைய தளங்கள் ஊடாக பொதுபலசேனாவுக்கு எதிராக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த இணையத்தளங்கள் பொதுபலசேனா அமைப்பை பயங்கரவாத அமைப்பு என தெரிவித்தன.

அதேவேளை பொதுபலசேனா அமைப்பை தடைசெய்ய வேண்டும் என முஸ்லிம் அடிப்படைவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் பொதுபலசேனா அமைப்பின் கடிதத் தலைப்புக்களை பயன்படுத்தி ஊடகங்களுக்கு போலியான அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

அமைப்பின் கடிதத் தலைப்புகள் ஊடாக முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு அறிக்கைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (செ-2)







சர்வதேச மிதிவெடிகள் விழிப்புணர்வு தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இது தொடர்பாக அமைக்கப்பட்ட கண்காட்சி கூடத்தினை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனா, பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

பெண்கள் முதலில் காதலைச் சொல்வதில் ஏதாவது தவறு உண்டா?

*விருப்பத்தை தெரிவிக்க ஆண், பெண் என்ற வேறுபாடு எதற்கு. ஆனால், காதலின் பின் எந்தத் தவறும் நடக்காமல் இருக்க பெண்கள் அவதானமாய் இருப்பது நல்லது.*

கு.குலமகள், யாழ்ப்பாணம்

அன்பின் வியாசரே!

தாங்கள் திருமணமானவரா? இல்லை திருமணமாகாதவரா?

*திருமணம் என்ற சிறையில் அடைக்கப்பட்டு நாற்பது வருடங்கள் ஆகிவிட்டது.*

சி.கோபுரன், கொக்குவில்

வியா சேர்!

போர்த்துக் கொண்டு கோவிலுக்குள் செல்லலாமா?

*போர்த்துக் கொண்டு உள்ளே வர வேண்டாம் என கடவுள் சொல்லவில்லையே?*

சின்னராசா, மட்டுவில்

அன்பின் வியாசரே!

உங்கள் மனைவி உங்களுக்கு அதிசயமா?

*ஆம்.... இரவில் தெரியமாட்டாள் பகலில் பளிச்சென்று தெரிவாள். அப்படியென்றால் அதிசயம்தானே!*

## பிள்ளை காதலிப்பதை அறிந்தும் பெற்றோர்கள் வேறு பெண் அவசரமாய் பார்க்கிறார்களே ஏன்?

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி.

அன்பின் வியாசரே!

இசைக்கும் பசிக்கும் உள்ள ஒற்றுமை யாது?

*இரண்டுக்கும் தேடல் தேவை.*

க.முத்துராசா, கட்டைக்காடு.

அன்பின் வியாசரே!

தான் மட்டும் வாழாமல் பிறர் வாழ்விலும் அக்கறை கொள்பவனைப் பற்றி தங்கள் கருத்து?

*தான் மட்டும் வாழ்பவன் மனிதன். பிறர் வாழ வழி செய்பவன் மாமனிதன். மாமனிதனாய் வாழ நம் ஊர் விடாதே! வதந்திக்கு மூக்கு, காது,முழி வைத்து முழு மனிதனாக்கி விடுவார்களே!.*

எஸ்.மிதுஷா, பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

எந்த ஒரு விடயத்திலும் பிரிவு எனும் மூன்றெழுத்து குறுக்கிட்டு துன்பத்தை தருகிறது காரணம் என்ன?

*மனிதனுக்கு பிரச்சினையான விடயங்கள் அனைத்தும் மூன்றெழுத்துத் தானம்மா.*

ச.வனிஸ் டொறிஷா, யாழ்ப்பாணம்.

அன்புள்ள வியா அண்ணா!

சித்திரை புத்தாண்டுக்கு எங்கள் வீட்டுக்கு வருவீர்களா?

*Sorry டொறிஷா. அன்று தான் என் வீட்டுக்காரியின் சிநேகிதர்கள் விருந்துக்கு வருகிறார்கள். நான் சமைக்க வேண்டும்.*

## தான் மட்டும் வாழாமல் பிறர் வாழ்விலும் அக்கறை கொள்பவனைப் பற்றி தங்கள் கருத்து?

சுப்பிரமணியம், பருத்தித்துறை.

அன்பின் வியாசரே!

மனைவியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒரு சங்கம் விரைவில் நான் அமைக்க இருக்கிறேன். அதற்கு தாங்கள் தலைமை தாங்க முடியுமா?




*ஓ...என் மனைவியின் அடியைத் தாங்கிய எனக்கு இந்த சங்கத்தை தலைமை தாங்குவது ஒன்றும் பெரிதில்லை சுப்பிரமணியம். எப்ப மீற்றிங்க வைக்கலாம்?*

கொற்றையூர் , பா. அனு

அன்பின் வியாசரே!

நாகரிகம் என்ற போர்வையில் இன்றைய இளம் பெண்கள் நாவால் தூற்றும் அளவிற்கு தமது உடைகளை மாற்றியமைத்து விட்டார்கள். இதுபற்றி உங்களது கருத்து என்ன?

*போற போக்கைப் பார்த்தால் முதலாவது பிறந்த நாளுக்கு வாங்கிய சட்டையை முப்பது வயதிலும் போடும் நிலை வந்திடுமோ என எண்ணத் தோன்றுகிறதே!*

அ.சீதாராம், பருத்தித்துறை.

பிள்ளை காதலிப்பதை அறிந்தும் பெற்றோர்கள் வேறு பெண் அவசரமாய் பார்க்கிறார்களே ஏன்?

*ஐம்பது இலட்சத்தை இழப்பதற்கு எந்தப் பெற்றோரால் தான் முடியும்.*

**வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....**

**மனைவி: நமக்கு கல்யாணம் முடிஞ்சு இன்றையோட 10 வருடம் ஆகுதுங்க.**

**கணவன்: எனக்கு மறந்து போச்சு**

**மனைவி: இது கூடவா?**

**கணவன்: நல்ல விடயங்கள் மட்டும் தான் எனக்கு நினைவில் இருக்கும்.**

அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# இரணைமடு - யாழ்ப்பாணம் குடிநீர் திட்டம் முழு கவனத்துடன் மேற்கொள்ளப்படும்

## சந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

இரணைமடு -யாழ்ப்பாணம் குடிநீர் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போது கிளிநொச்சி விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலன்கள் முழு அளவில் பாதுகாக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ்குணவர்தன மற்றும் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டு கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்த்தேவையை நிறைவு செய்த பின்னரே யாழ்ப்பாணத்திற்கான குடிநீரை வழங்க முடியும் என விவசாயிகளும் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். அதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இரணைமடு- யாழ்ப்பாணம் குடிநீர் திட்டம் என்பது ஒரு பிரதேச மக்களின் நலன்கள் கவனத்தில் எடுக்காமல் அவர்களின் நலன்கள் பாதிக்கப்படுகின்ற நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமல்ல. இந்த திட்டம் கிளிநொச்சி மக்கள், விவசாயிகளின் நலன்கள் முழு அளவில் கவனத்தில் எடுக்கப்பட்டே மேற்கொள்ளப்படும். அதற்கான உத்தரவாதத்தினை அமைச்சர் தினேஸ்குணவர்தன, அவ்வமைச்சின் உயரதிகாரிகளும் வழங்கியுள்ளனர். எனவே, கிளிநொச்சி விவசாயிகளும் மக்களும் அதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இரணைமடு- யாழ்ப்பாணம் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற போது இரணைமடுக் குளம் தற்போது உள்ள 34 அடி நீர் கொள்ளளவு 36 அடியாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுகின்ற மேலதிக நீரையே குடிநீராக கொண்டு செல்லப்படும். அத்தோடு இரணைமடு குளத்திற்கு கீழான எல்லா நீர்ப்பாசன வாய்கால்களும் நிரந்தரமாக புனரமைக்கப்படுவதோடு விவசாய வீதிகளும் புனரமைக்கப்படும். மேலும் கிளநொச்சி நகரும் நகரை அண்டிய பிரதேசமும் உள்ளடங்கலாக அறிவியல் நகர் பொறியில் பீடத்திலிருந்து பரந்தன் வரையான 13 கிராம அலுவலர் பிரிவுகள் குடிநீர் வழங்கும் திட்டத்திற்குள் உள்வாங்கப்படும்.

அத்தோடு கிராமிய குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ்தற்போது இயக்கச்சிமுடிவடைந்துமக்கள் குடிநீரை பெற்று வருகின்றனர். அதேபோன்று வட்டக்கச்சி பிரதேச திட்டமும் சித்திரை புத்தாண்டுக்குள் நிறைவடையும். அவ்வாறே அக்கராயன் குடிநீர் வழங்கும் திட்டமும் இவ்வருடத்துக்குள் பணிகள் நிறைவடையும். இதன் பின்னர் இந்த பிரதேச மக்களின் குடிநீர் பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்பட்டு மக்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வார்கள்.

இதனை தவிர பூநகரி பிரதேசத்தில் உள்ள மாளாப்பு பொக்குடையான் குளத்தினை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள், அமைப்பு பிரதிநிதிகள் என்னிடம் அடிக்கடி கோரிக்கைகள் விடுத்து வந்தனர். அந்த கோரிக்கையினை அமைச்சரின் கவனத்திற்கு என்னால் கொண்டுவரப்பட்டமைக்கு அமைவாக 150 இலட்சம் ரூபா நிதி ஆரம்ப மற்றும் திட்ட மதிப்பீட்டு பணிகளுக்காக அமைச்சர் ஒதுக்கீடு செய்துள்ளார். எனவே, பூநகரி மக்களின் நீண்டநாள் விருப்பம் நிறைவேறுவதற்கு இன்று வழி ஏற்படுத்தப்பட் டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (செ-2)

# சிங்கக்கொடிகளை விற்ற வர்த்தகர்களுக்கு சிறை

சிதைந்த சிங்கப் படத்தைக்கொண்ட தேசிய கொடிகளையும் உருகுலைந்த இலங்கையின் அரச இலட்சினைகளையும் பொதுமக்களுக்கு விற்ற புறக்கோட்டை வர்த்தகர்கள் ஆறு பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப் புலி ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனையை நேற்று முன்தினம் விதித்தார். இலங்கை குடியரசை அவமதிக்கும் வகை யில் புறக்கோட்டை பீபல்ஸ்பாக் கடைத்தொ கையில் தமது கடையில் உருக்குலைந்த தேசிய கொடிகளையும் அரச இலட்சினைக ளையும் விற்றதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். தேசிய கொடி அரச இலச்சினை என்பவற்றை விற்கும்போது கவனமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்த நீதவான் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் ஒத்தி வைத்த சிறைத்தண்டனையையும் வழங்கினார். (செ-2)

# கண்ணகை அம்மன் வருடாந்த உற்சவம்

(பூநகரி)

பூநகரி நல்லூர் அருள்மிகு மேளாய் கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் வேள்வி வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை இரவு, பகலாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு தீ மிதிப்பு வைபவம் நடைபெறும்.

அத்துடன் ஆலய மண்டபத்தில் கண்ணகை தரிசனம் என்ற நூல் வெளியீட்டு விழா இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ-2-84)

# கள்ளச்சாராயப் பாவனை முல்லைத்தீவில் அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமான கசிப்பு, கள்ளச் சாரயப் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் வற்றாப்பளை வடக்கு, பள்ளவெளி, செம்மண்மோட்டை, ஈரான் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு மற்றும் கள்ளச் சாராயம் என்பன விற்பனை செய்யப்படுவதனால் சமூக சீரழிவு, பாடசாலை மாணவர்கள் மதுப் பாவனைக்கு அடிமையாதல், குடும்ப வன் முறை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே, இதனைகருத்திற்கொண்டுஉரியநடவடிக்கைஎடுக்குமாறு வற்றாப்பளைமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். பலவிதமான தீங்குகள் மிக்க இரசாயன கலவையினால் தயாரிக்கப்படும்கள்ளச்சாராயங்களைமனிதர்கள் குடிப்பதால் புலன் உறுப்புக்களையும் உடல் ஆரோக்கியத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-3-267)

# பொதுபலசேனாவை கட்டுப்படுத்த விரைவில் சட்டக்கோவை-வாசு

இலங்கையின் இனங்கள் மற்றும் மதங்களுக்கு எதிராக செயற்படும் குழுக்களை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்கான விசேட சட்டக் கோவையினை எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எந்தவொரு இனத்தையோ, மதத்தையோ குறிவைத்து ஏதேனும் ஒரு குழு செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அது பொதுபலசேனாவாக இருந்தாலும் சரி இன, மத உரிமைகளை பாதுகாக்க வேண்டியது சட்டத்தின் கடமையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு பொருளை விட அதை அளிக்கும் முறைதான் மதிப்பு மிக்கது.
-பியேர் கொர்னேயால்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 8 ஏ + 1 பி = 9 ஏ என்ற சமன்பாட்டைப் பாருங்கள்

2012ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பெறுபேற்றின் முடிவுகள் பகுப்பாய்வுக்கு உட்பட்டிருக்கும் இவ்வேளையில்,

9 ஏ எடுத்த மாணவர்களின் சாதனையைப் பாராட்டிதான் ஆக வேண்டும்.

அதேநேரம், 8 ஏ ஒரு பி எடுத்த மாணவர்கள் குறித்து ஆராய்ந்தபோது, மூன்றாவது பாடத் தொகுதியில் உள்ள விருப்பத்துக்குரிய பாடத்தில் ஆங்கில இலக்கியத்தைத் தெரிவு செய்த மாணவர்களே பி எடுத்துள்ளனர்.

விருப்பத்துக்குரிய பாடத் தொகுதியில் தமிழ் இலக்கியம், சித்திரம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்கள் உள்ளன.

இதில் ஆங்கில இலக்கியத்தை தெரிவு செய்த மாணவர்களில் குறிப்பிட்ட தொகையினர் ஏனைய பாடங்களில் 8 ஏ என்ற அதியுயர் பெறுபேற்றை எடுத்துள்ளபோதிலும், ஆங்கில இலக்கியத்தில் பி தரத்தைப் பெற்றுள்ளனர்.

ஆங்கில இலக்கியம் தவிர்ந்த ஏனைய விருப்பத்துக்குரிய பாடங்களில் ஏ எடுக்கின்ற ஒரு மாணவனுக்கு ஈடாக ஆங்கில இலக்கியத்தில் பி எடுத்த மாணவனை சமப்படுத்துவது நியாயமானதும் ஏற்புடையதுமாகும்.

9 ஏ எடுத்த மாணவர்களுக்கு கௌரவிப்பு, அவர்களுக்கு வங்கிகள் அன்பளிப்பு வழங்குதல், ஆளுநர் மட்டத்தில் கௌரவிப்பு செய்தல் என பலவாறான சலுகைகள் கிடைக்கும்போது,

ஆங்கில இலக்கியத்தில் பி உம் ஏனைய பாடங்களில் ஏ யுமாக 8 ஏ 1 பி எடுத்த மாணவர்கள் இச்சலுகைகளை பெறமுடியாது போகும்.

இந்நிலைமையானது ஆங்கில இலக்கியத்தைப் படித்தல், பரீட்சையில் அந்தப் பாடத்திற்கு முகம் கொடுத்தல் என்ற விடயம் வெகுவாகக் குறைந்துபோகும்.

இஃது ஆங்கிலத்தின் அவசியப்பாட்டை அதீதமாக உணர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனலாம்.

ஆகவே, ஆங்கில இலக்கியத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற பி தரத்தை ஏனைய விருப்பத்திற்குரிய பாடங்களின் ஏ தரத்திற்கு சமப்படுத்த வேண்டும்.

அதனால் தான் 8 ஏ + பி = 9 ஏ என்ற புதியதொரு சமன்பாட்டை அறிமுகப்படுத்துகின்றோம்.

இச்சமன்பாட்டை எங்கள் கல்விச் சமூகம் கருத்தில் எடுக்க வேண்டும் என்பது நம் விருப்பு நடக்குமா?

# வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மாவை எம்.பி முதன்மை வேட்பாளர்!

## சிங்கள ஊடகச் செய்திக்கு மறுப்பு

வட மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் இன்னும் எந்த தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் நடைபெறவுள்ளதாக கூறப்படும் வட மாகாண சபைத் தேர்தலின்போது, முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜா நிறுத்தப்படுவார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்,

சிங்கள ஊடகம் வெளியிட்ட தகவலை அவர் மறுத்ததுடன், வட மாகாண சபை தேர்தல் நடத்தப்படவுள்ளது என்பதை அரசாங்கம் உறுதியாக அறிவிக்கும் வரையில் எதனையும் கூற முடியாது என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்த வருடம் இடம்பெறக் கூடிய வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் எனினும், அதன் வேட்பாளர்கள் குறித்த தீர்மானங்கள் ஏவையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, வட மாகாண சபை தேர்தல்களுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி தற்போதே ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு ஒன்று இந்த வாரம் வட மாகாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்கிறது.

வடக்கில் பல்வேறு தரப்பினருடன் சந்திப்பை ஏற்படுத்தி, இந்த தேர்தல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த வருட இறுதிக்குள் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. (எ-11)

# இந். அகதிகள் முகாம்களில் இருந்து தப்பிச் செல்லும் இலங்கை அகதிகள்

## நடுக் கடலில் தத்தளித்த 120 பேர் கைது

இந்தியாவில் அகதிகள் முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வேளை நடுக்கடலில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் தென்காசி, கடைய நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 120 பேர் படகில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றனர்.


நாகப்பட்டினம் அருகே சர்வதேச கடல் எல்லையில் சென்றபோது அவர்கள் பயணம் செய்த படகு பழுதானதால், நடுக் கடலில் தத்தளித்தனர்.

இது குறித்து செய்தி அறிந்த இந்திய கடலோரக் காவல் படையினர், அவர்களை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை கடலோர காவல் படையினர், சட்டவிரோத பயணிகள் அனைவரையும் சர்வதேச கடல் எல்லையில் மீட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்தன. (எ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இனிய பொருள்



அங்கிங் கெனாம லெங்க மானபொருள்
அறிவுடை யோர்தேடி யறியும் பொருள்
கங்குல் பகலில் லாமற் காணும்பொருள்
கைகுவிப்பார்க் குய்யவழி காட்டும் பொருள்
பங்கிலே பாதிப்பெண்ணாய்த் தோன்றும் பொருள்
படர்சடைமேற் கங்கைதிங்கள் வைத்தபொருள்
எங்கும்நாம் சென்றினுந் தேடும் பொருள்
இலங்கையிலே பொலிந்திருக்கு மினிய பொருளே

# அற்புதங்கள் செய்யும் இறை இரக்கத்தை நம்புவோம்; சந்தேகக் கல்லறைகளிலிருந்து உயிர்பெற்றெழுவோம்

## பரமபிதா காட்டிய பாதை

உயிர்ப்பு விழாவுக்கு அடுத்து வரும் ஞாயிறை இறை இரக்க ஞாயிறு என்று கத்தோலிக்கர் அழைப்பர். இரண்டாம் ஜான்பால் திருத்தந்தையாக இருக்கும் போது இரண்டாயிரம் ஆண்டு உயிர்ப்பு விழாவுக்கு அடுத்துவரும் ஞாயிறை இறை இரக்க ஞாயிறு என்று உருவாக்கினர். இறைவனின் இரக்கம், கருணை இவற்றை வாழ்வின் பல சூழல்களில் பல நிலைகளில் நாம் உணர்ந்திருக்கின்றோம். சிறப்பாக நம் வாழ்வில் ஏற்படும் பல்வேறு சந்தேகப்புயல்களை இறைவன் அடக்கி மனதில் அமைதியை உருவாக்கும் நேரத்தில் இந்த இறை இரக்கத்தின் சிகரத்தை நாம் தொட்டிருக்கின்றோம்.


சந்தேகமும் அச்சமும் நம் வாழ்வைச் சூழ்ந்தாலும் இறை இரக்கத்தை நம்பி வாழ்ந்தால் உன்னத நிலையை அடைய முடியும் என்பதற்கு வரலாறு பல நிகழ்வுகளை நமக்கு காட்டுகின்றது. இதற்கு நேர்மாறாக தங்களைத் தாங்களே இயக்கிக்கொள்ளமுடியும். இறைவனோ, வேறுஎந்தச் சக்தியோ தங்களை எதுவும் செய்துவிடமுடியாது என்று ஆரம்பித்த எந்த நிகழ்வும் துயரத்தின் ஆழத்தில் புதைந்து விடுகிறது என வரலாறு நமக்குக் காட்டுகின்றது. இதற்கு ஒரு நிகழ்வை இங்கு குறித்துக் காட்டுவது நன்று. இது நடந்தது 101 ஆண்டுகளுக்கு முன்.

1912ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி நள்ளிரவில் அட்லாண்டிக் கடலில் மிதந்து சென்ற பனிப்பாறையும் மூன்று ஆண்டுகளாக மனிதர்கள் உருவாக்கிய செயற்கையான டைட்டானிக் கப்பலும் மோதிக் கொண்டன. டைட்டானிக் தன் கன்னிப் பயணத்திற்காகப் புறப்பட்டபோது கடவுளே நினைத்தாலும் இந்தக் கப்பலை மூழ்கடிக்க முடியாது என்று பெருமையுடன், இறுமாப்புடன் புறப்பட்ட அந்தக் கப்பல் ஐந்தாம் நள்ளிரவு பனிப்பாறையில் மோதியது. மறுநாள் அதிகாலை 2 மணியளவில் அந்தக் கப்பல் இரண்டாகப் பிளந்து நடுக்கடலில் மூழ்கியது. அந்தக் கப்பலில் பயணம் செய்த 2 ஆயிரத்து 223 பேரில் ஆயிரத்து 517 பேர் அந்த இருளில், குளிரில், கடலில் உயிர்துறந்தனர். உலகிலேயே நகர்ந்து செல்லக்கூடிய மிகப்பெரிய அரண்மனை என்றெல்லாம் பறைசாற்றப்பட்ட இந்தக்கப்பல் தனது முதற்பயணத்திலேயே சமாதியானது. எதுவும் எவ்வகையிலும் தங்களைத் தீண்டமுடியாது என்ற இறுமாப்பு ஏற்பட்டால் வாழ்வில் என்ன நிகழக்கூடும் என்பதை சுட்டிக்காட்டுகின்றதே இச்சம்பவம். கப்பலை உருவாக்கியவர்கள், அதனை இயக்கியவர்கள் எல்லோருக்கும் அந்தக் கப்பலின் சக்தி மீது அளவுக்கு மீறிய ஆபத்தான நம்பிக்கை இருந்தது. இதைத் தான் நாம் இங்கு சிந்திக்க வேண்டும்.

வாழ்வில் நம்பிக்கை தேவைதான். நம்பிக்கையற்ற வாழ்வு நடுக்கடலில் தத்தளிக்கும் படகுபோல் இருக்கும் என்பார்கள் பலர். ஆனால் எதன்மேல் நம்பிக்கை கொள்வது, எவ்வகையான நம்பிக்கை கொள்வது என்பதையும் நாம் தீர ஆராய வேண்டும். நம்பிக்கையை வளர்க்கும் இந்தக்காலத்தில் நம்பிக்கையிழந்து நடுக் கடலில் சந்தேகப் புயலில் தத்தளித்த சீடர்களைப்பற்றிய ஒரு நிகழ்வு இன்று நமது நற்செய்தியாகின்றது. சந்தேகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமா சுட்டிக்காட்டப்படுகிறார்.

தோமா **இயேசுவின் கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்** என்று சந்தேகத்தை வெளிக்காட்டுகின்றார். கல்வாரியில் இயேசு இறந்ததை நேரடியாக பார்த்திருந்தால் அந்தக் கல்வாரி பயங்கரத்திற்குப் பின் ஒன்றுமேயில்லை என்ற முடிவுக்கும் நாமும் வந்திருப்போம். இயேசுவிடம் கேட்க முடியாமல் மனதுக்குள் ஏனைய சீடர்கள் புதைத்து வைத்திருந்த சந்தேகத்தைத்தான் தோமா வாய்விட்டுக் கேட்டார்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை நம்பி மூன்றாண்டுகள் வாழ்ந்தவர்கள் இந்தச் சீடர்கள். அந்த மூன்று ஆண்டுகளில் இயேசுதான் அவர்களது உலகம் என்றுஆகிப்போன நேரத்தில் அந்த உலகம் ஆணிவேரோடு பறிக்கப்பட்டு சிலுவையில் தொங்க விடப்பட்டு இயேசுவின் மரணம் அவர்கள் வாழ்வில் விட்டுச்சென்ற அந்த வெற்றிடத்தை சந்தேகமும் பயமும் நிரப்பி விட்டன. இதுவரை அவர்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்த நம்பிக்கை தொலைந்து போனது. கருணையே வடிவான இயேசு சீடர்களின் சந்தேகங்களுக்கு தோமாவின் சந்தேகங்களுக்கு கூறிய பதில் இதுதான். **இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு! உன்கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்.**



**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

**நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்** என்றார். இந்த அழைப்பின்மூலம் தோமாவின் மனதை இயேசு மிக ஆழமாகத் தொட்டார். எனவே அந்த மிக அழகான மறையுண்மையை தோமா கூறினார்.

**நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!** இயேசுவைக் கடவுள் என்று கூறிய முதல் மனிதப் பிறவி தோமாதான். அவநம்பிக்கையை நீக்கி நம்பிக்கை கொண்ட தோமா இறுதிவரைக்கும் இயேசுவில் நம்பிக்கையுடன் வாழ்ந்து இறந்தார். புனிதரானார். அறிவுத்திறனுக்கு எட்டாத இறைவனை நம்பும்போது இறைவனின் இரக்கத்தை நம்பும்போது நம் வாழ்வில் உருவாகும் சந்தேகப்புயல்கள் தானாகவே அடங்கும். சந்தேகத்தில் புதையுண்ட நாம் கல்லறைகளில் இருந்து உயிர்பெறுவோம். இந்த அற்புதங்களை ஆற்றும் இறை இரக்கத்தை நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் உணர இயேசுவை என் கடவுள், என் ஆண்டவர் என ஏற்றுக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவாக் அபாயகரமானவர்

**- சுனில் நரைன்**



கொல்கத்தா அணியில் இடம் பெற்றிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன், தன்னுடைய மாயாஜால பந்துவீச்சுக்களால் துடுப்பாட்ட வீரர்களை திணறடித்து வருகிறார். டில்லி அணிக்கு எதிரான போட்டியில் 4 விக்கெட் வீழ்த்திய சுனில் நரைன், இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த வெற்றிக்குப் பின் அவர் கருத்துத்தெரிவிக்கையில்,

நான் பந்து வீசியவர்களில் ஷேவாக் மிகவும் அபாயகரமான துடுப்பாட்ட வீரர். சூழ்நிலையைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார். எப்போதும் பந்து வீச்சாளரை பின்னுக்கு தள்ளி விடுவார்.

உலகத்திலேயே மிகவும் அபாயகரமான துடுப்பாட்ட வீரர் இவர்தான்.

மற்றைய தலைவர்களை விட கம்பீர் மிகவும் பயனளிக்கும் வகையில் நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பார். என்னை கையாளுவதில் அவர் மிகவும் சிறந்த தலைவர். நான் சச்சின் டெண்டுல்கருக்கு பந்து வீசியிருக்கிறேன். வாய்ப்பு கிடைத்தால் கவாஸ்கருக்கு பந்து வீச விரும்புகிறேன். இவ்வாறு அவர கூறினார்.

## இன்றைய ஆட்டங்கள்

PUNE WARRIORS INDIA Vs KINGS XI PUNJAB

பி.ப 4 மணி

SUNRISERS HYDERABAD Vs ROYAL CHALLENGERS BANGALORE

இரவு 8 மணி

# சேவாக் நீக்கம்

எதிர்வரும் ஜுன் 6ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான 30 பேர் கொண்ட இந்தியக் குழாமில் சிரேஷ்ட வீரர்களான விரேந்தர் சேவாக், சகீர் கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் சேர்க்கப்படவில்லை.

இதன்படி இவர்கள் மூவரும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் எதிர்காலங்களில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அருகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அண்மைக்காலத்தில் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தியிருக்காத சிரேஷ்ட வீரர்களான விரேந்தர சேவாக், சகீர் கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் சேர்க்கப்படாததோடு, புதுமுக வீரர்களாக உன்முக்ட் சந்த்,.கெடார் ஜாதவ், ஜலாஜ் சக்சேனா, பர்வேஸ் றசூல், ஈஸ்வர் பாண்டே, சித்தார் கௌல் ஆகிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

**அணி விபரம் :** முரளி விஜய், ஷிகர் தவான், கம்பிர், உன்முக்த் சந்த், கோஹ்லி, யுவராஜ் சிங், ரெய்னா, ரோகித் சர்மா, மனோஜ் திவாரி, ரகானே, ராயுடு, ஜாதவ், தோனி, சகா, தினேஷ் கார்த்திக், அஷ்வின், அமித் மிஸ்ரா, ஜடேஜா, சக்சேனா, பர்வேஸ் ரசூல், இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், டிண்டா, உமேஷ் யாதவ், சமி அகமது, இர்பான் பதான், வினய் குமார், பிரவீண் குமார், ஈஸ்வர் பாண்டே, சித்தார்த்.



# அரையிறுதியில் செரினா

பேமிலி சர்க்கிள் கிண்ண டெனிஸ் தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்காவின் செரினா முன்னேறினார்.

அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., பேமிலி சர்க்கிள் கிண்ண டெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் செரினா, செக் குடியரசின் லூசியா சபரோவாவை சந்தித்தார். இதன் முதல் செற்றை 6-4 என கைப்பற்றிய செரினா, இரண்டாவது செற்றையும் 6-1 என எளிதாக தன்வசப்படுத்தினார். முடிவில், அமெரிக்காவின் செரினா 6-4, 6-1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் வீனஸ், சக வீராங்கனை மடிசனை 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வென்றார். இதன் மூலம், அரையிறுதியில் செரினா, தனது சகோதரியான வீனசை எதிர்கொள்கிறார்.

மற்றொரு போட்டியில் சேர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச், கனடாவின் யூஜினை 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தினார்.

சுவிட்சர்லாந்தின் ஸ்டெபேனியா, டென்மார்க்கின் வோஸ்னியாக்கியை 6-3, 4-6, 3-6 என்ற செற் கணக்கில் வென்றார்.

## சென்னைக்கு பலம்

'மைக் ஹஸி சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டதால் அவர் இந்த ஐ.பி.எல். போட்டியில் எல்லா ஆட்டங்களிலும் ஆட முடியும். இது சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு உதவிகரமாக இருக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங்.

மைக் ஹஸி - முரளி ஜோடி நன்றாக ஓட்டங்களை குவித்திருக்கிறது. 20 ஓவர் போட்டியில் ஏற்றம், இறக்கம் இருக்கும். ஆனால் அது எங்களை பொறுத்தமட்டில் நன்றாகவே அமைந்திருக்கிறது. அல்பிமோர்கல் அணியில் இணையும் வரை உள்ளூர் வேகப்பந்து வீச்சாளருக்கு வாய்ப்பு அளிக்கப் படும். உள்ளூர் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். எங்கள் அணியில் 7 நல்ல இந்திய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். இதனால் எங்களது வெற்றி நம்பிக்கை மேலும் அதிகரித்திருக்கிறது' என்றார்.

மும்பை இந்தியன்ஸ் அணி பயிற்சியாளர் ஜான்ரைட் கூறுகையில், 'முதல் போட்டியில் நாங்கள் பெங்களூர் அணியிடம் கண்ட தோல்வியை மறந்து இனி வரும் ஆட்டங்களில் வெற்றி பெற முழு கவனம் செலுத்தி வருகிறோம். எங்கள் அணியில் திறமையான வீரர்கள் பலர் உள்ளனர். இதில் வெற்றிக்குரிய சரியான அணியை தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வருகிறோம்' என்று தெரிவித்தார்.

# 3 போட்டிகளையும் இழந்தது பங்களாதேஷ்

பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான கடைசி இருபது ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது இந்தியா.

இதன்மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட இருபது ஓவர் கிரிக்கெட் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றி பங்களாதேசை வெள்ளையடித்தது.

முன்னதாக இந்தியா முதல் ஆட்டத்தில் 49 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்திலும் பங்களாதேசை தோற்கடித்திருந்தது.

குஜராத் மாநிலம் வடோதராவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடைசி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 123 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக மந்தனா 39, மேஷ்ராம் 22, கொர் 20ஓட்டங்களை எடுத்தனர்.


பங்களாதேஷ் தரப்பில் சல்மா, கோஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வி கண்டது.

அந்த அணியில் அதிகபட்சமாக லதா மான்டல் 32 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியத் தரப்பில் பூனம் யாதவ் 4 ஓவர்களில் 21 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையை வென்றது மும்பை



பரபரப்பான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 9 ஓட்டங்களால் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற ஐ.பி.எல் சீசனின் 6 ஆவது இருபது–20 கிரிக்கெட் திருவிழாவின் 5–வது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி–மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.


இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் துடுப்பாட்டம் செய்ய தீர்மானித்தார்.

இதனையடுத்து களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியுற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் கரன் பொலாட் தெரிவானார்.

# டில்லியை வீழ்த்தியது ராஜஸ்தான்



டில்லி அணிக்கும் ராஜஸ்தான் அணிக்கும் இடையிலான விறுவிறுப்பான போட்டியில் ராஜஸ்தான் அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐபிஎல் சீசன் 6 இல் நேற்று 4வது லீக் போட்டி டில்லியில் நடைபெற்றது.

இதில் டில்லி –ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

பெரேரா –ரஹானே ஆரம்ப ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர். 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெரேரா ஆட்டம் இழந்தார்.

அடுத்து ரஹானேயுடன் ராவிட் ஜோடி சேர்ந்தார். இருவரும் டில்லியின் பந்து வீச்சை விளாசித் தள்ளினார்கள்.

20 ஓவர்கள் நிறைவில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்களை எடுத்தது.

டில்லி தரப்பில் உமேஷ் யாதவ் சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட் வீழ்த்தினார்.

166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி களம் இறங்கியது.

டில்லி அணியில் வோனர் மட்டும் சிறப்பாக ஆடி 77 ஓட்டங்களைப் பெற்றார்.

ஏனையவர்கள் சோபிக்காத நிலையில் டில்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் 160 ஓட்டத்தினை மாத்திரமே பெற்று 5 ஓட்டத்தினால் தோல்வி அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ராஜஸ் தான் அணியின் அணித்தலைவர் ராவிட் தெரிவானார்.

## விசாரணைக்கு உத்தர...

மேற்கொள்ள அரசாங்கம் தயக்கம் காட்டிவருவதாக தெரியவருகின்றது.

மாத்தளை மருத்துவமனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 154பேரின் எலும்புக் கூடுகளும் 1987 ஆம்ஆண்டுக்கும் , 1990 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் புதைக்கப் பட்டவை என விசாரணையின்போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இக்காலப் பகுதியில் யார் ஆட்சியில் இருந்தாலும், இலங்கையில் நீதிக்குப் புறம்பாக இடம்பெற்ற எல்லாப் படுகொலைகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினார் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். எனினும் இது குறித்த விசாரணைகளுக்கு உத்தரவிட அரசாங்கம் தயக்கம் காட்டி வருகின்றது.

இதுவரை எவ்வித முடிவையும் எடுக்க வில்லை என்று தெரிவித்துள்ள மூத்த அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா படைத்துறை அமைச்சரான மகிந்த ராஜபக்ஷவே இது தொடர்பில் முடிபு எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படுகொலைகள் இடம்பெற்ற காலப் பகுதியில் மாத்தளையில் நிலை கொண்டிருந்த படைத்தரப்பின் கஜபா படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாகவும், மாத்தளை மாவட்ட படைதரப்பு இணைப்பு அதிகாரியாகவும் கோத்தபாய ராஜபக்ஷவே பணியாற்றியிருந்தார்.

இதனாலேயே இந்தப்படுகொலைகள் தொடர்பில் நீதியான விசாரணைகளுக்கு உத்தரவிட இலங்கை ஜனாதிபதியும், படைத் துறை அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ தயக்கம் காட்டி வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (செ–11)

## பாதுகாப்பை மேலும்...

னிக்கும்,வெளிவிவகாரச் செயலாளர் கருணா திலக அமுனுகமவுக்கும் இடையில் கொழும்பில் இடம் பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சு வார்த்தையின்போதே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இதன்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான தீவிரவாத முறியடிப்பு, நாடு கடந்த குற்றங்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கான பயிற்சிகள் தொடர்பிலான இரு தரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன்,இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளையும் மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும் இணக்கம் காணப் பட்டுள்ளது.

அதே வேளை, பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் இவ்விரு நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளர்கள் ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ–11)

## சென்னைப்...

அணியும் மோதின.

இந் நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடிய நுவான் குலசேகரவும் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடிய லசித் மலிங்கவும் கலந்து கொள்ளவில்லை.

சென்னையில் நடைபெறும் இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்ளக் கூடாது எனவும் கலந்து கொண்டால் போட்டியை நடத்த விட மாட்டோம் எனவும் மாணவர் அமைப்புகள் எச்சரிக்கை விடுத்த நிலையில் அவர்கள் கலந்து கொள்ளவில்லையென தெரிவிக்கப் பட்டது. (எ–11)

## ஈழத்தமிழர்...

இந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக கூறப்படும் கருத்துக்கள் தவறானவை என்று கூறியுள்ள அவர், தமிழக மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மத்திய அமைச்சர் வாசனை சந்தித்த ராகுல் காந்தி இதனை தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இலங்கைத்தமிழர்விவகாரம்குறித்துமுழுமையான அறிக்கையை அளிக்குமாறு அவர் வாசனைக் கேட்டுள்ளார். (எ–11)

## இலங்கையில் சித்திர...

உத்தேசித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 11ஆம் திகதி குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடுகடத்தப்படவுள்ளனர் என அறியப்படுகிறது.

இலங்கையில் தமிழர்கள் மீது அடக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்படவுள்ளதாகவும் இதனால் குறித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை நாடுகடத்துவது ஆபத்தாக அமையக் கூடும் எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

குறித்த 11 பேர் உள்ளிட்ட 46 புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க பயணித்துள்ளதாகவும் படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவும் பயணம் இடை நடுவில் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பயணம் தடைப்பட்டவர்கள் டுபாயில் அடைக்கலம் கோரியதாக குறிப் பிடப்படுகிறது. இந்த 46 பேரில் 39 பேர் புகலிடக் கோரிக்கையாளர்களாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் அங்கீகரித்துள்ளது. (எ–11)

## இந்தியப் படையின் மனித...

பொன்றை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இது தொடர்பிலான தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சொத்து இழப்புகள் தொடர்பிலான கணக்கெடுப்பை மேற்கொள்ள அரசாங்கம் முடிபு செய்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகி, 6 மாதங்களுக்குள் முடிபடையும் என சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தலைவர் சி.ஏ.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 1980களின் இறுதியில் இடம் பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது பாதிக்கப்பட்ட பொலன்னறுவ மாவட்டத்தின் பகுதிகள், வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற இடங்களில் இது தொடர்பிலான ஆய்வுகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதையடுத்து 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கும், 1990ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கும் இடையிலான காலப் பகுதியில் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பிலான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய இயக்கத்தவர்களால் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் இயக்கங்களுக்குள்ளும் இயக்கங்களுக்கு இடையிலும் இடம் பெற்ற மோதல்களின் போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலான விபரங்களும் இந்தக் கணக்கெடுப்பின்போது கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

1980இன் ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற இந்தியத் தலையீட்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்களின் விபரங்களை வெளிப்படுத்துவதே இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

இதனை அடிப்படையாக வைத்து போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து நம்பகமான – சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தியா தன் மீது [illegible] குறைக்க அர[illegible] படுகிறது. (எ–11)

## அரசியல் தலையீடு...

களின் அடிப்படையில் செயற்பட்டு வருவதாகவும் சந்தேகம் அல்லது எடுகோள்களின் அடிப்படையில் செயற்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கஹாவத்தை கொலைகள் மாலக சில்வா, ரெஹான் பெர்ணாண்டோ மற்றும் ஹசித மடவல கொலைச் சம்பவம் போன்ற வழக்குகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு விமர்சனம் வெளியிடப் பட்டுள்ளது. சாட்சியங்கள் ஆதாரங்களின் அடிப்படையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அழுத்தங்கள் அல்லது வேறும் தலையீடுகள் காரணமாக வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

34ஆண்டுகளாக நீதித்துறையில் கடமையாற்றி வருவதாகவும் எந்த சந்தர்ப்பத்திலும் பக்க சார்பாக செயற்பட்டதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ–11)

## இலங்கைத் தூதுவர்...

என்பது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு ஆலோசித்து வருகிறது.

குறிப்பாக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் விவகாரங்களை கையாளும் மேலதிகச் செயலாளராக பணியாற்றும் வை.கே.சிங் இப்பதவிக்கு பொருத்தமானவராக இருப்பார் எனக் கருதப்படுகின்றது.

அதேவேளை இந்தியாவின் மூத்த ராஜதந்திரி ஒருவரை நியமிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாக அறியக்கிடைக்கின்றது.

அவ்வாறாயின் சீனாவுக்கான இந்தியத் தூதுவராக தற்போது உள்ள எஸ்.ஜெய்சங்கர் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

சீனாவுக்கான தூதுவராக உள்ள ஜெய்சங்கர் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட்டால் மலேசியாவுக்கான இந்தியத் தூதுவராக விஜய் கோக்லே சீனாவுக்கான தூதுவராக நியமிக்கப்படலாம் என தெரியவருகிறது.

இந்தியாவின் அடுத்த வெளிவிவகார செயலாளர் பதவிக்கான போட்டியில் முன்னணியில் இருப்பவர்களில் ஜெய்சங்கரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ–11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுமியை கடத்த எடுத்த...

வீட்டுக்கு செல்வதற்காக நேற்று மதியம் பேருந்தில் யாழ்.நகரினை வந்தடைந்தனர். இவர்களில் தாயார் மற்றும் 4 வயதுடைய சிறுமியும் மற்றுமொரு மகளும் வந்துள்ளனர்.

பேருந்து யாழ்.நகர பஸ் நிலையத்தை வந்தடைந்ததும் குறித்த இரு சிறுமியர்களினையும் அவரது தாயார் பேருந்திலிருந்து முதலில் இறக்கி விட்டு பின்பு பஸ்ஸில் வைக்கப்பட்ட உடைமைகளை எடுப்பதற்கு ஆய்த்தமானார்.

இச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திய இனந்தெரியாத நபர் ஒருவர் குறித்த இரு சிறுமிகளில் 4 வயது சிறுமியினை கையில் பிடித்து இழுத்து கடத்திச் சென்றுள்ளார்.

தாயார் பஸ்ஸினை விட்டு இறங்கிய போது தனது பிள்ளை கடத்திச் செல்லப்படுவதை அவதானித்து உடனடியாக சுக்குரல் இட்டுள்ளார்.

உடனே அங்கிருந்த பொது மக்களினாலும் யாழ். நகரில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரினாலும் குறித்த கடத்தல்காரர் கலைத்து பிடிக்கப்பட்டார்.

பிடித்த பின்னர் சிறுமியினை பாதுகாப்பாக அந் நபரிடமிருந்து மீட்டதோடு பொது மக்கள் கடத்தல்காரரை தாக்க முயன்றுள்ளனர். எனினும் பொலிஸார் அதனைத் தடுத்து அவரை கைது செய்து யாழ்.பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். இக் கடத்தல் சம்பவத்தினால் யாழ்.நகரம் அதிர்ச்சியில் உறைந்து காணப்பட்டது. (எ-4)


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனையில்....

உங்கள்
தில்லையம்பதி மோட்டோர்ஸ்
**Thillaiyampathy Motors**

Power Tools. Air Comporssors,
Battooy Charges, Generator.
hard tools, High porssure was hers.
Hilsts pipe Bendors and Jacks.
Mortors, Water pumpers.
Welding plasts.
Tools and Accessories.
Router Bit set
WOOD Working machine

வாடிக்கையாளர் நன்மை கருதி எமது வியாபார நிலையம் சனி. ஞாயிறு கிழமைகளில் முழுநேரம் திறந்திருக்கும்.
06-13 வரை மட்டுமே!

114,Stanley Road,
Jaffna. (மக்கள் வங்கிக்கு முன்பாக)
021 225710,
0777666371,0776733780



25வது வருட கல்விச் சேவையில்
புதிய
நாவலர்
கல்வி நிலையம் (C-2898)
O/L DAY CLASS
ஆரம்பம்:10.04.2013 புதன் காலை 8.00 மணி
O/L DAY CLASS தனித்துவமான கல்வி நிறுவனம்



தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொதிகள்அனுப்பும் காரியாலயத்திற்கு பெண் பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:-
பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P. 077 3818799 (சி-2894)



A/L - 15
(கலை, வணிகம்)
ஏப்ரில் 13
8 மணி

B.S.பசில்
S.S.சிறி
சந்திரசேகர்
ஜோதீஸ்வரன்
பாபு
இளங்கோ
பத்மன்
மங்களேஸ்
பவன்
சசிக்குமார்
மதுர்ஷன்
ஜோன்ஷன்
D.Sam

DMI Jaffna



தற்போது யாழ் நகரில்...
LLB (Hons) in
LAW
from UNIVERSITY OF WOLVERHAMPTON
edexcel

Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747
Macro Ads (சி-2892)



Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2890)

WESTERN UNION
MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062



மலிவு விற்பனை
வீட்டுப் பாவனைக்குரிய மின்சாதனப் பொருட்கள் அனைத்தினையும் ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
காலம் :- 01.04.2013 - 13.04.2013 வரை
சுபகாஷ் சென்ரர்
789, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
021 222 8540
(F-2843)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org